


அன்பளிப்பு:
திருவையாறு – தர்மசம்வர்த்தனி
வண்ணப்படம்

# கல்கி

KALKI 1.4.2001 ரூ. 5.00

தேர்தல்
ஸ்பெஷல் – II

ளர்ந்துவிட்ட
இளைஞர்!

## ம.தி.மு.க. பார்வை என்ன...?

# முகவிலையினும் மேலான ஓர் அன்பளிப்பை அவளுக்கு வழங்குங்கள்

UTI
MAHILA UNIT
SCHEME



பாரதப் பெண்மணிகளின் ஆதாயத்திற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட யூடிஐ மஹிளா யூனிட் ஸ்கீமை வழங்குவதில் யூடிஐ ஆனந்தமடைகிறது. **18 வயது ஆன எந்த ஒரு பெண்ணும் அவளது சொந்த சேமிப்புகளை இதில் முதலீடு செய்ய முடியும். அல்லது பிறந்தநாள் / திருமணம் / ஆண்டு நிறைவு நாள் போன்றவற்றின் போதோ அல்லது எந்த ஒரு பண்டிகை–வைபவங்களின் போதோ அவளது உறவினர்கள் அல்லது நண்பர்கள் போன்றோரிடம் இருந்து இந்த திட்டத்தின் யூனிட்களை அன்பளிப்பாக பெறலாம்.**

அம்சங்கள் :

- 18 வயதான இந்தியாவில் வசிக்கும் பெண்மணி அல்லது என்.ஆர்.ஐ பெண்மணி தனது பெயரில் முதலீடு செய்ய முடியும். அல்லது இந்தியாவில் வசிப்பவர் அல்லது வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர் அல்லது ஒரு டிரஸ்ட் / நிறுவனம் / ஓசிபி போன்றவற்றில் இருந்து அவளது பெயரில் வாங்கப்படும் எந்த ஒரு தொகைக்குமான குறைந்தபட்சம் ரூ.5000/-த்திற்கான யூனிட்களை அன்பளிப்பாக பெற முடியும்.

  மேலும் அன்பளிப்பு யூனிட்கள் முன்னரே நிர்ணயித்த விலைமதிப்பில் ரூ.1100/- அல்லது ரூ.2100/- அல்லது ரூ.5100/- அல்லது அவற்றின் மடங்குகளிலும் / கலவையிலும் கிடைக்கின்றன.

- குறைந்தபட்சம் கடன் பத்திரங்களில் 70% மற்றும் அதிகபட்சம் ஈக்விட்டிகளில் 30% முதலீடு செய்யும் காலவரம்பற்ற கடன் திட்டம்.
- துவக்க அளிப்பு காலத்தில் விற்பனை ரூ.10/- முகவிலையில்.
- பண்டிகைக்கால ரொக்க தேர்வு : தேர்ந்தெடுத்த பண்டிகை நெருங்கிவரும் காலகட்டத்தில் என்.ஏ.வியின் 99% மதிப்பில் வருடத்திற்கு ஒரு முறை யூனிட்கள் மதிப்புயர்வு இருப்பின் அதனளவுக்கு மறுகொள்முதல் செய்து பணம் வழங்கப்படும்.
- வளர்ச்சி தேர்வு : இதன் கீழ் விருப்பத்துக்கு தகுந்தபடி என்.ஏ.வி அடிப்படையிலான விலைகளில் மறுகொள்முதல் செய்து கொள்ள முடியும்.

விண்ணப்பப் படிவம் / வழங்கு பத்திரம் போன்றவற்றுக்கு தயவு செய்து உங்களுக்கு அருகிலுள்ள யூடிஐ கிளை அலுவலகம் / யூடிஐபிசி அல்லது முக்கிய பிரதிநிதியை / முகவரை அணுகவும்.

## யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

இந்தியாவின் மிகப் பெரிய மியூச்சுவல் ஃபண்ட்

13, சர் விட்டல்தாஸ் தாக்கர்சி மார்க், நியூ மெரைன் லைன்ஸ், மும்பை 400 020.
தொலைபேசி : 203 1876. இணையதளம்: www.unittrustofindia.com

**துவக்க அளிப்பு சர்வதேச பெண்கள் தினமான 8-3-2001 முதல்**

[illegible]

**தென் மண்டல அலுவலகம்** : சென்னை தொ.பேசி: (044) 5210347. **கிளை அலுவலகங்கள்**: சென்னை தொ.பேசி: 5210356, 5230985. • கோயம்புத்தூர் தொ.பேசி: 214973. • மதுரை தொ.பேசி: 738186. • திருச்சி தொ.பேசி: 760060. **ஃபிரான்சைஸ் அலுவலகம்**: சேலம் தொ.பேசி: 416414. **சிறூர் கலெக்ஷன் மையங்கள்**: குன்னூர் தொ.பேசி: 31037. • கடலூர் தொ.பேசி: 21712. • தர்மபுரி தொ.பேசி: 61012. • திண்டுக்கல் தொ.பேசி: 432244. • ஈரோடு தொ.பேசி: 252494. • காஞ்சிபுரம் தொ.பேசி: 20076. • காரைக்குடி தொ.பேசி: 22277. • மயிலாடுதுறை தொ.பேசி: 26739. • நாகர்கோவில் தொ.பேசி: 40274. • பாண்டிச்சேரி தொ.பேசி: 339080. • ராஜபாளையம் தொ.பேசி: 21360. • தஞ்சாவூர் தொ.பேசி: 31374. • திருநெல்வேலி தொ.பேசி: 339567. • தூத்துக்குடி தொ.பேசி: 325621 **யூடிஐ பாங்க்**: அடையார் தொ.பேசி: 4464442/43/44. • அண்ணாநகர் தொ.பேசி: 6289045. • டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை தொ.பேசி: 8231085. • ராஜா அண்ணாமலைபுரம் தொ.பேசி: 2492184/85/86 • தி.நகர் தொ.பேசி: 8239134–35.

**எய்ட்ஸை தடுப்பீர் - அனைவரையும் நேசிப்பீர்.**

(C)07-1-2001 C TAM B

**கஜினி முகமதுவாகத் தொடர்ந்த நம் தொலைபேசித் தொந்தரவில் நெகிழ்ந்து அல்லது நொந்துபோய்ப் பேச ஒப்புக் கொண்டார் ராமராஜன்.**



"இனிமேல் இதைப் பேசி என்ன ஆகப் போகிறது என்றுதான் பேட்டிகளைத் தவிர்த்தேன்.

எனக்கும் நளினிக்கும் ஒத்துப் போகாததற்குக் காரணமே, என்னால் சினிமாக்காரனாக மாற முடியாததுதான். சினிமா எனது தொழில். அதை ஏழு வயதிலிருந்து என் மூச்சுக்காற்றாக சுவாசிக்கிறேன். தியேட்டரில் டிக்கெட் கிழித்து விட்டு சினிமாவுக்கு வந்தவன் நான். சொந்த வாழ்க்கையில் ஆசாபாசங்கள் உள்ள ஒரு சராசரி மனிதனாக வாழ விரும்பினேன். அதனால்தான் திருமணத்திற்கு முன்பே நளினியிடம் நூறு முறை கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டேன். திருமணத்திற்குப் பிறகு நடிக்கமாட்டேன் என்று ஒப்புக் கொண்டு அதை மீறத் துடித்ததால்தான் நாங்கள் பிரிந்தோம். மணவிலக்கிற்குக் காத்திருந்து, பிறகாவது அவர் நடித்திருக்கலாம். வக்கீல் நோட்டீஸ் வாங்கிக் கொண்ட அன்றே மேக்-அப் போட்டுக் கொண்டார். மணவிலக்கு பெற்ற அன்று படப்பிடிப்பு தளத்திலிருந்து மேக்-அப்போடுதான் கோர்ட்டுக்கு வந்தார். சினிமாத் தொழிலில் ஏற்ற இறக்கம் இயல்பானது. ரிக்ஷா இழுத்தாவது கஞ்சி ஊற்றுகிறேன் என்று கதறினேன். கடைசியில் அவர்தான் ஜெயித்தார். எங்கிருந்தாலும் அவருக்காகப் பிரார்த்திப்பேன். இப்போதைக்கு இதயபூர்வமாக என்னால் செய்யக் கூடியது அது ஒன்றுதான்.

***ஆனால் உங்களது அதிதமான ஜோதிட நம்பிக்கையும், மூடநம்பிக்கையும்தான் இந்தப் பிரிவுக்குக் காரணம் என்று சொல்லியிருக்கிறாரே?***

நான் நாத்திகன் அல்ல. விதியை மதிப்பவன். ஆனால் மூடநம்பிக்கையை மிதிப்பவன். இது என் மனசாட்சிக்குத் தெரியும்.

***அடுத்து?***

இடைவேளை முடிந்துவிட்டது. 'சீறிவரும் காளை' படத்துடன் எனது ரசிகர்களைச் சந்திக்கப் போகிறேன்."

*பட ரீலில் முடிந்த பிறகு, கடைசி தேர்தல் பிரசாரத்துக்குக் கிளம்புகிறாராம் ராமராஜன். பிரசார களத்தில், ஒரே மேடையில், நளினியும், ராமராஜனும் மைக் பிடித்துப் பேசினால் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை. அவரும் அம்மாவிடம்தானே அடைக்கலம் புகுந்திருக்கிறார்!*

**- ஸ்ரீ சக்கரம்**

படம் : **ராஜன்**

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

# இடைவேளை முடிந்தது!



• ஜே.எம். ஆரூண்

# ஐக்கிய ஜமாத்துக்கு மூன்று!

**க**லைஞருடன் தோழமையுடன் இருக்கும் கூட்டணி கட்சிக்காரர்களே அவரிடம் சீட்டுகள் பெறுவதற்கு போராடிக் கொண்டிருக்கும் நிலையில், ஜே.எம். ஆரூண் தலைமையில் இருக்கும் தமிழக முஸ்லீம் ஐக்கிய ஜமாத் மூன்று இடங்கள் பெற்று விட்டதைப் பற்றி வியப்புடன் பேசுகிறார்கள் அரசியல் புள்ளிகள். ஆரூணைச் சந்தித்தோம்...

**உங்களுடையது அரசியல் கட்சியா, அமைப்பா?**

ஒரு சமுதாய விழிப்புணர்வு இயக்கம்.

**இலக்கிய நோக்கம்?**

மனித நேயத்தைக் காக்க, மத நல்லிணக்கத்தை வளர்க்க.

**மத நல்லிணக்கத்தை வளர்க்க மதத்தின் பெயரால் ஒரு இயக்கமா?**

இஸ்லாம் என்பது மதமல்ல, ஒரு மார்க்கம். ஒரு வாழ்க்கை முறை. திருக்குறளை ஒரு உலகப் பொதுமறை என்று சொல்வதில்லையா, அதைப் போல. "எந்த மண்ணில் வாழ்கிறோமோ, அந்த மண்ணுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்" என்று சொல்கிறது குரான். இந்த இயக்கத்தின் லட்சியமும் அதுவே!

**த.மா.கா.வில் இருந்துகொண்டே தனி அமைப்பாக நடத்துவது ஏன்?**

சாதாரணமாக எந்த அரசியல்வாதியும் மசூதிக்குள்ளே போய்ப் பேச முடியாது.

ஆனால் ஐக்கிய ஜமாத் என்ற பெயரில் அமைப்பு இருப்பதால், 7500க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களுக்குள் செல்ல அனுமதி கிடைக்கிறது. கொள்கைகளை எளிதாக மக்கள் மத்தியில் பரப்ப முடிகிறது.

**த.மா.கா.வில் முணுமுணுப்புகள் இல்லையா?**

இருந்திருக்கலாம். ஆனால் மூப்பனார் அன்போடு அரவணைத்தார்.

**உங்களுக்கும் த.மா.கா தலைமைக்கும் என்ன பிரச்னை?**

இன்றும், என்றும் நான் மதித்துப் போற்றும் தலைவர் மூப்பனார். ஆனால் இடையில் உள்ளவர்கள் கொஞ்சம் 'விளையாடி' விட்டனர். காரணம் பொறாமை.

அரசியலின் அடிமட்டத்திலிருந்து வந்தவன் நான். அதனால் பல விவகாரங்களை என்னால் திறமையாகச் சமாளிக்க முடிந்தது. இது பல பேருக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பிவிட்டது. பலன், என் பணத்திலேயே சாப்பிட்டுவிட்டு என் முதுகில் குத்தினார்கள்.

**சிதம்பரத்தின் விலகல்...**

நிச்சயம் பெரிய இழப்புதான். கட்சியினர் வேண்டுமானால் ஒட்டிக் கொண்டிருக்கலாமே தவிர, நடுநிலை வாக்காளர்கள் கண்டிப்பாக தா.ம.கா.வைக் கைவிட்டு விடுவார்கள்!

**சிறுபான்மையோர் அமைப்பு நடத்தி வரும் நீங்கள், நியாயமாகப் பார்த்தால், மதச்சார்பற்ற கூட்டணியில் அல்லவா இருக்க வேண்டும்?**

அ.இ.அ.தி.மு.க தலைமையில் இருப்பது மதச்சார்பற்ற அணி என்று யார் சொன்னார்கள்? அங்கே மட்டும் இந்து மக்கள் கட்சி, இந்திய முஸ்லீம் லீக் எல்லாம் அங்கம் வகிக்கவில்லையா? மேலும், பா.ஜ.க அமைச்சரவையில் முஸ்லிம்களுக்கும் பங்கு கொடுத்திருக்கிறார் வாஜ்பாய். பிரதமர் வாஜ்பாயை பா.ஜ.க.வின் தலைவராகப் பார்க்கக் கூடாது. இந்தியப் பிரதமராகப் பார்க்க வேண்டும். எங்களுக்கு வாஜ்பாய் மீது நம்பிக்கை இருக்கிறது.

**தே.ஜ.மு.வில் சேர்ந்த உடனேயே உங்கள் அமைப்புக்கு மூன்று தொகுதிகளா என்று சிலர் ஆச்சர்யமாய்ப் பேசுகிறார்களே...**

அவர்களுக்கெல்லாம் எங்கள் பலம் தெரியவில்லை! கலைஞருடன் இணைந்ததற்காக தமிழ்நாடு முழுவதிலிருந்தும் பாராட்டு தந்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சிறுபான்மையினர் வோட்டுக்களைச் சிந்தாமல் சிதறாமல் கொண்டு சேர்ப்பேன்!

சந்திப்பு: **ஸ்ரீநிவாசன்**
படம்: **ராஜன்**



தரம் நோக்கி
திறம் ஆய்ந்து
தமிழ் மக்கள்
வாக்களிக்க,
*அறம் வளர்த்த நாயகி நின்
அருள் வேண்டித்
துதிக்கின்றோம்
ஐயாறு உறை அழகே!– நல்
ஆட்சி மலர அருளே!

**அன்பளிப்பு:**

**இந்த இதழுடன்**
**திருவையாறு**
**தர்மசம்வர்த்தனி**
**வண்ணப்படம்**

**அடுத்த இதழில்:**

**கந்தகோட்டம் முருகன்**
**வண்ணப்படம்**

* தர்மசம்வர்த்தனியின் தமிழ்ப் பெயர்



ஜோக்குக்குப் பக்கத்தில் வைக்க அரசியல்வாதிகள் சிரிப்பது போல் கார்ட்டூன் கேட்டோம் நமது ஓவியரை. அவர்களிடம் ஜோக் சொல்லும் நேரமா இது என்று படு சீரியஸாக முகம் வரைந்து கொடுத்து விட்டுப் போயே போய்விட்டார்!

அவர்கள் சிரிக்காவிட்டால் போகிறது. நீங்களாவது சிரியுங்கள்!



இந்த வார கிரிக்கெட்
ஜோக்குகள்
எழுதியிருப்பவர்:
எல்.ஆர். ராஜ பாஸ்கர்

ஷேய்ன் வார்ன். ஆஸ்திரேலிய அணியின் ஸ்பின்னிங் மன்னர்! மூன்று குண்டக்கா – மண்டக்கா கேள்விகள் கேட்டு அவரை மூட் – அவுட் ஆக்கினோம்...

வார்ன் என்னாலே ஏதாவது

தாயாகி...

(இடைமறிக்கிறார்) : எங்க ஊரில் இதெல்லாம் சகஜம். அந்தப் பெண்ணே தான் என்னை விரும்பிக் கூப்பிட்டாள். நான் சென்றேன். இதில்

# ஷேய்ன்



# குண்டக்கா-மண்

ஒரு கான்டர்வர்ஸி எப்போதும் நடந்துகொண்டே இருக்கிறதே...

இது என்ன புதுக்கதை! (பலமாகச் சிரிக்கிறார்)

மேட்ச் இல்லாத சமயத்தில் யாரோ ஒரு பெண்ணுடன் ஒரே அறையில் தங்கி, அந்தப் பெண்

தவறு எதுவும் இருப்பதாக எனக்குப்படவில்லை. இங்கிலாந்திலிருந்து நான் மெல்போர்ன் திரும்பியவுடன், 'வார்ன், என்னை ஏமாற்றிவிட்டார்' என்று டயலாக் விட்டார் அந்தப் பெண்மணி. கிரிக்கெட் போர்டிலிருந்து என்னைக் கூப்பிட்டு விசாரித்

தார்கள். நான் கூறிய பதில் அவர்களுக்கே திருப்தி அளித்துவிட்டது. ஆமாம், இது நடந்து 16 மாசம் ஆகிவிட்டதே. இப்போது ஏன் அதைக் கிளறுகிறீர்கள்?

பதில் பாகிஸ்தான் வீரர்களுக்கு எப்போதுமே ஒரு தனி குஷி! போதாதற்கு, ஆஸ்திரேலியா என்றால் இவர்களுக்கு வேப்பங் காயாய்க் கசக்கும். அவர்கள் சொல்வதைப் போய் சீரியஸாக எடுத்

# வார்ன் + 3



# ...க்கா கேள்விகள்!

**சரி, 'மேட்ச் - ஃபிக்ஸிங்'ல் உங்களுக்குச் சம்பந்தம் இருப்பதாக ஜாவித் மியாண்டாட் சொல்லியிருக்கிறாரே...**

எதையாவது இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, பிறரை மாட்டி விட்டு வேடிக்கைப் பார்ப்

துக்கொள்கிறீர்களே?

**உங்களுக்கும் கங்குலிக்கும் இடையே என்ன தகராறு?**

பெரிதாக ஒன்றுமில்லை. கடந்த முறை கங்குலி ஆஸ்திரேலியாவுக்கு ஆட வந்திருந்தபோது, சொல்லி வைத்தாற்போல அவருடைய விக்

கெட்டை நானே எடுத்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு முறையும் அவருடைய விக்கெட் விழுந்தவுடன் ஆரவாரம் செய்வேன். விக்கெட் விழுந்த மகிழ்ச்சியில் பௌலர் துள்ளிக் குதிப்பது இயல்புதானே? ஆனால் கங்குலி அதை ஸ்போர்டிவ்வாக எடுத்துக்கொள்ளாமல், என்னை முறைத்து முறைத்துப் பார்க்க ஆரம்பித்தார். சச்சின்தான் அப்போது காப்டன். அவர் எங்கள் இருவரையும் அழைத்து விஷயத்தைத் தெளிவாக்கி சமரசம் செய்து வைத்தார். கங்குலியும் என்னிடம் மன்னிப்பு கேட்க, விஷயம் அதோடு முடிந்தது.

ஆனால் பாருங்கள், மும்பை டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் நான்தான் கங்குலியை அவுட்டாக்கினேன். என்னைத் திரும்பிப் பார்த்தார், நான் ஒன்றுமே நடக்காதது மாதிரி இருந்து விட்டேன். திரும்ப இரண்டாவது இன்னிங்ஸில் நான்தான் அவரை அவுட் ஆக்கினேன். இதெல்லாம் திட்டமிட்டு நடக்கவில்லை, தற்செயலாக நடந்தது தான். வேறொரு மேட்ச்சில் அவர் என் பௌலிங்கை வெளுத்துக் கட்டலாம். அல்லது, நான் மறுபடியும் அவருடைய விக்கெட்டை எடுக்கலாம் – யாருக்குத் தெரியும்?

**அதெல்லாம் போகட்டும், கிரிக்கெட்டுக்காக வராமல் ஜாலியாக ஒரு டூர், மனைவி மகளுடன் இந்தியா வர வேண்டும் என்று சென்ற முறை வந்தபோது சொல்லியிருந்தீர்களே, வந்தீர்களா?**

உங்களுக்கெல்லாம் தெரியாமல் அப்படி வந்து போய்விட முடியுமா என்ன? ஜூம் (zoom) – லென்ஸ்காரர்களாச்சே நீங்கள்?

சென்ற வருடம் இந்தியா வரும் திட்டம் இருந்தது உண்மைதான். ஆனால் கையில் பட்ட காயம் காரணமாக மூன்று மாசம் ரெஸ்ட் எடுக்க வேண்டியதாகி விட்டது. கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது வர முடியவில்லை. ரிடையர் ஆனவுடன் நிச்சயம் வருவேன். இந்தியாவில் பார்க்க வேண்டிய இடங்கள் எவ்வளவு இருக்கின்றன!

பேட்டி, படம் : **உமா மணி**

## கடுப்படிக்கும் கார்த்திக்!

சமீபத்தில், சிதம்பரத்தின் வீடு அரசியல் நடவடிக்கைகளால் கலகலப்பானபோது, தொண்டர்களுக்கு நடுவில் கருத்து பரிமாற்றம் செய்து கொண்டிருந்தார் அவரது மகன் கார்த்திக் சிதம்பரம். பேட்டி என்று நெருங்கினால் 'வேண்டாமே' என்று ஓடினார். ''என் தொழில் பற்றி மட்டும்தான் நான் பேசுவேன். நாட்டில் வோட்டுப் போடும் வயது வந்த எல்லோருக்கும் அரசியல் உணர்வு இருக்கணும். த.மா.கா எங்கள் வீட்டில்தான் பிறந்தது. அந்தக் கட்சியின் சட்டதிட்டங்களைத் தயாரிக்க நானும் உதவியிருக்கிறேன்... இதைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியாது... தலிபான் புத்தர் சிலைகளை உடைத்தது பற்றிப் பேசலாமா?'' என்று நம்மைக் கடுப்படித்தார் கார்த்திக்.




• கார்த்திக்

## கொதிக்கும் ரத்தம்!

நடிகர் சரத்குமாரின் மூத்த சகோதரர் ஆர். சுதர்சன். அகில இந்திய நாடார் இளைஞர் பேரவையின் தலைவராக இருக்கிறார் இவர். காங்கிரஸிலும் முக்கியப் புள்ளி. ''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார் சரத்... இவர் பிரசாரம் செய்தால் நாடார்கள் தி.மு.க அணிக்கு வோட்டுப் போட்டு விடுவார்களா? சென்ற முறை இவர் வோட்டு கேட்டபோதே ஆங்காங்கே எதிர்ப்பு. இந்த முறை தூத்துக்குடி – நெல்லை ஏரியாக்களில் சரத் பிரசாரம் செய்ய முடியாது'' என்று கொதிக்கிறார் சுதர்ஸன். ரத்தத்தின் ரத்தத்துக்காக கொஞ்சம் கருணை காட்டுங்க!

— கௌசி



• ஆர். சுதர்சன்



# நில், கவனி, வெற்றிகொள்!

ஆதௌ கீர்தனாரம்பத்திலே,

கல்கி - ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் சேர்ந்து நடத்திய 'ஏழாவது சுவை' அப்படீங்கற இளைஞர் திருவிழாவைப் பத்தி சிலாகிச்சுச் சொல்லிண்டு இருந்தேனாக்கும்!

பேராசிரியர்வாளுக்கு அடுத்து பேசியவர் ஆர்.சேகரன், ஹியூமர் கிளப் செகரட்டரி - அதான், பார்யாளோடே மெமெண்ட்டோ கட்டளைக்கு நடுங்குகிற மனுஷர்னுட்டு அறிமுகப்படுத்தினேனே, நினைவிருக்கோ?

ஒரு தடவை சிருங்கேரி கோவிலுக்கு மனைவியை அழைச்சிண்டு போனாராம். ஒரு ரூபாய் தக்ஷணை கொடுக்கிறவாளை, கோயில் யானை, காலைத் தூக்கித் தூக்கி ஆசிர்வாதம் பண்ணிண்டு இருந்ததாம். இவரோடே ஆத்துக்காரியும் ஒரு ரூபாய் தரச்சொல்லி இவரண்டே கேட்டாளாம். ரூபாயை எடுத்துக் கொடுத்திட்டு, யானைப்பாகன் கையில் ரகசியமா பத்து ரூபாயைத் திணிச்சு, 'கொஞ்சம் நன்னாவே அழுத்திடச் சொல்லு!' அப்படீன்னுட்டுச் சொன்னாராம். அவனும் யானை காதில் ஏதோ கிசுகிசுக்க, அது திடீர்னு ரிவர்ஸில் போக ஆரம்பிச்சுடுத்தாம். இவர் குழம்பிப்போய் யானைப்பாகனைப் பார்க்க, அவன், காதுக்குள் சொன்னானாம் - 'இருபது வருஷமா யானைப் பாகனா இருக்கும் நேக்கே இந்த ஐடியா தோணாமல் போயிடுத்தே! சித்த நாழி வெயிட் பண்ணுங்கோ. யானையை வீட்டுவரை அனுப்சிருக்கேன், இதோ வந்திடும்!'ன்னு.

சிவப்பு புடவை கட்டிண்டு காஸ் சிலிண்டர் பக்கத்திலே போய் உட்காராதேனுட்டு மனைவிகிட்டே சொல்லிண்டே இருப்பாராம் சேகரன், சிலிண்டர்னு நினைச்சு அவளைத் தூக்கிண்டு போயிடப் போறானே காஸ்காரன், அப்படீனுட்டு. அந்த மாதிரி ஒரு தடவை சொல்லிண்டு இருக்கறச்சையே காஸ்காரன் வந்துட்டானாம், "ஸார், இரண்டாவது சிலிண்டர் புக் பண்றேளா?"ன்னு கேட்டுண்டு. 'ஒரு சிலிண்டரை வைச்சிண்டே சமாளிக்க முடியலையே, நேக்கு எதுக்குப்பா இரண்டாவது சிலிண்டர்' அப்படீன்னு மனசுக்குள்ளேயே புலம்பிண்டாராம்.

இதைச் சொன்னதும் எல்லாரும் 'ஹோ'ன்னு கைதட்டினா. அதுக்கு, அவர், 'நீங்க கைதட்டுகிற விதத்திலேயே புரியறது, நான் மட்டும் அவஸ்தையை அனுபவச்சிண்டு இருக்கலைனுட்டு!' அப்படீன்னார்.

நானும் பார்த்திண்டே இருந்தேன். மைக்கைப் பிடிச்ச நாழியிலிருந்து சேரில் போய் உட்கார்ற வரைக்கும், ஆத்துக்காரியோடே காலை சகட்டுமேனிக்கு வாரிண்டே இருந்தார் மனுஷன். மீட்டிங் முடிஞ்சு ஆத்துக்குப் போனப்புறம், 'நான் இப்படி எல்லாம் பேசினேன்' அப்படீன்னு அவளண்டை சொல்லுவாரானுட்டு நான் ஒரு செகண்டு

# தேர்தல் வெற்றியை நிர்ணயிப்பது ஆதாயம்தான்!



யோசிச்சேன். ஆனா, முதல் வரிசையில் அந்த அம்மணியே உட்கார்ந்திருந்தான்னு யாரோ சொன்னா. 'ஆஹா, இதுவல்லவா பதிபக்தி!'

சிரிப்பு அப்படீன்ன உடனே, நமக்கெல்லாம் ஞாபகத்துக்கு வருகிறவர் எஸ்.வி.சேகர். ஆனால் அவருக்கு ஞாபகம் வர்றது யாராம், தெரியுமோ? - வி.ஜி.பி. கோல்டன் பீச் வாசலில் நிற்கும் மனுஷர் தானாம். 'அவர் சிரிக்காமல் இருக்கிறதைவிட, அங்கே வர்றவா அவரைச் சிரிக்க வைப்பதுக்கோசரம் படற கஷ்டங்கள் அதிகம் அப்படீங்கறார்.

நாடக உலகத்திலே இப்போதைக்கு அவர் கொடிகட்டிப் பறந்தாலும், இவரோடேப் ஆரம்பகால வாழ்க்கை கரடுமுரடாத்தான் இருந்திருக்கு.

நாடகக்குழு ஆரம்பிச்ச புதுசில், ஒரு பிரபல சபா செக்ரட்டரிகிட்டே போய் சான்ஸ் கேட்டாராம். அவர், தரதரன்னு இவரை வெளியே இழுத்திண்டு போய், "இந்த அரங்கத்தோடே மதிப்பு என்னன்னு நோக்கு தெரியுமா?" அப்படீன்னு கேட்டிருக்கார். 'நான் என்ன, அரங்கத்தை வாங்கவா வந்தேன்?' னுட்டு ஜோக்கடிச்சிட்டு வந்துட்டாராம் சேகர். ஆனா, அதே செக்ரட்டரி, மூணு வருஷம் கழிச்சு ஃபோன் பண்ணி டிராமாவுக்குத் தேதி தரச் சொல்லி அடம்பிடிச்சிருக்கார்.

இன்னொரு சமயம் டி.எஸ்.சேஷாத்ரியோடே டிராமா கான்சல் ஆயிடுத்தாம், அவர் எங்கேயோ வெளியூரில் மாட்டிண்ட காரணத்தாலே. 'ஸ்டாண்டு - பை'யா, சேகரை டிராமா போடச் சொல்லியிருக்கா சபாக்காரா. இவரும் ஒத்துண்டு, ஆடிட்டோரியத்துக்கு எல்லாரையும் அழைச்சுண்டு போயிட்டார். நாடகம் ஆரம்பிக்கப் போகிற சமயத்திலே சேஷாத்ரி ட்ரூப் வந்து சேர, சேகரை வீட்டுக்குப் போகச் சொல்லிட்டாளாம்!

'காமெடி டிராமா போடுகிற நாங்களே காமெடி ஆகிவிட்ட சம்பவம் இது' அப்படீன்னு அவர் சொன்ன உடனே, நேக்கே மனசு ரொம்ப கனத்துப் போயிடுத்து. மனுஷாளோடே தரம் எப்படிப் போயிண்டு



இருக்கு பார்த்தேளா?

கு. ஞானசம்பந்தத்தோடே பாஷையில் சொல்லணும்னா, வேறு யாருக்கோசரம் இல்லைன்னாலும், அந்த இரண்டு சபா செக்ரட்டரிகளுக்காவது சேகர் முன்னேறியிருக்கணும்! முன்னேறி இருக்கார்! அதில் நம்ப எல்லாருக்கும் பரம சந்தோஷம்!

ஆனா, நேக்கு ஒரு சின்ன நெருடல். மத்தவா பேசறச்சே, சேகர், சுவாரஸ்யமில்லாமல் 'அன்இன்வால்வ்டு'ஆ மேடையில் உட்கார்ந்திருந்தாரோன்னு தோணித்து. நேக்கு மட்டும்தான் அப்படி தோணித்துன்னு நினைச்சேன். ஆனால் கேள்வி-பதில் நேரத்தில் ஒருத்தர் சேகரை கேட்டே கேட்டுட்டார். "டிரிங்-டிரிங் டீவி ஷுட்டிங், நாடகம், ஹியூமர் கிளப், மீட்டிங்குன்னு இன்னிக்குக் கொஞ்சம்கூட ரெஸ்ட் கிடைக்கலை. அதான் ரொம்ப டயர்டா ஃபீல் பண்றேன், வேறொன்னுமில்லை!'னுட்டு மன்னிப்பு கேட்டுண்டார்.

கேள்வி - பதில் நேரத்தில் பார்வையாளர்கள் அசராமல் கேள்வி கேட்டா, இவரும் ஞானசம்பந்தமும் அசராமல் பதில் சொன்னா.

சேகரோடே தேர்தல் அனுபவத்தைப் பத்தி ஒருத்தர் கேட்டார். அதுக்கு, 'தேர்தலில் வெற்றி - தோல்வியை நிர்ணயம் பண்றது, தேர்தலுக்கு முதல் நாள் செலவழிக்கப்படுகிற சாராயமும் பணமும்தான்!' அப்படீன்னு ஒரே போடா போட்டார் சேகர். உடனே ஆடியன்ஸ், எழுந்து நின்னு கைதட்டாத குறைச்சல். 'இங்கே கைதட்டுகிறவா அத்தனை பேரும் போய் வோட்டு போட்டா நம்ப நாடு எங்கேயோ இருக்கும்!' அப்படீன்னு எல்லார் மூக்கையும் ஒரே ஷாட்டில் உடைச்சார்! ஐ.டி. கார்டு தலைவலிக்குப் பயந்துண்டு, வோட்டு போடுகிறதைப் பத்தி யோசிச்சுண்டு இருந்த நான், தலையே போனாலும் வோட்டு போட்டே தீர்றதுனுட்டு முடிவு பண்ணிட்டேன்.

கடவுள் மனிதனுக்கென்று பிரத்யேகமாக தந்திருக்கும் வரப்பிரசாதம் சிரிப்பு, அதை உண்டாக்குகிறவா கடவுளுக்குத் திருப்பணி செய்யறவானுட்டு அமரர் கல்கி சொல்லியிருக்காராம். அதை நினைவுபடுத்தி, கு. ஞானசம்பந்தம், ஆர். சேகரன், எஸ்.வி.சேகர் என்ற மூணு பேர் அடங்கிய திருப்பணி குழுவுக்கு நன்றி சொன்னார் சீதா ரவி, கல்கி ஆசிரியர்.

கல்கி, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் இரண்டு பேரையும் பாராட்டும் போது பேராசிரியர் ஒரு விஷயம் சொன்னார்.

அதைவிடவா நான் அழகா பாராட்டிடப் போறேன்?

"ஃபுட்பால், புல்லாங்குழல் இரண்டும் காற்றை உள்வாங்கிக்கிற சமாசாரம்தான். ஆனால், அந்தஸ்திலே இரண்டுக்கும் எத்தனை வித்தியாசம் பார்த்தேளா? ஒன்னு, காலாலே உதைபடுறது. இன்னொண்ணு, வாயாலே முத்தமிடப்படுறது.

"ஏன்?

"ஃபுட்பால், தான் வாங்கிக்கிற காற்றைத் தானே வைச்சுக்கிறது. ஆனா, புல்லாங்குழல், அதை உடனே இசையா மாற்றி வெளியே தந்துடறது! நம்மளை வாழ வைக்கிற சமூகத்துக்கு நாம கண்டிப்பா ஏதாவது செய்யணும், கல்கியும் கிருஷ்ணா ஸ்வீட்ஸும் செய்யறா மாதிரி!" அப்படீன்னார்.

இங்கே கூடியிருக்கிறவா அத்தனை பேரும் புல்லாங்குழல்களா வாழ்னும்கற ஆசையைத் தெரிவிச்சிண்டு, இத்தோட பிரவசனத்தை முடிச்சுக்கிறேன்.

மங்களம் உண்டாகட்டும்!

பிரவசனம் : **கிருஷ்ண பாகவதர்**
உதவி : **சந்திரமௌலி**
படங்கள் : **யோகா**



• அ.தி.மு.க. வேஷ்டி விற்பனை சூடு பிடிச்சிடுச்க!



• கரண்ட்டை கம்பத்திலிருந்து இழுத்துக்க வேண்டியதுதான்!

**"தேர்தல் என்றால் அரசியல்வாதிகளுக்கு மட்டும்தான் சீசனா? – எங்களுக்கும்தான்!" என்று மூச்சு விடவே நேரமில்லாமல் தேர்தலுக்குத் தயார் பண்ணிக் கொண்டிருந்த நாலு வியாபாரிகளை 'பேட்டி, பேட்டி' என்று நமுத்தெடுத்தோம்...**

*ஆனை லட்சுமிகாந்தன் (சுவரில் படம் வரைபவர்)*

**தேர்தல் தேதி இன்னும் அறிவிக்கலையே, உங்களுக்கு எப்ப வேலை சூடு பிடிக்கும்?**

பெரிய கட்சிகள் எல்லாம் கூட்டணி அமையற வரைக்கும் காத்திருக்க மாட்டாங்க. தேர்தலுக்கு ஒன்றரை மாசத்துக்கு முன்னாடியே இடத்தை மார்க் பண்ணிக் கொடுத்து வரையச் சொல்லிடுவாங்க.

நான் ஏற்கெனவே ஒரு கட்சிக்கு, 12,000 வோட்டு இருக்கிற, 18 தெருக்கள் கொண்ட டிவிஷனில் 60 இடங்களில் வரைஞ்சு முடிச்சிட்டேன். கண்ணுலே தென்படுகிற எல்லா இடத்திலேயும் ஒரு கட்சியோட சின்னம் தெரிஞ்சா, எதிர்க்கட்சி வேட்பாளர் எடுத்த எடுப்பிலேயே மிரண்டுடுவார் பாருங்க. அதுக்காகத்தான் பெரிய கட்சிகள் எல்லாம் வரையறதுக்கு அவசரப்படுறது!

**எந்தக் கட்சி சுறுசுறுப்பாக இருக்கிற மாதிரி தெரியுது?**

# தேர்தல் சீசன்; எங்களுக்கும் சீசன்!



• லாபம் பார்த்தா கஷ்டம்தான்!

சென்னையைப் பொறுத்தவரை, 75 சதவிகித இடங்களை தி.மு.க பிடிச்சிட்டாங்க! ('அதாவது, சுவரில்' என்று சொல்லிவிட்டுச் சிரிக்கிறார்.) மொஃபஸலில் அ.தி.மு.க.தான் சுறுசுறுப்பா வேலை செய்யறதாகச் சொல்றாங்க.

**ஒரு கட்சிக்கு வரையறவங்க சாதாரணமாக எதிர்க்கட்சிக்கு வரைய மாட்டாங்கன்னு சொல்றாங்களே...?**

அதெல்லாம் மொஃபஸலில்தாங்க! அந்தந்தக் கட்சி தனித்தனியா ஆளு வைச்சிருப்பாங்க. சிடியைப் பொறுத்த வரைக்கும் எல்லாமே கமர்ஷியல்தான் - யாரு பணம் கொடுத்தாலும் செய்வோம்!

**உங்களிடம் நேரடியாக வேலை தருவது, கட்சித் தொண்டர்களா, வேட்பாளரா?**

முதல் ரவுண்டு, எப்பவுமே கட்சியோட வட்டச் செயலாளரோ பகுதி செயலாளரோ தான் கூப்பிட்டு வேலை கொடுப்பாங்க. வேட்பாளர் பெயருக்கு மட்டும் இடம் விட்டுட்டு, கட்சி சின்னம், தலைவர் படம் எல்லாத்தையும் வரையச் சொல்லிடுவாங்க. வேட்பாளர் பெயர் அறிவிச்ச உடனே, அதை மட்டும் ரொப்பச் சொல்வாங்க. அதுக்கப்புறம் வேலை கொடுக்கறது எல்லாம் வேட்பாளர்களேதான். மற்றப்படி எங்களுக்கு ஆகுற செலவு விஷயத்தில் எப்படி அட்ஜஸ்ட் செய்துக்குவாங்கன்னு தெரியலை!

**பணம் எல்லாம் கரெக்டாகக் கொடுப்பார்களா?**

கொடுத்தாத்தான் பிரச்னையே இல்லையே! அப்படிச் செய்ய மாட்டாங்க. 50 இடத்துக்கு 5000 ரூபாய் பேசி, 1000 ரூபாய் அட்வான்ஸாக கொடுப்பாங்க. சாமான் எல்லாம் பெரும்பாலும் அவங்களே வாங்கிக் கொடுத்திருவாங்க. (நாங்க கமிஷன் அடிச்சிருவோம்னு பயம் போல!)

பாதி வேலை முடிஞ்ச உடனே நாங்க கொஞ்சம் உஷாராயிடுவோம். இன்னொரு 1000 ரூபாய் தந்தால்தான் வேலை நடக்குமின்னு சொல்லி பணம் வாங்கிக்குவோம். வேலை முடிஞ்ச பிற்பாடு, இன்னொரு ஆயிரம் ரூபாயைக் கொடுத்திட்டு 'நாங்க நினைச்ச அளவு படம் தெளிவா வரலை. அவ்வளவுதான் கொடுக்க முடியும்!'னிட்டு நடையைக் கட்டிருவாங்க.

பெரிய பெரிய ஆளுங்களே இவங்களுக்குப் பயப்படறப்போ, கூலி வேலை செய்கிற நாங்க என்ன செய்ய முடியும்? கொடுத்ததை வாங்கிக்கிட்டு பேசாமல் இருப்போம்!

**உங்களுடைய லாபம்?**

லாபம் எல்லாம் சைஃபர்தான். ஆனால், ஒரு மாசத்துக்கு வேலை இருந்துக்கிட்டே இருக்கும் அப்படீங்கறதாலே, என்னை நம்பி இருக்கிற நாலு தொழிலாளிகளுக்குச் சம்பளம் கிடைக்கும். அதுக்காகத்தான் இந்த வேலையை ஒப்புக்க வேண்டியிருக்கு. மத்தபடி, லாபம் பார்த்தா கஷ்டம்தான்!

**பகலில் மட்டும்தான் வேலையா?**

தேர்தலுக்கு ஒரு மாசம் இருக்கிறப்போ, பகலில் மட்டும்தான் வேலை செய்வோம். காலையில் வெளிச்

சம் வந்த உடனே வேலையைத் தொடங்கினா, பதினொரு மணி வரைக்கும் வேலை செய்வோம். அப்புறம், மதியம் இரண்டிலிருந்து ஆறு மணி வரை.

வேட்பாளர் லிஸ்ட் அறிவிச்ச உடனே, இரவு பகல் பார்க்காமே வேலையை ஆரம்பிக்க வேண்டி வரும். ராத்திரியில் வேலை செய்யறதுக்கு வேணுமின்கிற, லைட் உட்பட எல்லா வசதிகளையும் வேட்பாளரே செஞ்சு தந்திருவாங்க.

**யாரோட முகம் வரையறதுக்கு கஷ்டமா இருக்கு?**

*(சிரிக்கிறார்)* சித்திரம் கைப்பழக்கம் தானுங்களே! புதுத் தலைவருன்னா, ஒரு படம் வரையறுதுக்கே நாலு மணி நேரம் பிடிக்கும். வரைஞ்சு, வரைஞ்சு பழகின முகம்ன்னா, ஒரு மணி நேரத்திலே வரைஞ்சிடுவோம்.

ஜெயலலிதா அம்மா மொதமொதல்லே ஜானகி அம்மாவை எதிர்த்து நின்னப்போ, யாருக்குமே ஜெயலலிதா அம்மாவோட முகத்தைச் சரியா வரைய வரலே. ஆனா, இப்போ கண்ணை மூடிக்கிட்டு வரையலியா, அந்த மாதிரிதான்!

எம்.ஜி.ஆர், கலைஞர் முகமெல்லாம் வரையறது ரொம்ப ஈஸி - கண்ணாடி, தொப்பி அப்படீங்கற அடையாளங்கள் இருக்கிறதாலே. வரையும்போது முகம் கொஞ்சம் முன்னே பின்னே வந்திட்டாலும், தொப்பியும் கண்ணாடியும் எங்களைக் காப்பாத்தி விட்டுடும்!

**சுவரில் படம் வரையக் கூடாது என்று ஆணை பிறப்பித்தார்களே, என்ன ஆயிற்று?**

அதெல்லாம் சேஷன் காலத்தோடு போச்சுங்க. அப்போ இருந்த கெடுபிடியே வேறே. சுவரின் உரிமையாளர்கிட்டே அனுமதியை எழுதி வாங்கணும்; அந்த அனுமதி கடுதாசியை இரண்டு காப்பி எடுக்கணும்; ஒரு காப்பி, படம் வரையச் சொன்னவங்ககிட்டே இருக்கணும். இன்னொரு காப்பி வரையிரவங்க கிட்டே இருக்கணும்; திடீர், திடீர்னு கமிஷன் ஆபீஸிலிருந்து ஃபோன் வரும்– "உங்க வீட்டுச் சுவத்திலே வரைஞ்சிருக்காங்களே, நீங்க அனுமதி கொடுத்தீங்களா?"ன்னு.

இப்போ என்னடான்னா, எல்லா ரூலையும் காத்திலே பறக்க விட்டாச்சு. ஆளாளுக்குச் சுவர்களை முன் கூட்டியே ரிசர்வ் பண்ணிடுறாங்க. அப்புறம், எங்களைக் கூப்பிட்டு வரையச் சொல்றாங்க. வீட்டு ஓனர்களும் கலாட்டாவுக்குப் பயந்துக்கிட்டு கம்முனு இருந்திடுறாங்க.

**தேர்தல் இல்லாத நாட்களில் என்ன செய்வீங்க?**

பிரைவேட் கம்பெனிகளுக்குப் பெயர்ப் பலகை வரையறது, விளம்பரங்கள் வரையறது - இதுதான் எங்க பொழைப்பு. வேலை முடிஞ்ச கையோடே 'டாண்'ன்னு பேசின பணத்தைக் கையிலே கொடுத்திருவாங்க. அவங்களை நம்பித்தான் எங்க வாழ்க்கையே ஓடுது!

*ஜி. நடேசன், (கட்சிக்கரையிட்ட வேஷ்டி வியாபாரி)*

**எந்தக் கட்சியுடைய வேஷ்டி அதிகம் விற்கிறது?**

அ.தி.மு.க.தான்! இரண்டு மாசம் முன்னாடியிலிருந்தே அ.தி.மு.க வேஷ்டி விற்பனை சூடு பிடிச்சிடுச்சு!

**எத்தனை நாளைக்கு சீசன் தொடரும்?**

தேர்தல் முடிஞ்ச உடனே சேல்ஸ் 'தொப்பு'ன்னு குறைஞ்சிடுங்க!

**எந்தக் கட்சியின் வேஷ்டியை அதிகம் ஸ்டாக் செய்வீர்கள்?**

பொதுவா, நாலு பெரிய கட்சிகளோடே வேஷ்டிகளையும் நூறு உருப்படிக்கு குறையாமே ஸ்டாக் வைச்சுக்குவோம் - அ.தி.மு.க, தி.மு.க, பா.ம.க, காங்கிரஸ். சின்னக் கட்சிகள் அப்படீன்னா, 40-50 வைச்சுக்குவோம். அவ்வளவுதான். காரணம், இவங்க திடீர்னு காணாமல் போய் நம்பளை கவுத்திருவாங்க. அப்புறம் அந்த வேஷ்டிகளை என்ன செய்யறது?

**வேஷ்டிகளை எங்கிருந்து வரவழைக்கிறீர்கள்?**

ஈரோடு, இடைப்பாடி, சேலம், அருப்புக்கோட்டை - நாலு ஊரிலிருந்தும் சரக்கு வருது. 45 ரூபாய் பருத்தி வேஷ்டியும் விற்கறேன். 140 ரூபாய் பாலியஸ்டர் வேஷ்டியும் விற்கறேன்

**தேர்தல் இல்லாத நேரத்தில் சேல்ஸ்**

**எப்படி?**

ஏதாவது கட்சி மீட்டிங் நடந்தா மட்டும், அந்தக் குறிப்பிட்ட கட்சி வேஷ்டி, ஒரு இரண்டு மூணு நாளைக்குப் பரபரப்பாக விற்கும். அப்புறம் அவ்வளவுதான். மிஞ்சிப் போன சரக்கை அடுத்த தேர்தலின்போது விற்கவும் முடியாது. வேஷ்டி கலர் மாறி பழுப்பாயிடும், சில சமயம் தெறிச்சுப் போகுறதும் உண்டு! ரொம்ப ரிஸ்க்கான வியாபாரம் இது.

**துண்டு, சால்வை - இதெல்லாம்கூட விற்கிறீர்களா?**

வேஷ்டிக்கு ஜோடியா துண்டும் விற்கிறது நான். முன்னே எல்லாம், மேடையில் இந்தத் துண்டுதான் போர்த்துவாங்க. ஆனா, இப்போ சால்வைதானே ஃபாஷன்! அதனாலே லூதியானாவிலிருந்து சால்வைகளை வருத்தி விற்கிறேன். 40 ரூபாயிலிருந்து 250 ரூபாய் வரைக்கும் சால்வை வாங்கலாம், நம்ப கடையில். கலைஞர் போடுகிறாரு பாருங்க மஞ்சள் சால்வை, அது 250 ரூபாய் ஐட்டம். தொண்டர்களுக்குப் போர்த்துவது எல்லாம் 50 ரூபாய் ஐட்டம்!

**பி.எஸ். மணியம், கட்சிக்கொடி மற்றும் பானர் விற்பவர்**

**உங்கள் விற்பனை சூடு பிடித்து விட்டதா?**

தேர்தல் தேதி நிச்சயம் ஆகி, கூட்டணி விவகாரம் முடிவாகி, தொகுதிகள் பங்கீடு முடிஞ்சு, வேட்பாளர் லிஸ்ட் அறிவிச்சப் புறம்தானுங்க நம்ப வியாபாரம் சூடு பிடிக்கும். தோராயமாக 15 நாட்கள் முன்னாடியிலிருந்துன்னு வைச்சுக்குங்களேன். ஆனா, ஒரு மாசம் முன்னாடியிலிருந்தே நாங்க ரெடியாக ஆரம்பிச்சிடுவோம்.

**கட்சிக் கொடிகளை நீங்களே தயாரிக்கிறீர்களா?**

இல்லைங்க, நம்ப சரக்கு பூரா சிவகாசியிலிருந்து வருது. ஒரு கொடியைத் தயாரிக்கிற செலவு நாலு பைசா ஆகும்ன்னா, அதை வாங்கும்போது, மிஞ்சி மிஞ்சிப் போனா ஐந்து பைசா ஆகும். அவ்வளவுதான் வித்தியாசம். அதோடு, வாங்கி விற்கிறபோது எவ்வளவு தலைவலி மிச்சம் இல்லீங்களா? அதனாலே நான் தயாரிப்பு பக்கமே போறதில்லே.

**கட்சி அலுவலகங்களுக்கு நேரடியா சப்ளை செய்வீர்களா?**

பெரிய அளவில் வியாபாரம் பண்ண ஆசைப்பட்டுக்கிட்டு கட்சி அலுவலகங்களுக்குப் போனா, பண வசூல் ரொம்பப் பிரச்னை ஆயிடும். அதனாலே நான் கல்லாப்பெட்டி வியாபாரத்தோட நிறுத்திக்கிறது வழக்கம்.

**கல்லாப்பெட்டி வியாபாரம் என்றால், யார் நேரடியாக வந்து வாங்குவார்கள்?**

வேட்பாளரே ஃபோன் பண்ணி இத்தனை கொடி வேணும்ன்னு சொல்லுவார். நான் அவரோட தொகுதியைக் கூட சரியாகக் கேட்டுக்கிறது இல்லை. ரேட்டை மட்டும் தெளிவாகச் சொல்லுவேன். பணத்தோடு ஆளை அனுப்புவார், சரக்கைக் கொடுத்து விட்டுருவேன், அவ்வளவு தான்!

**ஒரு தடவை மீட்டிங்கில் கட்டுகிற கொடிகளைத் திரும்ப உபயோகப்படுத்துவார்களா?**

சின்ன கட்சின்னா அவிழ்த்து, அவிழ்த்து திரும்ப யூஸ் பண்ணுவாங்க. பெரிய கட்சின்னா, ஒரு தடவையோட சரி!

**இந்தத் தேர்தலில் யாரு ஜெயிப்பாங்க?**

*(சிரிக்கிறார்)* இன்னும் ஒரு வாரம் கழிச்சு வந்தீங்கன்னா, பணப்புழக்கத்தை வைச்சே சொல்லிருவேன், யார் ஜெயிக்கப் போறாங்கன்னு!

**கார்த்திக் சௌண்டு சர்வீஸ், சந்திரன்**

**ஒரு தேர்தல் மீட்டிங்குக்கு எவ்வளவு டியூப்-லைட் போடுவீங்க?**

மீட்டிங்குக்குப் பேச வருவது யாருங்கிறதைப் பொறுத்துத்தான் இருக்கு. கட்சித் தலைவர்கள் வராங்கன்னா 200-250 லைட் போடுவோம். வேட்பாளர்கள் அப்படின்னா, 50-100 போடுறது வழக்கம்.

**டியூப்-லைட் தவிர...**

மேடைக்குத் தேவையான ஹேலோஜன் லைட், மைக் செட் சப்ளை பண்ணுகிறேன். முக்கியமா ஆட்டோக்களில் பொருத்துகிற சௌண்டு சிஸ்டம். அது போக, கட்-அவுட்டுகளுக்குப் போடுகிற சீரியல் லைட் செட்!

**ஜெயலலிதா கட்-அவுட்டுக்கு எத்தனை லைட் தேவைப்படும்?**

24 பல்புகளை ஒரு 'செட்' அப்படீன்னு சொல்றது வழக்கம். அந்த மாதிரி 40 செட் தேவைப்படும்ன்னு வைச்சுக்கங்களேன். ஆனா இந்த முறை கட்-அவுட் கூடாதுன்னுட்டாங்களே...

**மீட்டிங் நடக்கிற இடத்திலே கரண்ட்டுக்கு என்ன செய்வார்கள்?**

மீட்டிங் நடத்தறவங்களே ஏ.இ. கிட்டே பேசிருவாங்க. அப்புறம் என்ன, கம்பத்திலிருந்து இழுத்துக்க வேண்டியது தான்! (சிரிக்கிறார்) சி.எம் மாதிரி பெரிய ஆளுங்க வந்தா மட்டும் ஜெனரேட்டர் போடச் சொல்வாங்க!

**இவ்வளவு சாமான் வைத்திருக்கிறீர்களே, மீட்டிங் நடக்கிற இடத்துக்கு, எப்படி எடுத்துக் கொண்டு போவீர்கள்?**

சொந்தமாக ஜீப் வைச்சிருக்கேன். ஜெனரேட்டரைக் கொண்டு போகணும்ன்னாக்கூட டிராலியில் வைச்சு கொக்கி மாட்டி ஜீப்போடு சேர்த்து இழுத்துக்கிட்டுப் போயிடுவேன்.

**நீங்க கொண்டு போகிற சாமான் எல்லாம் பத்திரமாகத் திரும்பி வருமா?**

இந்த சீரியல் பல்பு பார்க்குறீங்களே, இலேசா எதன் மேலேயாவது பட்டாலே போதும், நசுங்கிப் போயிரும். நடு ரோட்டில், பப்ளிக் மத்தியில் மீட்டிங் நடக்கிறபோது எதை, எப்படிப் பாதுகாக்கிறது? இப்படித்தான், 1991ல் தேர்தல் டயத்தில் ராஜீவ்காந்தி செத்திட்டாருன்னு எல்லாத்தையும் போட்டு உடைச்சாங்க. எனக்கு 4 லட்சம் ரூபாய் நஷ்டம். 150க்கும் மேற்பட்ட சூரியன் (கட்சி சின்னத்தின் கட்-அவுட்) திரும்ப வரவே இல்லை. இந்த மாதிரி பிரச்னைங்க நிறைய வரும். ஆனா, எனக்கு இது சைடு பிஸினஸ்தான். அதனாலே சமாளிக்க முடியுது! ஒரு டிரான்ஸ்போர்ட் ஆபீசில் வேலை செய்யறேன்.

**தினப்படி மீட்டிங் இருக்குமா?**

இத்தனை மணிக்கு மேலேதான் மீட்டிங் போடலாம், அது, இதுன்னு நிறைய ரூல்ஸ் கொண்டாந்திட்டாங்க. அதனாலே பப்ளிக் மீட்டிங் இப்போ ரொம்ப குறைஞ்சு போயிடுச்சு. ஆனா தேர்தலுக்குப் பத்து நாள் இருக்கும் போது ஒரே நாளில் 3-4 மீட்டிங்குக்கு சப்ளை பண்ண வேண்டி வரும். கையில் இருக்கிற செட் பத்தாமே வாடகைக்கு எடுத்து சமாளிக்க வேண்டி வரும்!


**தேர்தல் இல்லாத நாட்களில் என்ன செய்வீங்க?**

கோயில் ஃபங்ஷன் இருந்துக்கிட்டே இருக்கும். ஆடி மாசம் பூராவும் அம்மன் கோயில்களிலே வேலை சரியாக இருக்கும். அப்புறம் விநாயக சதுர்த்தி, திருப்பதி கொடை... இப்படி ஏதாவது வந்துக்கிட்டே இருக்கும். இப்பத்தான் கோயில்களில் மேடை போட்டு, பக்திப் பாடல் கச்சேரி நிறைய பண்றாங்களே... அதுக்கு லைட்டு, மைக், சீரியல் செட் எல்லாம் கேட்பாங்க!

**— கிருஷ்ணா சிதம்பரம்**

படங்கள்: ஸ்ரீஹரி



2001 ஏப்ரல் 1
விக்ரம பங்குனி 19
மலர் : 59
இதழ் : 35

**கல்கி**

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்




# தி.மு.க கூட்டணி: தவறான தொடக்கம்!

ஒரு கட்சி எந்த சின்னத்தில் போட்டியிடுகிறது என்பது முக்கியமல்ல; எத்தனை தொகுதிகளில் போட்டியிடுகிறது என்பதும் முக்கியம் அல்ல. எத்தனை தொகுதிகளில் அது ஜெயிக்க முடியும் என்பதே அதிமுக்கியம்.

இவ்வாறு இருக்கையில், 155 தொகுதிகளைத் தங்கள் கட்சிக்கென வைத்துக் கொண்டு இதர இடங்களைப் பிற கட்சிகளுக்குக் கலைஞர் பாகப் பிரிவினை செய்திருப்பது, தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி வாய்ப்புகளைப் பாதிக்கக் கூடும்.

பாகப் பிரிவினைக்கு என்ன அடிப்படை என்று பார்த்தால், விஞ்ஞான ரீதியான காரணம் எதுவும் இல்லை. கடந்த சட்டமன்ற தேர்தலில் ஒரு இடத்தில்கூட ஜெயிக்காத கட்சிக்கு (ம.தி.மு.க) 21 இடங்கள் தரப்பட்டுள்ளது. ஆளுங் கட்சியைக் கடுமையாகக் குறை கூறி மோகன் கமிஷன் அறிக்கையைச் சட்டமன்றத்திலேயே கிழித்துப் போட்ட டாக்டர் கிருஷ்ணசாமியின் புதிய தமிழகத்துக்குப் பத்து இடங்கள்! ஊழல் குற்றச்சாட்டு தாங்கி நிற்கும் கண்ணப்பனின் மக்கள் தமிழ் தேசத்துக்கு ஆறு இடங்கள்! வன்முறை அமைப்பான விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஏழு! தரப்பட்ட அத்தனை தொகுதிகளிலும் இந்தக் கட்சிகள் வெற்றி பெற்று கலைஞரின் கரங்களைப் பலப்படுத்துமா? என்பது மிகவும் சந்தேகம்தான்.





கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது இருந்ததுபோன்ற ஜெயலலிதா எதிர்ப்பு அலை என்பது இப்போது இல்லை. அன்றைய (1996) நிலவரத்தில் வாக்கு கேட்டுப் பிரசாரம் செய்த அ.தி.மு.க வேட்பாளர்கள் பலர் தொகுதிக்குள்ளேயே அனுமதிக்கப்படாமல் விரட்டியடிக்கப்பட்டனர்!

இன்று எந்த எதிர்ப்பு அலையும் இல்லை; தி.மு.க ஆதரவு அலை என்பது பெரிய அளவில் இல்லை.

கடந்த ஐந்தாண்டுகளாக கலைஞர் வளர்ச்சி திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றினார்; உயர் மட்டத்தில் லஞ்ச - ஊழலைக் கட்டுப்படுத்தி வைத்திருந்தார்; தொழில் பெருக வகை செய்தார் என்பதெல்லாம் உண்மையே. ஆனால் இவற்றை மட்டும் சொல்லி வோட்டு வாங்குவது எளிதல்ல. பதினெட்டு கட்சிகள் கொண்ட ஒரு கூட்டணியைக் கட்டி மேய்த்து, தேர்தலில் ஓர் இலக்கு நோக்கி உழைக்கும்படி செய்தாக வேண்டும்.

கூட்டணி கட்சித் தலைவர்கள் யாவருமே பேரத்தைத் தவறான முனையில் தொடங்கியிருக்கிறார்கள். 'எங்களுக்கு இத்தனை இடங்கள் வேண்டும்'; 'இவை போதாது, மேலும் வேண்டும்...' என்று பகிரங்க மிரட்டல்களும் எதிர்ப்பும் அதிருப்தி தெரிவிக்கும் போராட்டங்களும்கூட நடந்திருக்கின்றன. கூடுதலாகக் கேட்டுப் பெற்ற தொகுதிகளில் ஜெயித்துக் காட்டுவோம் என்று யாரும் உத்தரவாதம் தரவில்லை! தோற்றுப் போனால், நஷ்டம் தனிக்கட்சிக்கு இல்லை; தமிழகத்துக்குத்தான்.

தா.ம.கவும் பா.மா.கவும் பிரிந்து போனதால், பல உதிரிக் கட்சிகளை இணைத்துக் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிய கலைஞர், தொகுதிப் பங்கீடு விஷயத்தில் இவர்களுக்கு ரொம்ப தாராளம் காட்டியிருக்கிறார். போதாக்குறைக்கு, எந்த தொகுதிகளில் எந்த கட்சி போட்டியிட வேண்டும் என்பது குறித்த விவாதமும் குழப்பமும் வேறு பாக்கியிருக்கிறது!




எனவே, இப்போதுகூட காலம் தாழ்ந்துவிடவில்லை. ஒவ்வொரு கட்சியும் தங்கள் வெற்றி வாய்ப்புகளைத் துல்லியமாக எடை போட்டுப் பார்த்து, அதற்கேற்ப தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளைக் குறைத்து அல்லது கூட்டிக் கொள்ளலாம்.

**எ**ல்லா குழப்பங்களும் அடங்கி, தேர்தல் பிரசாரப் பணிகள் தொடங்கிய பிறகு, பதினேழு பரிவார கட்சிகளும் தங்கள் வெற்றிக்காகப் பாடுபடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், இதர 155 தொகுதிகளில் போட்டியிடும் தி.மு.கவுக்குப் பக்கபலமாக இருக்குமா என்ற கேள்வியும் எழுகிறது. இதற்கு ஒரே பதில், 'கட்சி உணர்வுடன் செயல்படாமல், கூட்டணி உணர்வுடன் செயல்பட வேண்டும்' என்பதே.

அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஆலோசனை, பங்கேற்புடன் ஒரு பொதுச் செயல் திட்டம் வகுக்கப்படுமாயின் அனைவரையும் உணர்வு ரீதியாக ஒருங்கிணைக்க அது நிச்சயமாக உதவும். பிரசார பாணிக்கும் பிரசார கோட்பாடுகளுக்கும் அந்த செயல்திட்டம் அடிப்படையாக அமையும்.

சற்றும் தாமதியாமல் அப்படியொரு செயல்திட்டம் வகுக்க தி.மு.க தலைவர் முனைய வேண்டும்.

ஜெயலலிதா எதிர்ப்பு என்ற ஒரே பொதுக் கோட்பாடு மட்டும் இந்தத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுத் தராது.

மாறாக, பதினெட்டு கட்சிகள் இருந்தாலும் அவை ஒன்றுபோல் சிந்தித்துச் செயல்படுகின்றன என்கிற நம்பிக்கையை வாக்காளர்களுக்கு ஏற்படுத்த முடியுமானால்தான் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.

இத்தகைய செயல்திட்டத்துடனும் ஒன்றுபட்ட உணர்வுடனும் வாக்காளர்களை அணுகாமல், பதினெட்டு கட்சிகளும் தத்தமது வெற்றிக்காக மட்டுமே பாடு படுமேயானால், மக்கள் அந்த சுயநலப் போக்கைப் புரிந்து கொண்டு விடுவார்கள்!○

# சிலிர்க்க வைத்தார் சித்து!



கிரிக்கெட் பித்தரா நீங்கள்! இதுவரை நீங்கள் பார்க்காமலிருந்தால் இனிமேலாவது பாருங்கள் – ஈஎஸ்பிஎன்னில் ஹர்ஷா போக்லே நடத்தும் 'ஹர்ஷா ஆன்லைன்' நிகழ்ச்சியை. முந்தைய தலைமுறை கிரிக்கெட் சிங்கங்களைக் காணும்போதும் கேட்கும்போதும், இன்னும் சிறிது நேரம் இந்த நிகழ்ச்சி நீடிக்காதா என்ற ஏக்கம் ஏற்படுகிறது.

அற்புதமாக ஆங்கிலம் பேசக் கூடிய நவ்ஜோத் சிங் சித்து, உணர்ச்சி வசப்பட்டபோது மேலும் ஜொலித்தார். 'In our land cricket is not just a game. It is a religion!' என்று கூறியவர் இமாலய வடகோடியிலிருந்து குமரித் தென்கோடி வரையில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர், சீக்கியர், மேல் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பாகுபாடுகள் இன்றி அத்தனை கோடி மக்களையும் இணைத்து ஒருமைப்படுத்தும் ஒரே விளையாட்டு இதுதான் என்று என்னமாய் மெய்சிலிர்க்கப் பேசினார்!

On the field, அஜாருதீனுடன் தகராறுகள் வந்தபோதிலும், off the field, தாங்கள் நெருங்கிய நண்பர்கள் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார் சித்து. காசு செலவழிப்பதென்றால் அஜாருக்கு மனமே

ரிமோட்

வராதாம். ஒருமுறை டெல்லியில் ஓர் இந்திப் படத்துக்கு இருவரும் போன சமயம், ஐந்து ரூபாய் டிக்கெட்டுக்கு இருபது ரூபாய் கேட்டார்களாம். வேண்டவே வேண்டாம் என்று அஜார் திரும்பவே, தாமே டிக்கெட் வாங்கி அவரை வலுக்கட்டாயமாக அழைத்துப் போனதைச் சொல்லிவிட்டு, 'திரைக்கு மிக அருகே முன் வரிசைப் பெஞ்ச்சாக இருந்ததால், ஹீரோயின் மீனாட்சி சேஷாத்திரி குண்டு குண்டாகத் தெரிந்தது இன்னும் நினைவிருக்கிறது' என்று சிரித்தார் சித்து.

'பாரதி' என்ற புதிய தமிழ் சேனலை முழு மூச்சாக ஆரம்பித்து விட்டார்களா அல்லது வெள்ளோட்டக் கட்டத்திலேயே நின்றிருக்கிறதா? யாரேனும் சொன்னால் தேவலை. மழை மழையாகத்தான் வந்து கொண்டிருக்கிறது திரையில். அதுகூடப் பரவாயில்லை. 'சினி வியூ' என்ற தலைப்பில் 'பிரியா வரம் வேண்டும்' படத்தை விமர்சனம்(!) செய்த அழகு இருக்கிறதே. அது போல எங்கேயும் எப்போதும் பார்க்க முடியாது.

தொகுத்து வழங்கும் பெண், 'பிரசாந்தும் ஷாலினியும் சிறு வயது முதலே சிநேகிதர்கள். அவர்கள் குடும்பமும் அப்படித்தான்...' என்று இரண்டு வரி சொல்கிறார். உடனே சில காட்சிகள் – பேச்சோ பாட்டோ இல்லாமல் ஊமையாக! தொடர்ந்து 'பணக்கார வாலிபனான கிருஷ்ணாவும் ஷாலினியைக் காதலிக்கிறார்...' என்று சில வரிகள் சொல்கிறார் தொ.வ.பெண். மீண்டும் ஊமைக் காட்சிகள். பாத்திரங்கள் வாயைத் திறப்பதும் மூடுவதும் கைகாலை அசைப்பதும் ஆட்டுவதும்...!

Speech is silver; silence is golden என்கிற ஜெர்மன் பழமொழியைப் போற்றுகிறார்கள் போலும்.

கல்கி, ஹிந்து, எக்ஸ்பிரஸ் முதலான எல்லாப் பத்திரிகைகளும் 'ஆயுத பேர ஊழல்' என்று குறிப்பிட்டுத் தலையங்கத்தில் கண்டித்தாயிற்று; சோனியா முதல் ஜெயலலிதா வரை எல்லாரும் 'ஆயுத பேர ஊழல்' என்று சொல்லியாயிற்று; கம்யூனிஸ்ட் கட்சி முதல் த.மா.கா வரை எல்லாரும் 'ஆயுத பேர ஊழல்' என்று குற்றம் சாட்டியாயிற்று; மூன்று மந்திரிகள் ராஜினாமா செய்தாயிற்று; இரண்டு ராணுவ அதிகாரிகளை சஸ்பெண்ட் செய்தாயிற்று; விசாரணை நடத்துகிறோம் என்று பிரதம மந்திரி உறுதியளித்து, உச்சநீதிமன்றத்தின் உதவியைக் கோரியாயிற்று. எல்லா டீ.வி.யிலும் 'ஆயுத பேர ஊழல்' என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஸன் செய்திகளில் மட்டும் 'போலி ஆயுத பேர ஊழல்' என்றே குறிப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எங்கேயிருந்து அந்தப் 'போலி' வந்து ஏன் ஒட்டிக் கொண்டது? Every why hath a wherefore என்று ஷேக்ஸ்பியர் பாட்டுக்குச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். ஆனால் விளங்கிக் கொள்ள முடியாத மர்மங்களும் உலகில் உண்டு.

ரொம்ப சீரியஸ் மனிதர் மாதிரி பாசாங்கு செய்பவர் யூகி சேது. நையாண்டி தர்பாரில் ஆஜரான டெல்லி கணேஷ் turned him inside out. தேவையில்லாமல் மாட்டிக் கொண்ட அனுபவமொன்றை அவர் சொன்னபோது சேதுவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

'52'ம் நம்பர் தெரு எங்கே இருக்கிறது?' என்று ஒரு அம்மையார் கணேஷிடம் கேட்டாராம். தெரியாது என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுப் போகத் தெரியாமல், யோசித்ததும் ஊகித்ததும், தெருவில் போவோர் வருவோரிடமெல்லாம் விசாரித்ததும், பொறுக்க மாட்டாமல் அந்த அம்மாள் 'பரவாயில்லீங்க. நான் பார்த்துக்கிறேன்' என்று புறப்பட்டால் கூடத் தடுத்து நிறுத்தியதும், வாசல் நிறையக் கூட்டம் சேர்ந்ததும் புராணம் புராணமாக டெல்லியார் விவரித்து முடிப்பதற்குள் தர்பார்க்காரர் சிரிப்புத் தாங்காமல் மேஜை மீது தலையைக் கவிழ்த்துக்கொண்டு குலுங்கியது கண் கொள்ளாக் காட்சி!

வினோத்



# லக்ஷ்மணருக்கு கீதோபதேசம்!

**தோ**ற்கப் போகிறோம், தோற்கப் போகிறோம் என்று புலம்பிக்கொண்டே ஜெயித்து விட்டோம்!

வின்னிங் ஷாட்டை ஹர்பஜன் சிங் அடித்தவுடன், ஐம்பதாயிரம் பார்வையாளர்களும் ஒருமித்து 'ஸ்பிரிங்'ஐப் போல இருக்கையை விட்டு எழுந்து ஆரவாரித்த காட்சி கிரிக்கெட்டில் ஆர்வம் இல்லாதவர்களையும் மெய்சிலிர்க்க வைத்தது!

இந்தியாவின் ஹீரோக்கள் கங்குலி, லக்ஷ்மண், ஹர்பஜன் யாராவது அகப்பட மாட்டார்களா என்று ஸ்டேடியத்தை 101 பிரதட்சணம் வந்த பிறகு, லக்ஷ்மண் சிக்கினார்...!

"இந்தச் சாதனை என்னை நிறைய மாற்றியிருக்கிறது. சிந்திக்க வைத்திருக்கிறது. கோல்கத்தா போட்டியின்போது, சச்சின் என்னிடம் சொன்னார் – 'நீ ஆடியது பெரிய விஷயமல்ல. வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம். இனிமேல் நீ எப்பொழுது ஆடினாலும், சீக்கிரம் அவுட்டாகிவிட்டால், ரசிகர்களால் தாங்க முடியாது. கவனமாக ஆடி, அவர்களுடைய எதிர்பார்ப்பை ஒவ்வொரு முறையும் பூர்த்தி செய்!' என்று.



"இது, கிருஷ்ணன் அர்ஜுனனுக்குச் சொன்ன கீதோபதேசம் மாதிரி எனக்கு. இனிமேல் இருநூறு பர்சென்ட் கவனத்துடன் ஆடப் போகிறேன்!" என்றவரிடம், "நீங்களும் காதல் வலையில் விழுந்து விட்டதாகச் செய்தி அடிபடுகிறதே..." என்று மென்று விழுங்கினோம். "ஏன் விழக்கூடாதா...? என் காதலி கிரிக்கெட்தான்!" என்றார் உப்புச் சப்பில்லாமல். "அதில்லை..." என்று நாம் இழுக்க, ஒரே நொடியில் எஸ்கேப் ஆகிவிட்டார்.

**— உமா மணி**

படங்கள்: **கே.வி. சீனிவாசன்**

உ



# ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத ஸ்ரீஸற்குணேச்வரர் ஆலயம் ஸற்குணேஸ்வரபுரம் : கருவிலி – 609 501.

# ஸம்வத்ஸராபிஷேகம்

அன்புடையீர்!

நிகழும் விக்ரம வருஷம் பங்குனி மாதம் 27-ஆம் தேதி திங்கட்கிழமை (09.04.2001) ஸ்வாதி நஷத்திரம் கூடிய நன்னாளில் **ஸர்வாங்க ஸுந்தரி** உடனுறை **ஸ்ரீஸற்குணேச்வரப் பெருமானுக்கும்,** மற்ற பரிவார தேவதைகளுக்கும் **நாலாவது ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா** இறையருள், குருவருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.

**ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் (09.04.2001)**

| | | |
|---|---|---|
| காலை | மணி 7.30 – | புண்யாஹவசனம் அனுக்ஞை, மஹாஸங்கல்பம் |
| " | மணி 8.00 – | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், கலச ஸ்தாபனம், ஸ்தாபன பூஜை |
| " | மணி 9.00 – | நவக்ரஹ ஹோமம் |
| " | மணி 10.00 – | ஜபம் – பாராயணம், பூஜை – ஹோமம் |
| பிற்பகல் | மணி 12.00 – | பூர்ணாஹுதி |
| " | மணி 12.30 – | மஹாபிஷேகம் |
| " | மணி 1.30 – | ஸ்வாமி, அம்பாளுக்கு ஸஹஸ்ரநாமம் |
| " | மணி 2.00 – | மஹாதீபாராதனை |

அனைத்து வைபவங்களும் சிவாகம சிரோமணி, அலங்கார கலாரத்தினம் வடகுடி **ஸ்ரீ D. கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார்** தலைமையில் திருக்கோயில் அர்ச்சகர் சிவத்திரு **பா. நாகராஜ சிவாச்சாரியார்** மற்றும் பல சிவாகம விற்பன்னர்கள் துணையுடன் நடைபெற இருக்கின்றன.

ஸற்குணேச்வரபுரம்
கருவிலி–609 501
3.3.2001

**Dr. V. கிருஷ்ணமூர்த்தி**
பரம்பரை தர்மகர்த்தா

இங்ஙனம்,
**ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா**
கும்பகோணம்

பி.கு : பொருளாகவோ, பணமாகவோ நன்கொடைகள் அளிக்க விரும்புகிறவர்கள் கீழ்கண்ட முகவரிகளுக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

*ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா*

1. ஸ்வாமி ஸ்ரீ ஸச்சிதானந்தா,
ஸ்ரீ ஸற்குணேச்வரர் திருக்கோயில்
ஸற்குணேச்வரபுரம், ஏரவாஞ்சேரி (வழி) – 609 501.
Ph: (04366) 73800

2. G. குஞ்சிதபாதம், F.C.A.,
G. நடேசன் & Co.,
டபீர் மேலத் தெரு, கும்பகோணம் – 612 001.
Ph: (0435) 420047

3. G.கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை, கே. கே. நகர், சென்னை – 78. Ph: 4848995

# பெண் பார்த்துக் கொடுக்கும்

சுயம்வரா டாட் காம்.

வெப்சைட்.

முடியாட்சி காலத்தில் நடைமுறையில் இருந்த, சுயம்வரம் மூலம் மனசுக்குப் பிடித்த மணாளனைத் தேர்வு செய்யும் திருமண முறையைப் போலவே, வரன்கள், நேரடியாக, தைரியமாக, கூச்சமோ வெட்கமோ இல்லாமல் உலாவரக்கூடிய வெப்சைட்.

மணமகன் – மணமகள் பற்றிய முக்கியமான தகவல்கள் ஆறு பிரிவுகளாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில், 'Close to your heart' என்ற ஆறாவது பகுதி மிக முக்கியமானது. இதில், 'likes' என்ற பகுதியில், மணமக்கள், தங்களுக்குப் பிடித்த விஷயங்களையும் 'dislikes' என்ற பகுதியில் பிடிக்காத விஷயங்களையும் குறிப்பிடுகிறார்கள். 'Expects a partner who is....' என்ற பகுதியில் தங்களின் எதிர்பார்ப்பை சங்கோஜம் இல்லாமல் சொல்லி விடுகிறார்கள். இந்தப் பகுதியைப் படித்த மாத்திரத்தில், மணமகன் அல்லது மணமகள் பற்றி நிறைய புரிந்து கொள்ள முடிகின்றது.

வரன்களின் முகவரி, தொலைபேசி எண், ஈமெயில் முகவரி, மூன்று தகவல்களும் தரப்படுகின்றன. ஈமெயில் மூலம் உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களைத் தொடர்பு கொண்டு, விருப்பத்தைத் தெரிந்து கொண்டு விடலாம்.

முக்கியமான விஷயம், ஒவ்வொரு வரனின் கலர் புகைப்படமும் தளத்தில் இடம்பெறுகின்றது என்பது. தளத்தில் இடம்பெறுவதற்கு உண்டான கட்டணம் ஐந்நூறு ரூபாய்தான். தளத்திற்குள் யாரும் இலவசமாகப் புகுந்து வரன்களைத் தேடலாம்.

வெப்சைட் ஆரம்பித்த நாலே மாதங்களுக்குள் இருபத்தைந்து ஜோடிகளை இணைத்துவிட்டார்கள்.

இந்த வெப்சைட்டின் உரிமையாளர்கள் யார்? அமர்நாத்தும், செந்தில்குமாரும்.

இருபத்தைந்து வயதான இருவரும் ஒன்றாம் வகுப்பிலிருந்து உயிர் நண்பர்கள்.

"இப்படியொரு வெப்சைட் தொடங்கப் போகிறோம் என்று வீட்டில் சொன்னதும், அப்பா, அம்மா, தாத்தா எல்லோரும் கூட்டணி அமைத்து எதிர்த்தார்கள். 'திருமணத்தைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? கல்யாண விருந்துக்கு, பூச்சி வெட்டாத வாழை இலை வாங்கி வரத் தெரியுமா?' என்று கிண்டல் செய்தார்கள். ஆனால் நாங்கள் காரியத்தில் குறியாக இருந்தோம்" என்கிறார்கள்.

இப்படி ஒரு வெப்சைட் நடத்த வேண்டும் என்று இவர்களுக்கு எப்படித் தோன்றியது?

"தரகர் மூலம் நடந்த எங்கள் இரு அண்ணன்மார்களின் திருமணங்களும் எங்களுக்குள் ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டன. தரகர்கள், திருமணத்தைப் பேரமாக்கி, பெண் வீட்டார் மற்றும் மாப்பிள்ளை வீட்டார் ஆகிய இருவரிடமும் பணம் பறிப்பதிலேயே குறியாக இருப்பது புரிந்தது. சொர்க்கத்தில் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை நடத்தி முடிக்க, இடையில் இருப்பவர்கள் ஏன் இத்தனை களேபரம் செய்ய வேண்டும் என்று கோபம் வந்தது.

"அப்போதுதான் எல்லாத் துறைகளிலும் இணையதளங்கள் புற்றீசல்கள் போல கிளம்பின. திருமண தகவல் தளங்களும் இதில் அடக்கம் என்றாலும் அவை பிரபலமாகவில்லை. அவை பிரபலமாகாத காரணங்களைக் கண்டறிந்து, அவற்றைக் களைந்து, நாமே ஒரு புது தளம் தொடங்கினால் என்ன என்று தோன்றியது.

"'எ அண்டு எஸ் டிசைன் ஸ்டுடியோ' என்ற டிசைனிங் தொழில் நிறுவனத்தை

• பிரம்மச்சாரி கூட்டணி... அமர்நாத், செந்தில்குமார்



# ...ச்சாரிகள்!

> “சொர்க்கத்தில் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை நடத்தி முடிக்க, இடையில் இருப்பவர்கள் ஏன் இத்தனை களேபரம் செய்ய வேண்டும் என்று கோபம் வந்தது!”



• 24 மணி நேரத்தில் முடிவான திருமணம்...



• காதல் நெருப்பு...

வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வந்த எங்களுக்கு, இந்தத் திறமையை வைத்துக் கொண்டு, கூடுதலாக சமுதாயத்துக்கு ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்ற ஆசை ரொம்ப நாளாகவே இருந்தது.

"அதனால், உடனே தளத்தை ஆரம்பிக்க முடிவு செய்தோம்.

"விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு ஒவ்வொரு திருமணத் தளத்திற்குள்ளும் புகுந்து துருவினோம். கண்களில், பளீர் என்று முதலில் பட்ட முதல் குறை, வரன்களின் புகைப்படம் இல்லாதது. வயது, நிறம், உயரம், எடை, ஜாதி, வேலை, மாதச் சம்பளம் இவைதான் வரன்களைப் பற்றிக் கொடுக்கப்பட்டிருந்த தகவல்கள்.

அதோடு, வரன்கள் பொருந்தி நிச்சய தார்த்தம் வரை போய் விட்டால், கறாராக கமிஷனை வசூல் செய்யும் ஹைடெக் தரகுத் தொழில்தான் இங்கேயும் நடக்கிறது என்று கேள்விப்பட்டோம்.

"இதைப் போன்று இன்னும் என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

"ஒரு சந்தை ஆய்வு – மார்க்கெட் ஸ்டடி செய்து பார்த்துவிட வேண்டும் என்று முடிவு செய்தோம்.

"திருமணத்திற்குத் தயாராக இருந்த ஐந்நூறு இளம்பெண்கள் மற்றும் இளைஞர்களை அபிப்ராயம் கேட்டோம்.

" 'மிகக் குறைந்த தகவல்களை வைத்துக் கொண்டு புகைப்படமும் இல்லாத நிலையில் தொடர்பு கொண்டு, எதிர்பார்த்த வரன் கிடைக்காத பட்சத்தில், விட்ட இடத்திலிருந்து தொடங்க வேண்டி இருக்கிறது!' என்று இளைஞர்கள் சுட்டிக்காட்டினார்கள். 'முகவரி கொடுத்து விட்டால், கணக்கற்ற தொந்தரவு தருகிறார்கள். அதே சமயம், முகவரி கொடுக்காவிட்டால் எந்தப்

பிரயோஜனமும் இல்லாமல், கிணற்றில் போட்ட கல் மாதிரி, நமது தகவல்கள் வீணாகக் கிடக்கின்றன" என்று சொன்னார்கள்.

"இணைதளத்தில் தெளிவான, விவரமான திருமணத் தகவல்களைப் பெற்று, நேரடியாக வரனோடும், வரனின் பெற்றோர்களோடும் தொடர்பு கொள்ள, தளம் ஒரு பாலமாக மட்டுமே செயல்பட வேண்டும். அதே நேரத்தில், தகவல்களுக்கான பாதுகாப்பும், பிரசென்டேஷன் வேல்யூவும் இருக்க வேண்டும் என்று முடிவு செய்து ஆரம்பித்ததுதான் சுயம்வரா டாட் காம்.

"நாங்கள் வசூலிக்கும் கட்டணம் கூட, பதிவுசெய்து கொண்டவர்கள் பொறுப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்!" என்கிறார்கள் அடக்கத்துடன்.

இதே தளத்தில், இரண்டு ஜாதகங்களின் பத்துப் பொருத்தங்களை உடனுக்குடன் பார்த்துக் கொள்ள வசதி இருக்கிறதாம். மேற்கத்திய ஸ்டைலில் 'ஜோடியாக் சைன்க'ளின் பொருத்தத்தையும் பார்த்துக் கொள்ளலாமாம்.

இந்திய திருமண முறைகள் பற்றியும் இல்லற வாழ்வியல் முறைகள் குறித்தும், புது மண வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும் இளம் உள்ளங்களுக்குப் பயன்படும் வகையில் ஒன்பதுவிதமான அனுபவத் தொடர்களும் களத்தில் உண்டு.

திருமணத்தை நடத்தி முடிக்க தேவைப்படும் திருமண மண்டபங்கள் பற்றியத் தகவல்களிலிருந்து, கோயம்பேடில் தினசரி காய்கறி விலைகள் வரை இவர்கள் தரும் தகவல் சேவை வியக்க வைக்கிறது. அதே போல், திருமண அழைப்பிதழ்களுக்காக, எங்கும் அலைந்து திரிய வேண்டிய அவசியம் இல்லை. பல நூறு டிசைன்களை தளத்திலேயே ஸ்கேன் செய்து வைத்திருக்கிறார்கள். விரும்பும் டிசைனை உலகெங்கும் உள்ள நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் இலவசமாக அனுப்ப வழிசெய்திருக்கிறார்கள்!

**சு**யம்வரா டாட் காம் மூலம் சமீபத்தில் மணம் முடித்துக் கொண்ட அரக்கோணம் தம்பதி ஹரிகிருஷ்ணா – நர்மதா.

"எல்லா திருமணத் தளங்களையும் போலத்தான் இதுவும் இருக்கும் என்று உள்ளே நுழைந்தோம். வெப்டிசைனே அசத்தலாக இருந்தது. வரன்களை நேரே சந்தித்து அவர்களோடு உரையாடியது போல இருந்தது. நாங்கள் இருவரும், இருபத்து நான்கு மணி நேரத்தில் பரஸ்பரம் தொடர்பு கொண்டு, எங்கள் எதிர்பார்ப்புகளைப் பரிமாறிக் கொண்டோம்" என்கிறார்கள்.

இந்த வெப்சைட் விளம்பரத்திற்கு, ப்ரீதா, வெங்கட் ஆகிய இரண்டு டீவி நட்சத்திரங்கள் மணமக்களாக மாடலிங் செய்ய வந்திருக்கிறார்கள். வந்த இடத்தில் காதல் நெருப்பு பற்றிக் கொள்ள, இருவருக்கும் இப்போது நிச்சயதார்த்தம் நடந்து விட்டதாம். இதுதான் சுயம்வரா டாட் காமின் கல்யாண ராசி என்று சொல்கிறார்கள் அமர்நாத்தும் செந்தில்குமாரும்!

சந்திப்பு : **ஆர். சி. ஜெயந்தன்**
படங்கள் : **கோபி**

# KALKI SHOPPING PAGE



# வளர்ந்துவிட்ட இளைஞர்!

தி.மு.க.வின் எதிர்காலத் தலைமை பற்றி கேள்வி எழும்போதெல்லாம் "தி.மு.க. மடமல்ல. இது ஒரு ஜனநாயக இயக்கம்" என்று பதில் சொல்லுவார் கலைஞர். இருந்தாலும் பேராசிரியர் போன்ற மூத்த தலைவர்களே இப்போது ஸ்டாலின் தலைமை பொறுப்பேற்பதைப் பற்றி வரவேற்கத்தக்க அளவில் அவ்வப்போது பேசி வருகிறார்கள். அப்படி அவர்களைப் பேச வைக்கும் அளவுக்கு ஸ்டாலினும் தம்மை வளர்த்துக் கொண்டுள்ளார்.


'மிஸா'வில் ஓராண்டு காலம் சிறைக் கொடுமைகளை அனுபவித்து, கடந்த 25 ஆண்டுகளில், முட்களிலும் மலர்களிலும் தடம் பதித்து வந்திருக்கிறார் ஸ்டாலின். இவரை முன்னிட்டு 1992ல் கழகத்தில் ஒரு பிளவு. அந்தச் சறுக்கலிலிருந்து மீண்டு, கழகத்தவர் அனைவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவில் பணியாற்றி, நாற்பது லட்சம் தொண்டர்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கிறார்.

மாவட்டச் செயலாளர் தேர்தலில் தமக்கு வேண்டியவர்களாகப் பார்த்து நிறுத்தி தேர்ந்தெடுக்கச் செய்ததில் இன்று ஸ்டாலின் என் என்பதற்குள் எண்ணெயாக நிற்கிறார்கள் ஐம்பது மாவட்டச் செயலாளர்கள்.

''அவருடைய அணுகுமுறைகள் ரொம்பவும் பண்பட்டுப் போய்விட்டன. கலைஞர், ஸ்டாலின் வயதில் இருந்தபோது அவரிடம் ஓர் அதிரடி வேகம் இருந்தது. இன்று ஸ்டாலினிடம் அப்படிப்பட்ட வேகம் இல்லை. அது ஒரு பெரிய குறையல்ல. தொண்டர்களின் பிரச்னைகளைக் காது கொடுத்துக் கேட்கிறார். ஒரு குறிப்பிட்ட நண்பரைத் தவிர வேறு யாரையும் அருகில் சேர்த்து 'எனக்கு வேண்டியவர்' என்று கழகத்தவருக்கு உணர்த்துவதில்லை. தெருவில் இறங்கி, தொண்டர்களுடன் போராட்டம் நடத்தத் தயங்குவதில்லை. அதற்குச் சமீபத்திய உதாரணம், இலங்கைத் தூதரகத்துக்கு முன் நடந்த ஆர்ப்பாட்டம். இரண்டே நாளில் இளைஞரணியை முடுக்கி விட்டு தயார்ப்படுத்தி

விட்டார் ஸ்டாலின். அன்று ஆர்ப்பாட்டத்துக்கு வந்திருந்த கழக முன்னணியினரைப் பார்த்தபோது ஸ்டாலின் பின்னால் அணிவகுக்க கழகத்தவர் தயாராகிவிட்டது பளிச்சென்று புரிந்தது. கூட்டத்திற்குள் செல்லும்போது தமக்கென தனி வழி ஏற்படுத்தக் கூடாது என்றும், தொண்டர்களோடு இணைந்து நடக்க விரும்புவதாகவும் சொன்னார் ஸ்டாலின்...'' என்று மகிழ்ச்சி அடைகிறார்கள் இளைஞரணித் தலைவர்கள்.


**ஸ்**டாலினுடைய வயதில் அவரது தந்தை கலைஞர் முதல்வராகிவிட்டார். எளிமையான குடும்பத்தில் பிறந்து, போராட்டமே வாழ்க்கையாக வழி நடத்திச் செல்ல, உச்சாணிக் கொம்பைப் பிடித்தவர் கலைஞர். அவர் காலத்தில் மெத்தப் படித்த, சமுதாய பின்பலம் உள்ள மற்ற சக தி.மு.க. பிரமுகர்களோடு போட்டி போட்டு முன்னணிக்கு வர வேண்டியிருந்தது. அதற்கு அவருக்குப் பக்கபலமாக இருந்த அம்சங்கள் அவரது உணர்ச்சிக் கொந்தளிப்பான பேச்சும் எழுத்தும். அப்போது நடந்தது ஒரு ஆரோக்கியமான போட்டி. "கழகத்தைப் பட்டி தொட்டிகளில் வளர்ப்பதும், அண்ணாவிடம் பாராட்டுப் பெற உழைப்பதுமே லட்சியமாக இருந்த நாட்கள் அவை. உழைப்பு அவரை உயரே கொண்டு சேர்க்க, தமது யுக்திகளால் அதை ஸ்திரப்படுத்திக் கொண்டு விட்டார் கலைஞர். ஆனால் இன்று ஸ்டாலினுக்கு அந்த நிலை இல்லை. தங்கத் தட்டில் அனைத்தும் தயாராக இருக்க, தம்மைத் தகுதி படைத்தவராக மட்டும் மாற்றிக் கொள்ள வேண்டிய நிலை அவருக்கு.




''பேச்சையும், எழுத்தையுமே மூச்சாகக் கொண்டுள்ள திராவிட இயக்கத்தில், அந்த இரு அம்சங்களிலும் தம்மை இன்னும் நிரூபித்துக் கொள்ளாத நிலையிலே ஸ்டாலின் இருக்கிறார்'' என்கிறார்கள் மூத்த கழகப் பிரமுகர்கள். "அவரால் தொண்டர்களின் ரத்தத்தைச் சூடேற்றும்படியாகப் பேச முடியுமா என்பது சந்தேகமே! அதுபோன்றே அவரது எழுத்தாற்றலும் இதுவரை பளிச்சிட்டதில்லை'' என்கிறார்கள் அவர்கள்.

''அதெல்லாம் அந்தக் காலம். இன்றைய காலகட்டத்துக்குத் தேவையானது செயல்தான். கலைஞர் எப்படி நல்ல நிர்வாகி என்று பெயர் வாங்கியிருக்கிறாரோ அதேபோன்று சென்னை மாநகராட்சி நிர்வாகத்திலும் தமது முத்திரைகளைப் பதித்து அப்பாவின் வாரிசு என்று நிரூபித்திருக்கிறார் அவர்'' என்கிறார்கள் ஸ்டாலினின் இளைஞர் அணி சகாக்கள்.

"கோப்புகள் பார்ப்பதிலும் முடிவெடுப்பதிலும் மிகவும் சுறுசுறுப்பைக் காட்டுபவர் மேயர். உதாரணமாக, நகரில் சில பகுதிகளில் குப்பை அகற்றும் பணியைத் தனியாரிடம் ஒப்படைக்கும் முடிவைத் துணிந்து எடுத்தார். அட்டகாசமான பாலங்கள் கட்டியது தவிர, மாநகராட்சி பள்ளிகளின் தரத்தையும், மாநகராட்சி மருத்துவமனைகளின் நம்பகத்தன்மையையும் உயர்த்தியிருக்கிறார் மேயர். அடிக்கடி மீட்டிங், இன்ஸ்பெக்ஷன் என்று அதிகாரிகளை எப்போதும் விழிப்புடன் வைத்திருக்கிறார். வெளியூர்களில் இருந்தாலும் தினசரி இருமுறை தொலைபேசியில் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு விசாரிக்கிறார். அப்பாவைப் போலவே காலையில் தினசரி பத்திரிகைகளைப் படித்தபிறகு அவற்றில் மாநகராட்சியைப் பற்றி ஏதேனும் குற்றம் குறைகள் சொல்லப்பட்டிருந்தால் விசாரிக்கிறார். இந்த ஐந்து வருட காலத்தில் யாரிடத்திலும் உரத்த குரலில் பேசி கோபப்பட்டதில்லை. கடைநிலை ஊழியரிடத்திலும் கனிவாக நடந்து கொள்வார். இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட, வருட பட்ஜெட் எழுநூறு கோடியாக இருக்கும் சென்னை மாநகராட்சி, ஒரு குட்டி மாநிலத்துக்குச் சமமானது. இங்கே தமது திறமையை நிரூபித்த மேயர் இன்னமும் உயர





மான இடத்துக்குச் செல்லத் தயாராகி விட்டார்'' என்கிறார் மாநகராட்சியின் உயர் அதிகாரி ஒருவர்.

ஆனால் அதிகாரிகளின் இந்த மதிப்பீட்டைக் கிண்டலடிக்கிறார் மாநகராட்சியின் எதிர்கட்சித் தலைவரும் த.மா.கா. பிரமுகருமான வெற்றிவேல். "அதிகாரிகள் சொல்லும் இடத்தில் கையெழுத்துப் போடுவதைத் தவிர வேறொன்றும் அவருக்குத் தெரியாது. உதாரணமாக, சாலைகளைத் தோண்டி சென்னையில் பாதாளச் சாக்கடை சரி செய்யும் வேலையும் இண்டர்நெட் கேபிள் போடும் வேலையும் நடந்து வருகிறது. ஆனால் மாநகராட்சிக்குத் தெரியாமல் நேரடியாக அரசே இந்த வேலைகளைச் செய்கிறது. சாலைகள் மாநகராட்சி வசம் இருக்கும் நிலையில், இவர்களது நிர்வாக லட்சணம் இதுதான். அதே போல் பாலங்களில் ஊழல் என்று கட்டிக் காட்டினால், 'அதெல்லாம் கிடையாது. மாநகராட்சி கவுன்ஸிலே கட்டுமான முறையில் குறைகள் இல்லை என்று சொல்லிவிட்டது' என்கிறார். கவுன்ஸில் அங்கிகாரம் கொடுத்தது பாலங்கள் கட்டுவதற்குத்தான் என்பதும், ஊழல்கள் பற்றி விவாதம் கவுன்ஸில் கூட்டத்தில் நடக்கவேயில்லை என்பதும் அவருக்குப் புரியவில்லையே!'' என்று கேட்கிறார் வெற்றிவேல்.



கழகத்தவர் உட்பட பலர் ஒப்புக் கொள்ளும் ஒரு விஷயம், மாநகராட்சி கவுன்ஸில் கூட்டங்களில் எதிர்க்கட்சிகளைச் சமாளிக்கும் அளவுக்கு வாதங்களை வைப்பதற்கும் சமயோசித பதில்களைச் சொல்வதற்கும் தம்மை ஸ்டாலின் இன்னமும் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான்.

தேர்தலுக்குப் பிறகு தமது செல்வாக்குக்கு ஆபத்து ஏற்படாத நிலையை உருவாக்குவதில் முனைந்திருக்கிறார் ஸ்டாலின். பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்ததில் ஸ்டாலினின் பங்கு கணிசமானது. குறிப்பாக விடுதலைச் சிறுத்தைகள், கண்ணப்பனின் தமிழ் தேசம் ஆகியவற்றோடு பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவற்றை இணைத்து, கழக அணியைப் பலப்படுத்தியிருக்கிறார். தி.மு.க. 150 தொகுதிகளுக்கும் மேல் போட்டியிட வேண்டும் என்பதும் அவரது விருப்பம். புதிய நீதிக் கட்சியையும் வளைத்துப் போடும் முயற்சியில் கடுமையாக இறங்கியிருக்கிறார்.

கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கலைஞரிடம் சீட்டுகள் பற்றிப் பேசச் சென்றபோது ஸ்டாலினும் கூடவே இருந்திருக்கிறார். தந்தை எப்படி பிரச்னைகளை எதிர்கொள்கிறார் என்பதைப் பக்கத்திலேயே இருந்து பார்த்துப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு!

ம.தி.மு.க.வுக்கு இடங்கள் ஒதுக்கிய விவகாரத்தில் ஸ்டாலின் பெயரை டேமேஜ் செய்யப் பார்த்தார்கள்.

"வைகோ தலைமையில் நாங்கள் தனி இயக்கம் நடத்தினாலும், எதிர்காலத்தில் ஸ்டாலினுக்கு வைகோ ஒரு சவாலாக இருப்பார் என்ற அனுமானத்தின் அடிப்படையில் நிழல் சண்டைகள் நிறைய நடக்கின்றன..." என்றார் ஒரு மூத்த ம.தி.மு.க. பிரமுகர்.

''எனவே வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் எங்களை அமுக்கும் வேலைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.'' என்கிறார்.

இதற்கிடையில் அடுத்த கட்டமாக, இளைஞர் அணியினர் மற்றும் தமது ஆதரவாளர்களை வேட்பாளர்களாக்குவதில் தீவிரமாக இறங்கியிருக்கிறார் ஸ்டாலின். 'இதுதான் தமது கடைசி தேர்தல்' என்று கலைஞர் சொல்லி விட்டதால், தமக்கு இணக்கமாக இருப்பவர்களை செலக்ட் செய்யும் சுதந்திரம் ஸ்டாலினுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று இளைஞர் அணியினர் சொல்கிறார்கள்.

**- ப்ரியன்**

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

# ம.தி.மு.க. பாதை எங்கே...?

**- எல். கணேசன்...**

**தி.மு.க.வுடனான தொகுதி உடன்பாட்டில் எதிர்பார்த்ததை விடவும் அதிகமான தொகுதிகளைப் பெற்றிருக்கிறீர்கள். இந்த எண்ணிக்கை உங்கள் கட்சியின் வளர்ச்சியை முன்னிட்டு வழங்கப்பட்டதா அல்லது உங்கள் பொதுச்செயலாளர் உள்ளிட்ட ம.தி.மு.கவினர் பலரது நிர்ப்பந்தத்தால் கொடுக்கப்பட்டதா?**

கூட்டணித் தலைவரான கலைஞர், அணியில் இடம் பெற்றிருக்கக் கூடிய அத்தனை கட்சிகளின் பலம், வளர்ச்சி, வாக்கு வங்கி பற்றிய தெளிவான நிலைகளை விரல் நுனியில் வைத்திருப்பவர். ம.தி.மு.க.வைக் கூர்ந்து கவனித்து வரும் மகத்தான தலைவர். அவரது எண்ணமெல்லாம் தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி இழுபறி இல்லாத முழு வெற்றி பெற வேண்டும் என்பது தான். இதை மனத்தில் வைத்து அவர் முடிவெடுக்கிறார். அது எல்லா தரப்பாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

**தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் ம.தி.மு.க. பெரிய கட்சியா, பாரதிய ஜனதா பெரிய கட்சியா என்ற ஈகோ போரால் தானே பா.ஜ.க.வுக்குக் கொடுத்த இரண்டு இடங்களைத் திரும்பப் பெற்று உங்களைச் சமாதானப்படுத்தியிருக்கிறார் கலைஞர்?**

ஈகோ என்பது எங்களிடத்தில் துளியும் இல்லை. யாரோடும் எங்களை ஒப்பிட விரும்பவில்லை. ஆனால் கடந்த ஆண்டுகளில் கடுமையாக உழைத்து கட்சியை வளர்த்திருக்கிறோம். இன்று கிளைகள் இல்லாத கிராமமே இல்லை என்று சொல்லிவிடலாம். கடந்த ஒன்றரை மாதங்களில் முப்பது மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறார் வைகோ. எங்கள் களப்பணியை கண் கூடாகப் பார்க்கிறார் கலைஞர். இந்தப் பார்வைக்குக் களங்கம் கற்பிக்க நினைப்பது அநியாயம்.

**எந்தத் தொகுதியில் போட்டியிடுவது என்பது குறித்து உங்களுக்கும் தி.மு.க.வும் மோதல் இருக்கும் போல் தெரிகிறதே - நாளிதழ்களில் இப்போதே செய்திகள்...**

நாளிதழ்களில் வரும் செய்திகளை நான் நம்புவதில்லை. உதாரணத்திற்கு ஒரத்தநாடு சட்டமன்றத் தொகுதியை நாங்கள் கேட்கவில்லை. ஆனால் கேட்கிறோம் என்று செய்தி போடுகிறார்கள். ம.தி.மு.க.வைப் பொறுத்தவரை சிட்டிங் கான்ஸ்டிடுயன்ஸி என்று ஒரு இடம்கூட இல்லை. எனவே இந்த இடங்கள்தான் வேண்டும் என்று நாங்கள் கேட்கப் போவது இல்லை. ஆனால் கடந்த நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் நாங்கள் எங்கெல்லாம் அதிக வாக்குபலம் பெற்றிருக்கிறோம் என்பதைக் காட்டி சில தொகுதிகளைப் பெற முடியும். ஆனால் எதையும் பிரச்னையாக்கி வற்புறுத்த மாட்டோம். விட்டுக் கொடுத்தல் இரு தரப்பிலுமே இருக்கும்.

**எத்தனை தொகுதிகளில் வெற்றி பெறுவீர்கள்...?**

உண்மையைச் சொன்னால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வின் கோட்டை என்று வர்ணிக்கப்பட்ட பல இடங்களை உடைத்திருக்கிறது ம.தி.மு.க. செஞ்சியார் வென்ற திண்டிவனம் தவிர பொதுச்செயலாளர் வைகோ போட்டியிட்டு வென்ற சிவகாசி உட்பட மூன்று நாடாளுமன்றத் தொகுதிகள் அ.தி.மு.க. வசமிருந்த தொகுதிகளே. சதவீத வெற்றியின் அடிப்படையில் பார்த்தாலும் நாங்கள் எண்பது சதவீத வெற்றி பெற்றிருக்கிறோம். இது இந்தத் தேர்தலில் எண்பத்தைந்தாக உயருமே தவிர, எழுபத்தைந்தாகக் குறையாது.

**ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கும் கண்ணப்பனை தி.மு.க. கூட்டணி கவீகரித்துக் கொண்டது எப்படிச் சரியாகும்? ம.தி.மு.க. இதை எதிர்க்காதது ஏன்?**

கலைஞர், கண்ணப்பன் குறித்துச் சொல்லியிருப்பது இதுதான்: 'ஒருவர் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டாலொழிய அவரைக் குற்றவாளியாகக் கருத முடியாது.'



இதை மனத்தில் கொண்டே கண்ணப்பன் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். இதில் எதிர்க்க எதுவுமிருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**தெஹல்கா விவகாரம் தமிழக தேர்தல் முடிவு களில் எதிரொலிக்குமா?**

இது மத்திய அரசுக்கான தேர்தல் இல்லை என்பதை மக்கள் உணர்ந்திருக்கிறார் கள். இப்போது வாக்காளர் முன்பிருக்கும் கேள்வி தமிழகத்தின் முதல்வர் யார், கலைஞரா, ஜெயலலிதாவா? என்பதுதான்.

**ஆனால் தெஹல்கா விவகாரத்தைத் தேர்தல் பிரசாரத்துக்கு அ.தி.மு.க முழுமையாகப் பயன்படுத் திக் கொள்ளுமே...?**

அப்படி வாயைக் கொடுத்து வாக்காளர் களிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளும் அளவுக்கு அவர் கள் முட்டாள்கள் அல்ல. அப்படியொரு தவறைச் செய்தால் பல வழக்குகளில் தண்டிக்கப்பட்ட ஜெய லலிதாவைப் பார்த்து 'இப் படிச் சொல்ல உங்களுக்கு என்ன தகுதி இருக்கிறது' என்று மக்கள் கேட்டு விடு வார்கள்.

**தி.மு.க. ஆட்சிக்கு வந் தால் ம.தி.மு.க.வின் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?**

பெரும்பாலும் கலைஞர் சரியாக ஆட்சி நடத்துபவர். ஒருவேளை தவறுகள் நிகழ்ந் தால் சுட்டிக் காட்டத் தவற மாட்டோம். அறிஞர் அண்ணா மொழியில் சொல்வதென்றால், பூனை யானது எலியையும் வாயால் பிடிக்கிறது; தனது குட் டியையும் வாயால் பிடித்துத் தூக்கிப் போகிறது. ஆனால் இரண்டுக்கும் எத்தனை வேறுபாடு! எங்கள் எதிர்க் கட்சி அணுகுமுறை, பூனை குட்டியைப் பிடிப்பது, போன்று இருக்கும்.

**'இதுவே நான் போட்டி யிடும் கடைசித் தேர்தல்' என்று கலைஞர் சொல்லி யிருக்கிறாரே... காரணம் என்ன என்று நினைக் கிறீர்கள்?**

அவர் உழைத்து களைத்து விட்டதும் உண்மை; கட்சி யில் வளர்ந்துவிட்ட இளைஞர்கள் இருப்பதும் உண்மை. பொதுக்குழுவில் அவர் வெளியிட்ட இந்தக் கருத்துக்கு இரண்டுமே காரணமாக இருக்கலாம்.

**கலைஞருக்குப் பிறகு தி.மு.க. தலைமை பீடத்தில் மு.க. ஸ்டாலினை ம.தி.மு.க. ஏற்றுக் கொள் கிறதா? குறிப்பாக வைகோ வின் எண்ண ஓட்டத்தைத் துல்லியமாகப் படம் பிடிப் பவர் என்ற முறையில் இதற்கு வெளிப்படையாக பதில் சொல்ல முடியுமா?**

தி.மு.க.வுக்கு யார் தலைவராக வர வேண்டும் என்கிற பொறுப்பு அந்தக் கட்சிக்குத்தான் இருக்கிறது. அதை முடிவு செய்ய வேண் டியதும் அவர்களே. இது பற்றி நாங்கள் கருத்து சொல்வது அரசியல் - நாகரிகம் அல்ல. வெளிப் படையாகச் சொல்வதென் றால் அந்த உரிமையையே நாங்கள் இழந்துவிட்டோம். ஆனால் தனிப்பட்ட முறை யில் ஸ்டாலின் மீது எங் களுக்கு விருப்பு, வெறுப்பு எதுவுமில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவருடைய பங்கேற்பும், பங்களிப்பும் குறைத்து மதிப் பிடக்கூடியவை அல்ல. இந்த இருவேறு கருத்துகளில் எதையும் நாங்கள் மறைக்க விரும்பவில்லை.

பேட்டி: **ஜெயந்தன்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

சுமி

## சூப்பர்மார்க்கெட்

# 19 மொழி; 48 நாடு; 50 வயது!

ஆயுட் கால மன்ற உறுப்பினர் ஈரோடு ராணி குருநாதன் உள்பட பல பேர் எழுதின லெட்டர்ஸ் இந்த வாரம் கொஞ்சம் ஷேர் பண்ணிக்கலாம்னு பார்க்கறேன்.

'உன் கையெழுத்து எப்படி இருக்கும் சுமி..? நீ மெடிகல் ஸ்டூடன்ட்ன்றதால டாக்டர் பிரிஸ்கிரிப்ஷன் மாதிரி இருக்குமியா...?'ன்னு கேட்டு மடக்கப் பார்க்கறாங்க ராணி. என் ஆட்டோகிராஃப் மூலமா அவங்களுக்குப் பதில் சொல்லியிருக்கேன்.



• என்ன 'புக்'குங்க?

மேற்கு மாம்பலம் எஸ். வரதராஜன் பரவாயில்லை. 'நீங்க தேர்ந்தெடுக்கும் சப்ஜெக்ட் கொஞ்சம் அப்படி இப்படி இருந்தாலும் உங்களது மின்னல் நடை (ஐ மீன் எழுத்தில்) அந்த இரண்டு பக்கங்களை ஈடுகட்டி விடுகிறது' அப்படின்னு மார்க்கெட் சரக்கை டைரக்டா அட்டாக் பண்ணியிருக்கார். பெங்களூர் ஷண்முக சுந்தரம் தான் வாழைப் பழத்துல ஊசி ஏத்தற மாதிரி ஒரு போஸ்ட் கார்ட் போட்டிருக்கார்:

'போர் அடிப்பவர்கள் இரண்டு வகை: முதலாவது, சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்பவர்கள். தெரிகிறதோ இல்லையோ, எதைப் பற்றி வேண்டுமானாலும் சண்டப்பிரசண்டமாகப் பேசுபவர்கள் இரண்டாவது வகை.'

– இப்படி ஒரு பொன்மொழி எழுதி ஓசைப்படாம போஸ்ட் பண்ணியிருக்கார்!



• நீங்க கவிதை எழுதுவீங்களா?

ஏன் சார்!... எத்தனை நாளா காத்திருந்தீங்க என்னை இப்படி ஒரு வாங்கு வாங்கறதுக்கு! போதா குறைக்கு கார்டு மேல 'சுமி சூப்பர் மார்க்கெட்'னு கொட்டை எழுத்து வேற...!

சத்தியமங்கலம் ஆர். ரத்தினசாமி ரொம்ப பொயடிக்கா ஒரு எக்ஸ்பீரியன்ஸை எழுதியிருக்கார்:

அவங்க ஊர் கோட்டை முனியப்பன் கோயிலில் ஒரு நாள் உட்கார்ந்து கவிதை புத்தகம் படிச்சுக்கிட்டிருந்தாராம். சுற்றியும் விளையாடிய குழந்தைங்க இவரை இன்டர்வியூ பண்ணிருக்காங்க...

"என்ன 'புக்'குங்க...?"

"கவிதை புத்தகம்."



• பாரதி கவிதை எழுதியிருக்காரில்லே?

வரிசையாக ஏழு குழந்தைகள் நெருங்கி வந்து ஆளாளுக்குப் புத்தகத்தைக் கையில் வாங்கிப் பார்த்து 'கவிதை', 'கவிதை', 'கவிதை புத்தகம்'னு சொல்ல ஆரம்பிச்சாங்களாம்.

"நீங்க கவிதை எழுது




வீங்களா?..."

"பாரதி கவிதை எழுதியிருக்காரில்லையா...?"

என்று பலவாறாக வாக்கியங்கள் வளர்ந்து எல்லாருடைய வாயிலேருந்தும் கவிதைன்ற சொல் அழகழகா வித விதமா வெளிப்பட ஆரம்பிச்சுதாம். ரத்தின சாமியோட இரண்டேகால் வயசு மகள் சுவாதியும் 'கவிதை கவிதை'ன்னு மழலையில உச்சரிக்க ஆரம்பிக்க, இட் வாஸ் எ பொயடிக் எக்ஸ்பீரியன்ஸ்ன்றார் அவர்.

தேங்க்ஸ் ஃபார் ஷேரிங் யுவர் எக்ஸ்பீரியன்ஸ் ரத்தினசாமி.


ஆத்தூர் ஹரி ஒரு படி மேல போய் அரை டஜன் புக்ஸை அனுப்பிருக்கார்- (படிச்சுட்டுத் திருப்பித்தரதான்!) திருப்பித் தருவேன்னும் எல்லாத்தையும் படிக்க மாட்டேன்னும் இப்போ பிராமிஸ் பண்ணலாம். ஸாரி ஹரி, 'அடுப்பு இல்லாத அற்புத சமையல்'ல எல்லாம் நம்பிக்கை கிடையாது. சமைச்சுப் போட அம்மா இருக்கற வரைக்கும் எனக்கெதுக்கு அந்த மாதிரி புக்கெல்லாம்.

அப்புறம் இன்னொரு விஷயம். இன்னும் கொஞ்சம் நாளைக்கு யாரும் புக்ஸெல்லாம் அனுப்பிடாதிங்க-எக்ஸாம் வருது...

என்ன சுமி! எத்தனை நாளைக்கு 'ஸ்டுடன்ட் காலமிஸ்டா' இருக்கப் போறேன்னு கேட்கறீங்களா...?

டென்னிஸ் த மெனஸ் என்னிக்குப் பெரியவனாகறானோ அன்னிக்குத்தான் நானும் காலேஜ் முடிப்பேன்.

டென்னிஸுக்கு இது கோல்டன் ஜூப்ளி இயர். 19 லாங்குவேஜ்ல 48 நாட்டுல விஷமம் பண்ணிக்கிட்டிருக்கற இந்த டைனமைட், கார்டூனிஸ்ட் ஹாங்க் கெட்சாமோட செல்ல படைப்பு. தன் மகன் நாலு வயதில் தாங்க முடியாத விஷமம் செஞ்சப்போ கெட்சாமின் மனைவி புகார் செஞ்சாங்களாம்- "Your son is a menace"ன்னு. அதையே பெயரா வைச்சு 'டென்னிஸ் த மெனஸ்'ன்னு ஒரு பாத்திரம் உருவாக்கிட்டார்.



"டென்னிஸுக்கு அம்பது வயசுன்னா அவனோட பக்கத்து வீட்டுத் தாத்தா வில்ஸனுக்கு என்ன வயசிருக்கும்?"னு நிருபர்கள் கேட்டாங்களாம் கெட்சாம் கிட்டே...

அவர் சொன்னாராம்: "சும்மாயிருங்க! அவங்கள்ளாம் டினோசார்களில்லே; மனுஷங்க. நான் வைச்சது தான் அவங்களுக்கு வயசு!"

**ரா**ஜஸ்தான்ல கடுமையான வறட்சி. விவசாய வேலை தேடி அலைஞ்சு, கிடைக்காததால பட்டினி கிடந்து, அது தாளாம தற்கொலை செஞ்சுக்கறாங்க விவசாயிங்க... குடும்பம் குடும்பமா செத்துப் போகறது ரொம்ப கண்றாவியா இருக்குன்னு 'ஹிண்டு'ல எழுதியிருக்கார், அங்கேயெல்லாம் நேரில் போய்ப் பார்த்துட்டு வந்த பத்திரிகையாளர் சாய்நாத்.

அனேகமான சாவுகளுக்குக் காரணம் வறட்சி இல்லைன்றார் சாய்நாத். நிர்வாகச் சீர்கேடு, அரசாங்கத்தோட அலட்சியம், மருத்துவ உதவி கட்டுப்படியாகாத விலைக்கு மட்டுமே கிடைப்பது... இதெல்லாமும் சேர்ந்துதான் இந்த சோகத்தை ஏற்படுத்துது. விலைவாசி உயர்வு ஒரு பக்கம், ஊழல், ஒடுக்குமுறை இன்னொரு பக்கம். தினக்கூலி அறுபது ரூபாய்னு பேருதான். பெரும்பாலும் 35 ரூபாய்க்கு மேல விவசாயக்கூலி தர்றது இல்லையாம்.

அம்பது மில்லியன் டன் உபரி தானியம் உற்பத்தி பண்ணியிருக்கு இந்தியா... அப்படியும் நம்ம சகோதரர்கள் பட்டினியில சாகறாங்களேன்னு ரொம்ப ஆதங்கப்படறார்.

சமைச்ச உணவு போதாதுன்னு, சமைக்காத உணவு இன்னும் இத்தாலி, சைனா, செட்டிநாடு பாணின்னு வகை வகையா சாப்பிடற நாம இவங்களையெல்லாம் பத்தி தெரிஞ்சாவது வைச்சுக்கறதுதானே நியாயம்!


**ரொ**ம்ப சீரியஸ் டோன்ல சூப்பர் மார்க்கெட்டை க்ளோஸ் பண்ணிப் பழக்கமில்லே. ஸோ, ஒரு ஜோக். புதிர்னு வைச்சுக்கங்களேன். இதுவும் ஒரு சாப்பாட்டு ஐட்டம் பத்தி:

வினா: சூப்புக்கு ஏன் சூப்னு பெயர் தெரியுமா...?

விடை: ஏன்னா அதைச் சாப்பிடும்போது 'சூப்'னு சத்தம் வருது!

ஜோக் நன்றி: ......? சூப்பர்மார்க்கெட்டில் இந்த வாரம் இடம் பிடிச்சருக்கற சிரஞ்சீவி சிறுவன்!

# 30 நாட்களில் ஜோதிடம் கற்க அருமையான சந்தர்ப்பம்



## 8.4.2001 முதல் 7.5.2001 வரை

## ஜோதிட திலகம்
## பேராசிரியர்
## டாக்டர் K. பார்த்தசாரதி

**அஞ்சல் வழி மூலம் மூன்று மாத ஜோதிட பயிற்சி தமிழிலும், ஆங்கிலத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் வந்து சேர கடைசி நாள் 17.4.2001**

நேர்முக வகுப்புகளுக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர கடைசி நாள் 8.4.2001. ரூ.20/- M.O. மூலமோ அல்லது நேரிலோ செலுத்தி விண்ணப்பப் படிவம் (**PROSPECTUS**) பெற்றுக்கொள்ளலாம்.

**விக்ஷு™ வருட விஷேச சலுகை ஐந்து கேள்விகளுக்கு ரூ.200/- மட்டுமே 1.4.2001 முதல் 20.4.2001 வரை**

ஜாதகத்துடன் ஐந்து கேள்விகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் அனுப்பலாம். ஜாதகம் இல்லாதவர்கள் மேலும் ரூ.50/- அனுப்ப வேண்டும். ஐந்து கேள்விகளும் ஒரே ஜாதகத்திலிருந்து இருக்க வேண்டும். சென்னையில் உள்ளவர்கள் நேரடியாக கேள்விகளை கொண்டு வரலாம். காசோலை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. சுயவிலாசமிட்ட கவர்களை உரிய தபால் தலையை ஒட்டி ரூ.200/-க்கான டிராஃப்ட்டையும் இணைத்து அனுப்பவும்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து கேள்விகளைக் கேட்க கட்டணம் ரூ.500/- மட்டுமே.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து கேள்விகளைக் கேட்க கட்டணம் ரூ.1000/- மட்டுமே.

அனைத்து விவரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஜோதிட திலகம்
பேராசிரியர் டாக்டர். K. பார்த்தசாரதி, M.A., Ph.D., D.Sc.
65, துளசிங்க பெருமாள் கோவில் தெரு, (டி.பி. கோவில் தெரு)
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
போன்: 8443332, 8441511

*ஜோதிட ஆலோசனை கூறும் நேரம்*

**காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை (வகுப்பு நேரம் தவிர)**

ஜோதிட ஆலோசனை பெற விரும்புபவர்கள்

8443332, 8441511 ஆகிய தொலைபேசி எண்கள் மூலம் நேரத்தை முன்பதிவு செய்து கொண்டு சந்திக்கலாம். தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனை வழங்கப்படும்.

மனத்திற்குப் பிடித்தவர்களெல்லாம் ஏனோ தெரியவில்லை.... வெகு தூரத்திற்குப் போய்விடுகிறார்கள். எனக்கு மிகவும் பிடித்த சித்தப்பா, டெல்லி செக்ரடேரியட்டில் காகிதக் கட்டுகளுக்கு நடுவில் காணாமல் போய் விட்டார். பக்கத்து வீட்டு யமுனாக்கா, கோயம்புத்தூரில் ஒரு பெரிய குடும்பத்துக்கு மருமகளாகி, இரவில் மட்டும் பேசும் புருஷனோடு இயந்திர வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறாள். அருகில் இருப்பவர்களோடு எல்லாம் ஏதேனும் மனக்கசப்பாகிவிடுகிறது.

எட்டரை மணிக்குத்தான் ட்ரெயின். கீழவாசலிலிருந்து ஜங்ஷன் தூரம்தான். பேசிக் கொண்டே நடந்து செல்லலாம் என்று ஏழு மணிக்கே கிளம்பிவிட்டோம், பாபுவும் நானும்.

"என்னடா சந்துரு... ஒரு மாதிரியா இருக்கே.. நான் போறது கஷ்டமா இருக்கா?" என்றான் பாபு.

"ஒரு பக்கம் உனக்கு வேலை கிடைச்சதுலே சந்தோஷம்தான். ஆனா நீ போன பிறகு தனியா இருக்கப்போறதை நினைச்சா

# சிநேகிதனே!



தான் ரொம்ப கஷ்டமா இருக்கு!"

"கொஞ்ச நாள் பொறுத்துக்கோ. அங்கே போன உடனே யாரையாச்சும் புடிச்சு உனக்கும் வேலை ஏற்பாடு பண்ணிடுறேன்."

ம்ஹும்... வேலை கிடைப்பது அவ்வளவு சுலபமா என்ன? இப்படித்தான் வேலை கிடைத்துச் சென்ற எல்லா நண்பர்களும் சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

எங்கள் செட்டில், முதலில் மனோகருக்குத்தான் வேலை கிடைத்தது. 'தண்ணி பார்ட்டி' எல்லாம் முடிந்து சந்தோஷமாக ஜங்ஷனுக்குச் சென்று வழியனுப்பி வைத்

ஒருவேளை, சித்தப்பாவும் யமுனா அக்காவும் தூரத்தில் இருப்பதால்தான் அவர்களோடு மனக்கசப்பு ஏற்படவில்லையோ என்னவோ...

இதோ... கடைசியாக எஞ்சியிருந்த பாபுவும் மெட்ராஸ் செல்லப்போகிறான். இனி, இந்தத் தஞ்சாவூரில், நான் தன்னந் தனியே சுற்றிவர வேண்டும்.

**ஜி.ஆர். சுரேந்தர்நாத்**



தோம். பிறகு அசோக்... அப்புறம் சிவா.

கடைசியில், நானும் பாபுவும்தான் மிஞ்சினோம். அவனையும் நான் இப்பொழுது வழியனுப்பி வைக்கப் போகிறேன். எனக்கு வேலை கிடைத்தால், வழியனுப்ப ஆட்களே இல்லாமல் போய்விடுவார்கள்.

ஐந்து பேரும் ஒன்றாகவே திரிந்தாலும், நானும் பாபுவும் எதிரெதிர் வீடு என்பதால் ஒரு தனி நெருக்கம்.

பாபுவின் அப்பா மளிகைக் கடை வைத்திருக்கிறார். நல்ல வசதியான குடும்பம்தான். சென்னையில் ஒரு கம்பெனியில் ஜி.எம்.மாக இருக்கும் மூர்த்தி, பாபுவுடைய அப்பாவின் நெருங்கிய நண்பர். தஞ்சாவூரில் ஒரு கல்யாணத்திற்காக வந்தவர் பாபுவின் வீட்டிற்கு வந்திருக்கிறார். பி.எஸ்ஸி கெமிஸ்ட்ரி படித்த பாபு, வீட்டில் சும்மா இருப்பதைப் பார்த்துவிட்டு, தமது கம்பெனியில் காலியாக இருக்கும் கெமிஸ்ட் வேலைக்கு அவனைக் கையோடு அழைத்துச் செல்கிறார்.

மூர்த்தி, வேறு ஒரு நண்பரைப் பார்த்துவிட்டு நேரே ஸ்டேஷன் வந்துவிடுவதாக ஏற்பாடு.



"சில சமயம் எனக்குத் தோணும் சந்துரு. படிக்கறது... வேலைக்குப் போறது... கல்யாணம் பண்ணிக்கறது எல்லாத்தையும் ஒரு முன்னேற்றமாக எல்லாரும் பார்க்கிறாங்க. எனக்கு என்னமோ பின்னடைவுன்னுதான் தோணுது" என்றான் பாபு திடீரென்று.

"ஏண்டா அப்படிச் சொல்றே?"

"உனக்கு ஞாபகமிருக்கா... ஒண்ணாங்கிளாஸ் படிக்கறப்ப, நாம்ப பத்து பைசா கடலைமிட்டாய்க்காக, தேர்தல் சமயத்துலே, காலைல தி.மு.க.வுக்கும், சாயங்காலம் அ.தி.மு.க.வுக்கும் வோட்டு கேட்டு ஊர்வலம் போவோம். யாரோ ஒரு பொண்ணு, பஸ்லிலிருந்து உன்னைப் பார்த்திச்சுன்னு சைக்கிள்லே கருந்தட்டான்குடி வரைக்கும் பஸ்ஸைத்

துரத்திட்டுப் போனோம். அந்த நாட்களோட சந்தோஷத்தை எல்லாம், வேலையும் பணமும் கொடுத்திடுமா?"

"முடியாதுதான். ஆனா வாழ்க்கையில் ஒரே கட்டத்திலே இருக்க முடியாதில்லையா?"

"புரியுது... ஆனா..." என்ற பாபு ஈஸ்ட் கேட் பள்ளி வாசலில், ரேகா, அவள் அப்பாவுடன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும், "சந்துரு.... உன் ஆள்ரா..." என்று பரபரப்பானான்.

என்னைப் பார்த்தவுடன், சட்டென்று ரேகாவின் கண்களில், தீக்குச்சியைக் கொளுத்தியது போல் ஒரு வெளிச்சம்.

ரேகாவின் அப்பா பாபுவைப் பார்த்து, "என்ன தம்பி.... மெட்ராஸுக்கு வேலைக்குப் போறீங்களாமே.... அப்பா சொன்னாரு."

"ஆமாங்க."

"அங்கே போய் ஊர்ச் சுத்தாம, வேலையுண்டு ரூம் உண்டுன்னு இருக்கணும்" என்றவர், என்னைத் தெருவிலுள்ள மின்கம்பத்தைப் பார்ப்பது போல் எந்தச் சலனமுமின்றி பார்த்துவிட்டு, எங்களைக் கடந்து சென்றார். வேலையில்லாதவனிடம் பேச என்ன இருக்கிறது?

"ரேகாவைப் பார்த்தியா.... கண்ணு டாலடிக்குது. நீ மட்டும் ஒரு லெட்டர் கொடு... மறுநாளே உன் பின்னாடி ஓடி வருதா இல்லையா பாரு" என்றான் பாபு.

"தெரியுதுடா... என்ன பண்றது... நமக்கே வேலை, வெட்டி இல்லை... வீட்டுலே எங்கப்பாகிட்டே திட்டு வாங்கியே மாளலே.... காதல் ஒரு கேடான்னு விட்டுட்டேன். பார்க்கலாம்.... ஏதாச்சும் வேலை கிடைச்சா சொல்லலாம். இல்லைன்னா வெறும் பார்வையிலேயே இந்தக் காதல் செத்துப் போகட்டும்."

"உங்கப்பான்னவுடனே ஞாபகம் வருது. அவர்கிட்டே சொல்லியிருக்கேன்... நானும் ஊர்ல இல்லை... அவனைச் சும்மா திட்டாதீங்கன்னு."

"ப்ச்... இந்த மூணு வருஷத்திலே அதெல்லாம் எனக்கு மரத்துப் போச்சு பாபு. ஆனா தங்கச்சியைப் பார்க்கிறப்பத்தான் மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும். அவ வயசு பிள்ளைங்க எல்லாம் கல்யாணமாகி புருஷனோட போகுறதைப் பார்க்கிறப்ப மனசாட்சி குத்தும்... எனக்கு ஒரு வேலை கிடைச்சு தொலைச்சதுன்னா காசு சேர்த்து, இவளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலாம்னு அப்பாவுக்கு நெனப்பு... அவரு ஜவுளிக்கடையிலே கணக்கு எழுதி மூணு பிள்ளைங்களை வளர்த்ததே பெரிய விஷயம். பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க காசுக்கு எங்கே போவாரு... அந்த ஆதங்கத்திலேதான் என்னைக் கோபமா பேசறது.... சரி விடு..." என்றேன்.

"நீ கவலைப்படாதே மாப்ளே... மெட்ராஸில், எண்ணி இரண்டே மாசத்திலே உனக்கு வேலை பார்த்திட்டுத்தான் மறுவேலை....." என்றான் பாபு.

ஜுபிடர் தியேட்டரைத் தாண்டும் பொழுது நல்ல கூட்டம். விஜய்காந்த் படம். நேத்துத்தான் ரிலீஸ். இங்கு நாயகன் படம் பார்க்க வந்தபொழுது க்யூவில் நின்று கொண்டிருந்த ஜனங்களைத் தாண்டி விடுவிடுவென்று நடந்து சென்று, டிக்கட் கவுண்டருக்கருகில் குதித்து யாரிடமோ அடிவாங்கியது ஞாபகத்திற்கு வந்தது.

பாபு போன பிறகு தினசரி வாழ்க்கையை நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

காலை எழுந்தவுடனேயே பாபு என் வீட்டிற்கு வந்துவிடுவான். இருவரும் ஆத்துக்குப் போய்க் குளித்துவிட்டு வந்து டிஃபன் சாப்பிடுவோம். அப்புறம் சென்ட்ரல் லைப்ரரி. இரண்டு மணி நேரம் புத்தகம் படித்துவிட்டு வெளியே வந்து, எதிரே தெரியும் கவர்ன்மென்ட்டு ஆஸ்பத்திரிக்குப் போகும் ஜனங்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டே தம்மடிப்போம். பிறகு சாப்பாடு. அப்பா பார்த்தால் திட்டுவார் என்று மதிய தூக்கம் எப்பொழுதும் பாபு வீட்டில், அவன் மாடி யறையில். சாயங்காலம், பிள்ளையார் கோவில் கட்டைச் சுவரில் உட்கார்ந்தால் நேரம் போவது தெரியாமல் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்போம்.

ப்ச்.... இனி எல்லாம் சூன்யமாகத் தெரிந்தது.

"மாப்ள.... தம்மு... வச்சிருக்கியா?" என்றேன்.

"ம்...." என்ற பாபு, சூட்கேஸைக் கீழே வைத்துவிட்டு பேண்ட் பாக்கெட்டிலிருந்து சிகரெட் பாக்கெட்டை எடுத்தான்.

இருவரும் சிகரெட்டுகளைப் பற்ற வைத்துக் கொண்டு நடந்தோம்.

"கோபால் வாத்தியார் ஒரு தடவை என்னைப் பயங்கரமா அடிச்சுட்டார்னு அவர் பின்னாடி போய் சைக்கிள்ல மோதி ரோட்டுல விழவைச்சியே... ஞாபகமிருக்கா பாபு?"

"ஆமாம். ஆமாம். கோணவாய் கோபாலு..."

"அப்புறம்.... நான் டென்த்லே ஸ்கூல் ஃபர்ஸ்ட்டு வந்தப்போ, நீ என்னவோ

ஃபர்ஸ்ட் வந்த மாதிரி வீடு வீடாய்ப் போய் சொல்லிட்டு வந்தியே...'' என்று நான் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். பாபு அதிகம் பேசவில்லை.

"லெட்டரெல்லாம் போடுறா மாப்ளே.... மறந்துராதே...." என்று கூறும்பொழுதே என் குரல் இலேசாக உடைந்திருந்தது. அழுகை வரப் பார்த்தது.

பாபு. என் கையை வேகமாய்ப் பிடித்து, ''ஏய் ஓூசு... எதுக்குடா கலங்குறே...'' என்றான்.

"தாங்கமுடியலைடா... இப்படி உயிருக் குயிரா பழகினது எல்லாம் கடைசியில் பிரிய றதுக்குத்தானா...?"

இருவர் மனத்திலும் பிரிவு சோகம் அழுத்த, சில நிமிடங்கள் ஒன்றும் பேசாமல் நடந்தோம்.

ரயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்த வுடன், "நீ இங்கேயே தம்மடிச்சுக்கிட்டு நில்லு. நான் எங்கப்பாகிட்ட ஒரு ஃபோன் பேசிட்டு வந்திர்றேன்" என்று கூறிவிட்டுச் சென்றான் பாபு.

நான் சிகரெட் புகையை விட்டபடி பிளாட்ஃபாரத்தைக் கவனித்தேன். யாரோ ஒரு புதுக் கணவன், புத்தகக்கடையின் பின் பக்க இருட்டில் தனது புது மனைவியைச் சீண்டிக் கொண்டிருந்தான். யாரோ ஒரு இளம் தந்தை, பிளாட்ஃபாரத்தில் தத்தித் தத்தி நடந்து சென்று கொண்டிருந்த தன் குழந்தையின் பின்னால் 'யேய்...விமல்...'' என்று ஓடிக் கொண்டிருந்தான். கடைசி வரையில் இப்படி எல்லாம் ஒரு வாழ்க்கை கிடைக்காமலே போய்விடுமோ என்ற பயம் வந்தது.

வேகமாக என்னருகில் வந்த பாபு "போய் அந்த பைப்பில் மூஞ்சி கழுவிக்கிட்டு வா. மூர்த்தி ஸார் வர்ற நேரம்!" என்றான்.

"நான் எதுக்குடா மூஞ்சி கழுவணும்?" என்றேன்.

"நீதான் அவர்கூட மெட்ராஸ் போகப் போறே...''

"உனக்கென்ன பைத்தியமா?"

"சீரியஸாகத்தான் சொல்றேன். எங்கப்பா மளிகைக்கடையில் நல்லா சம்பாதிக்கிறாரு. என்னையும் எப்பவோ கடையில் உட்காரச் சொன்னாரு. ஆனால், நான்தான் பிடிவாத மாகக் கடைப்பக்கம் போகலே. எங்கக் காவுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத் தாச்சு. நான் ஒரே பையன். ஆனால் உன் னோட நிலைமையே வேற.... நீ வேலைக்குப் போனால் உங்கப்பாவோட பாரம் கொஞ் சம் குறையும். உன் தங்கச்சியை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்கலாம். ஏன்... உன் தம்பியைக்கூட பி.ஈ. படிக்க வைக்கலாம். அப்புறம் ரேகாவைக் கூட லவ் பண்ணலாம். இவ்வளவு கமிட்மெண்ட் இருக்கிற நீதான் முதலில் வேலைக்குப் போகணும். நீயும் கெமிஸ்ட்ரிதானே... அதனாலே நோ பிராப் ளம். அப்பாக்கிட்டே பேசிட்டேன். அவரும் சரின்னுட்டார். மூர்த்தி ஸார் வந்தவுட்னே கடைக்கு ஃபோன் பண்ணச் சொல்லியிருக் கார்!"

பாபுவின் உச்சக்கட்ட அன்பில் நெகிழ்ந்துபோய் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு "டேய்... என்னடா இது... வேணாண்டா. நீயே போடா" என் றேன்.




"ம்..பேசக்கூடாது. நான் சொன்னதிலே நியாயம் இருக்கா? இல்லையா?"

"இருக்குடா... ஆனாலும்."

''நான் சொன்னது சொன்னதுதான், ஓ.கே.?"

எனது சூழ்நிலை புரிந்து, சம்மதத்திற்கு அடையாளமாக நான் ஒன்றும் பேசவில்லை.

"அதோ, மூர்த்தி ஸார் வர்றாரு... அவரை அழைச்சுக்கிட்டுப் போய் நான் அப்பாக் கிட்டே ஃபோன்லே பேச வைக்கிறேன்'' என்று பாபு அவரை நோக்கி வேகமாக நடந்தான். ○




எழுபதாம் அத்தியாயம்

## கோட்டைக் காவல்

கோட்டைக்குள் பிரவேசித்த யானையையும் பல்லக்கையும் காலாந்தககண்டர் சிறிது நேரம் மிகக் கவனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அதிசயமாயிருக்கிறதே!" என்றார்.

"என்ன அதிசயம்? எது அதிசயம்?" என்று அநிருத்தர் வினாவினார்.

"இளவரசர் மதுராந்தகர் இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் கோட்டைக்குள்ளே போவதுதான்! இளவரசர் மிக்க கூச்சம் உள்ளவராயிற்றே? பல்லக்கின் திரையை விட்டுக் கொண்டு அல்லவா பிரயாணம் செய்வார்?"

"என்றைக்காவது ஒருநாள் கூச்சம் தெளிந்துதானே ஆக வேண்டும்? சீக்கிரத்தில் முடிசூட்டிக் கொள்ள வேண்டியவராயிற்றே?"

"மதுராந்தகருக்கு முடி சூட்டுவது என்று முடிவு செய்தாகி விட்டதா? யார் முடிவு செய்தார்கள்?"

"ஏன்? சக்கரவர்த்திதான்! நாம் எல்லாருமாகப் போய்ச் சக்கரவர்த்தியிடம் நம் சம்மதம் தெரிவித்ததும்..."

"சக்கரவர்த்தி முடிவு செய்து, நாம் சம்மதம் கொடுத்து என்ன பயன்? கொடும்பாளூர்ப் படைகள் அல்லவா

அமரர் **கல்கி**

சம்மதம் கொடுக்க வேண்டும்? அவர்கள் காவல் புரியும் கோட்டைக்குள் இளவரசர் மதுராந்தகர் இவ்வளவு குதூகலமாக யானை மேல் ஏறிப் போவது அதிசயந்தான்!'' என்றார் காலாந்தக கண்டர்.

யானை சென்ற திசையை நோக்கிச் சில அடிகள் எடுத்து வைத்துவிட்டு மறுபடியும் திரும்பி வந்தார்.

பின்னர், பெரிய பழுவேட்டரையரைப் பார்த்து, "அண்ணா, நீங்கள் எல்லாரும் கோட்டைக்குள் செல்வதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் நான் மட்டும் வர முடியாது. நேற்று வரை என் கட்டுக் காவலுக்குள் இருந்த கோட்டையில் இன்று நான் பிறருடைய அதிகாரத்துக்கு உட்பட்டுப் பிரவேசிக்க முடியாது. என் மனம் இடங் கொடுக்கவில்லை. நீங்கள் போய்ச் சக்கரவர்த்தியைத் தரிசித்து அவருடைய விருப்பம் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். நான் நம் சைன்யத்துடன் வெளியிலேதான் இருப்பேன். மேலும், வந்தியத்தேவனைத் தேடிக்கொண்டு கந்தமாறன் போயிருக்கிறான். அவன் என்ன செய்தி கொண்டு வருகிறான் என்று அறிய நான் ஆவலாயிருக்கிறேன். வந்தியத்தேவன் எப்படிப் பாதாளச் சிறையிலிருந்து தப்பினான், யாருடைய உதவியினாலே வெளியேறினான் என்று தெரிந்து கொள்ள வேண்டும். என்னை மன்னித்து விட்டு, நீங்கள் எல்லாரும் கோட்டைக்குள் போங்கள்!'' என்றார்.

கொடும்பாளூர் வேளார் ஏதோ சொல்ல வாயெடுத்தார். அதற்குள் பெரிய பழுவேட்டரையர் குறுக்கிட்டு, "சேநாதிபதி! இந்த மூடனுடைய மூளை கலங்கிப் போயிருக்கிறது. அவன் எக்கேடாவது கெட்டுப் போகட்டும்! நாம் போகலாம், வாருங்கள்!'' என்றார்.

ஆனால் மறுநாள் சக்கரவர்த்தியிடம் இந்த விவரங்கள் எல்லாம் அறிவிக்கப்பட்டபோது அவர் பெரிய பழுவேட்டரையரின் கருத்தை ஒப்புக் கொள்ளவில்லை. காலாந்தக கண்டர் வந்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினார்.

"என் அன்பார்ந்த தளபதிகளே! நீங்கள் எல்லாரும் என் நம்பிக்கைக்கு உகந்தவர்கள். ஆனால் உங்கள் எல்லாரிலும் நான் அதிகமாக நம்பிக்கை வைத்திருந்தது கோட்டைக் காவலர் காலாந்தக கண்டரிடத்திலேதான். அவர் ஏன் வரவில்லை? அவர் வராத வரையில் உங்களையெல்லாம் நான் அழைத்த காரியம் முடிவாகாது!'' என்றார்.

பெரிய பழுவேட்டரையர், ''சக்கரவர்த்தி! மன்னிக்க வேண்டும்! நான் ஒப்புக் கொள்கிற எந்த முடிவையும் என் சகோதரனும் ஒப்புக்கொள்வான்! அவன் நேரில் வந்துதான் ஆக வேண்டுமென்பதில்லை!'' என்றார்.

''தனாதிகாரி! இராமனுக்கு லக்ஷ்மணன் வாய்த்தது போல் தங்களுக்குக் காலாந்தக கண்டர் வாய்த்துள்ளார் என்பதை உலகமெல்லாம் அறிந்திருக்கிறது. ஆனாலும் அவர் ஏன் இங்கு இன்றைக்கு வரவில்லை? இதற்கு முன்னால் இங்கு நான் நடத்தியுள்ள முக்கியமான எல்லா மந்திராலோசனைகளிலும் சின்னப் பழுவேட்டரையர் இருந்திருக்கிறார். அவரைக் கேளாமல் எந்த முடிவும் நாம் செய்ததில்லை. அத்தகைய அறிவிற் சிறந்த வீரர் இப்போது மட்டும் ஏன் வராமலிருக்க வேண்டும்?'' என்று கேட்டார் சக்கரவர்த்தி.

முதன்மந்திரி அநிருத்தர், ''பெருமானே! அதற்கு நான் மறுமொழி சொல்கிறேன். காலாந்தக கண்டர் இன்று குருவுக்கு மிஞ்சிய சிடர் ஆகிவிட்டார்; அண்ணனுக்கு மிஞ்சிய தம்பியும் ஆகிவிட்டார். சக்கரவர்த்தி அழைப்பதாகச் சொல்லியும், வருவதற்கு மறுத்து விட்டார். பெரிய பழுவேட்டரையர் எவ்வளவோ புத்தி கூறியும் அவர் கேட்டுக் கொள்ளவில்லை! கோட்டைக்குள் வருவதற்கு மறுத்து விட்டார்'' என்றார்.

''ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விட வேண்டாம்! சக்கரவர்த்தியின் விருப்பத்தையொட்டி நாம் இங்கு செய்யும் எந்த முடிவையும் தாம் ஒப்புக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''ஆனாலும் இங்கு வருவதற்குச் சின்னப் பழுவேட்டரையர் மறுத்ததற்குக் காரணம் என்ன? அவர் மனத்தில் இன்னும் ஏதாவது விபரீத சந்தேகம் தோன்றியிருக்கிறதா?''

"மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்று சொல்வதில்லையா? அவருக்கு இப்போது எது எடுத்தாலும் சந்தேகந்தான்! இங்கே மதுராந்தகர் பத்திரமாயிருக்கிறாரா என்பது பற்றிச் சந்தேகம். வந்தியத்தேவன் பாதாளச் சிறையிலிருந்து தப்பிச் சென்றுவிட்டது பற்றிச் சந்தேகம்...!''

''காலாந்தக கண்டர் மனத்தில் ஏதேனும் சந்தேகம் உதித்தால், அதற்குக் காரணம் இல்லாமற் போகாது!" என்று சக்கரவர்த்தி கூறியதும், சிறிது நேரம் அங்கே மௌனம் குடிகொண்டிருந்தது. ஒவ்வொருவர் மனத்திலும் வெவ்வேறு சிந்தனை தோன்றியது.

பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "பெருமானே! என் சகோதரனுடைய சந்தேகத்துக்குக் காரணம் இருக்கலாம்; இல்லாமலும் போகலாம். அவனைப் பற்றி நான் குற்றம் கூறவும் விரும்பவில்லை. ஆனால் அவன் கோட்டைக்குள் வர மறுத்ததற்கு உண்மையான காரணம் என்னவென்பதைச் சொல்லி விடுகிறேன். இந்தத் தஞ்சாவூர்க் கோட்டை வெகு காலமாக அவனுடைய கட்டுக் காவலுக்குள் இருந்ததாம்! இப்போது பெரிய வேளாரின் அதிகாரத்துக்குக் கோட்டைக் காவல் மாறி விட்டதாம்! அதனால் அவன் இக் கோட்டைக்குள் வர முடியாதாம்! அவனுடைய இப்படிப்பட்ட அதிகப் பிரசங்கித்தனத்துக்கு யார்தான் என்ன செய்ய முடியும்?" என்றார்.

"ஏன்? நீதி செய்ய முடியும்!" என்றார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

சக்கரவர்த்தி இவ்வாறு கூறியதும் எல்லாரும் மௌனமாயிருந்தார்கள்.

மறுபடியும் சுந்தர சோழர், ''அமைச்சர்களே! சோழ குலத்தின் புகழுக்கெல்லாம் அடிப்படையான காரணம் இந்தக் குலத்து மன்னர்கள் நீதி வழுவாத நெறியில் நின்று வந்ததுதான். என் குலத்து முன்னோர் ஒருவர் தமது அருமைக் குமாரன் கன்றுக்குட்டியின் பேரில் தேரை ஏற்றிக் கொன்றதற்காக அவனுக்கு மரண தண்டனை விதித்த வரலாற்றை நீங்கள் எல்லாரும் அறிவீர்கள். பசுக்களுக்கு நீதி வழங்கியவர்கள் குடி மக்களுக்கு எத்தகைய நீதி வழங்கியிருப்பார்கள்? தங்கள் ஆட்சிக்குத் துணை நின்ற தளபதிகளுக்கு எப்படி நியாயம் வழங்கியிருப்பார்கள்? நான் மட்டும் அந்த மரபுக்கு மாறாக நடந்து சோழ குலத்துக்கு ஏன் களங்கத்தை உண்டாக்க வேண்டும்? சின்னப் பழுவேட்டரையரிடமிருந்து தஞ்சைக் கோட்டைக் காவலைப் பெரிய வேளார் கைப்பற்றியது பெருந் தவறு. என் அருமை மகன் அகால மரணமடைந்த துயரத்தில் மூழ்கியிருந்தபடியால், சின்னப் பழுவேட்டரையருக்கு இழைத்த அநீதியைப் பற்றி நான் சிந்திக்கத் தவறி விட்டேன். சேநாதிபதி! இக் கோட்டைக் காவலை மீண்டும் அவரிடம் மாற்றிக் கொடுத்து விட வேண்டியதுதான்!" என்றார்.

கொடும்பாளூர் பெரிய வேளாரின் முகத்தில் ஈயாடவில்லை. திருக்கோவலூர் மலையமான் அப்போது முன் வந்து, ''ஐயா! தஞ்சைக் கோட்டைக் காவல், சின்னப் பழுவேட்டரையரிடம் இருந்தபோது, அந்தப் பொறுப்பை அவர் சரியாக நிறைவேற்றியதாகத் தெரியவில்லையே? சதிகாரன் ஒருவன் இந்தக் கோட்டைக்குள் புகுந்து, அரண்மனை அந்தப்புரம் வரைக்கும் வந்து, தங்கள் பேரில் வேல் எறியும்படிக்கும் நேர்ந்து விட்டதே! யாரோ ஒரு ஊமைப் பெண் குறுக்கிட்டுத் தங்கள் உயிரைக் காப்பாற்றும்படி நேர்ந்துவிட்டதே! அவள் அச்சமயம் வராவிட்டால் என்ன நடந்திருக்கும்? இந்தத் தஞ்சைக் கோட்டையில் உள்ள ஆயுதச் சாலையில் எண்ணுவதற்கு இயலாத வாள்களும் வேல்களும் ஈட்டிகளும் அடுக்கி வைத்திருந்து என்ன பயன்? இங்கே கோட்டைக் காவலுக்கு

என்று இத்தனை வீரர்களும் வேளக்காரப் படையைச் சேர்ந்த வீராதி வீரர்களும் இருந்து என்ன பயன்? தளபதி சின்னப் பழுவேட்டரையர் தமது பொறுப்பைச் சரிவர நிறைவேற்றியதாகச் சொல்ல முடியுமா? அவரிடமிருந்து நம் பெரிய வேளார் கோட்டைக் காவலைக் கைப்பற்றியது எப்படித் தவறாகும்?" என்று கேட்டார்.

"மாமா! விதியின் கொடுமைக்கு யார் மீது குற்றம் சுமத்தி என்ன செய்வது? தங்கள் அருமைப் பேரன் ஆதித்த கரிகாலனைக் காப்பாற்ற உங்களால் முடிந்ததா? நீங்கள் எல்லாரும் சேர்ந்து எத்தனையோ பிரயத்தனம் செய்தீர்களே?'' என்றார் சக்கரவர்த்தி.

"அதைப் பற்றி விசாரிக்க வேண்டியதும் அவசியந்தான், சக்கரவர்த்தி! கடம்பூர் அரண்மனையில் நேர்ந்த கொடிய சம்பவத்துக்குப் பொறுப்பாளி யார் என்று இன்னும் விசாரணை நடக்கவில்லை. அதைப் பற்றிய உண்மை வெளியாகவும் இல்லை!'' என்றார் மலையமான்.

"பெரிய பழுவேட்டரையரின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தோம். அவர் வந்து விட்டபடியால், இனி விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும்'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார்.

''விசாரணை ஆரம்பிப்பதற்கு முன்னால், கொலைக் குற்றம் சாட்டப்பட்ட வந்தியத்தேவன் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடியது எப்படி? அதற்குப் பொறுப்பு யார் என்பதையும் இப்பொ



ழுதே தீர விசாரிக்க வேண்டும்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஆமாம்; அதுவும் கேள்விப்பட்டேன். சேநாதிபதி! வந்தியத்தேவன் பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடியது எப்படி? அதற்கு யார் பொறுப்பு ஏற்பது?" என்று சக்கரவர்த்தி கேட்டார்.



''சக்கரவர்த்தி! அதற்கு மறுமொழி முதன்மந்திரி அநிருத்தர் சொல்ல வேண்டும்!'' என்றார் பெரிய வேளார்.

''பிரபு! அந்தப் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன். வந்தியத்தேவன் தப்பி ஓடியது நான் செய்த ஒரு சிறிய தவறினால்தான். ஆனால் அவனைத் திரும்பக் கொண்டுவந்து ஒப்புவிக்கும் பொறுப்பையும் நானே ஏற்றுக் கொள் கிறேன். அதில் தவறினால் உரிய தண்டனைக்கு உள்ளாகிறேன்'' என்றார் அநிருத்தர்.

''அந்தப் பொறுப்பை முதன்மந்திரிக்கு முன்னால் என் நண்பன் கந்தமாறன் ஏற்றுக் கொண்டுவிட்டான்! பாதாளச் சிறையிலிருந்து தப்பி ஓடியவனைத் துரத்திக் கொண்டு போயிருக்கிறான்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

இந்தச் சம்பாஷணைகள் எல்லாம் நடந்து கொண்டிருந்தபோது அந்த அறையில் பெண்மணிகள் இருவர் அமர்ந்திருந்தனர். அவர்கள் சக்கரவர்த்தினி வானமாதேவியும் இளையபிராட்டி குந்தவையுந்தான்.

வந்தியத் தேவனைக் கந்தமாறன் துரத்திக்கொண்டு போயிருக்கிறான் என்ற செய்தியைக் கேட்டதும் இளைய பிராட்டி குந்தவை தேவியின் முகம் மாறுதல் அடைந்ததை முதன்மந்திரி அநிருத்தர் மட்டுமே கவனித்தார்.

பார்த்திபேந்திரனைப் பார்த்து, ''பல்லவகுமாரா! உன் நண்பன் கந்தமாறன் வெகு கெட்டிக்காரன்தான்! ஆனால் சில காரியங்களில் அவனை நம்புவதில் பயனில்லை. அவனுடைய சொந்தக் கடம்பூர் மாளிகையில் வந்து தங்கியிருந்த சோழ நாட்டின் கண்ணுக்குக் கண்ணான இளவரசர் கரிகாலரை அவனால் காப்பாற்ற முடியவில்லையே? சிறையிலிருந்து தப்பி ஓடிய வந்தியத்தேவனை அவனால் பிடிக்க முடியுமா? எனக்குத் தோன்றவில்லை!'' என்றார் முதன்மந்திரி.

தமது கடைசி வார்த்தைகளில் அடங்கிய குறிப்பைக் குந்தவைப் பிராட்டி தெரிந்துகொண்டாள் என்பதையும் கவனித்துக் கொண்டார்.

''மேலும், கந்தமாறனும் வந்தியத் தேவனும் அத்தியந்த நண்பர்கள் என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்!'' என்றார் சேநாதிபதி வேளார்.

''அது பழைய கதை, சக்கரவர்த்தி! சோழ குலத்துக்குத் துரோகம் செய்த யாரும் சம்புவரையர் குலத்துக்குச் சிநேகமாயிருக்க முடியாது!'' என்றார் பெரிய சம்புவரையர்.

''அதைப் பற்றி இப்போது என்ன பேச்சு? வந்தியத்தேவனைத் திரும்பக் கொண்டு வந்து ஒப்புவிக்கிற பொறுப்பைத்தான் முதன்மந்திரி அநிருத்தர் ஏற்றுக் கொண்டு விட்டாரே? சேநாதிபதி! தஞ்சைக் கோட்டைக் காவலைத் திரும்பச் சின்னப் பழுவேட்டரையரிடம் ஒப்புவித்து விட வேண்டியதுதான்!'' என்றார் சுந்தர சோழர்.

''சக்கரவர்த்தியின் கட்டளை இது என்றால், நிறைவேற்றி வைக்கச் சித்தமாயிருக்கிறேன்!'' என்றார் சேநாதிபதி பெரிய வேளார். அவருடைய குரலின் தொனியில் அவரது உள்ளத்தில் பொங்கிய கோபம் வெளியாயிற்று.

''கொடும்பாளூர் மாமா! தாங்கள் என்னைவிட வயதிலும் அநுபவத்திலும் எவ்வளவோ மூத்தவர். என் தந்தையைப் போல் தங்களிடம் நான் பக்தி கொண்டவன். தங்களுக்கு நான் கட்டளையிட முடியுமா? என் அபிப்பிராயத்தைச் சொன்னேன். இந்த விஷயத்தில் இங்குள்ள மற்றவர்களின் அபிப்பிராயத்தையும் தெரிந்து கொண்டு மேலே செய்ய வேண்டியதைப் பற்றிப் பிறகு கவனிக்கலாமே?'' என்றார் சக்கரவர்த்தி.

''எனக்கு அதில் விருப்பம் இல்லை! சின்னப் பழுவேட்டரையர் தமது கடமையில் தவறி விட்டார்; ஆகையால் அவரிடம் கோட்டைக் காவலைத் திரும்பக் கொடுக்கக் கூடாது!'' என்று கண்டிப்பாக மறுத்துக் கூறினார் திருக்கோவலூர் மலையமான்.

''முதன்மந்திரியின் கருத்து என்ன?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

''நடந்தது நடந்துவிட்டது. இப்போது கோட்டைக் காவலை மாற்றுவதில் சில கஷ்டங்கள் ஏற்படக் கூடும். இராஜ்ய

உரிமை சம்பந்தமாகப் பேசி முடிவு செய்வதற்காக எங்களையெல்லாம் அழைத்திருக்கிறீர்கள். அந்த விஷயம் முடிவான பிறகு இதை எடுத்துக் கொள்ளலாம்'' என்றார் அநிருத்தர்.

''சின்னப் பழுவேட்டரையர் இல்லாமல் நாம் எந்த முடிவுக்கும் வர முடியாது! தனாதிகாரி! தங்கள் கருத்து என்ன?'' என்று கேட்டார் சுந்தர சோழச் சக்கரவர்த்தி.

''மலையமான் கருத்தை நானும் ஒப்புக் கொள்கிறேன். என் சகோதரன் தன் கடமையில் தவறி விட்டான். பொறுப்பைச் சரிவர நிறைவேற்றவில்லை. ஆகையால் கோட்டைக் காவலை அவனிடம் திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை!'' – என்றார் பெரிய பழுவேட்டரையர்.

அவருடைய சகோதர வாஞ்சையை அங்கிருந்த எல்லோரும் நன்கு அறிந்தவர்களாதலால் பெரிய பழுவேட்டரையரின் மேற்கூறிய மறுமொழி அனைவருக்கும் வியப்பை உண்டாக்கியது. அதைக் காட்டிலும், சக்கரவர்த்தி தொடர்ந்து கூறியது அதிக வியப்பையும் திகைப்பையுமே உண்டாக்கி விட்டது.

''தனாதிகாரி! சின்னப் பழுவேட்டரையர் அவருடைய கடமையில் தவறவில்லை. நானும் தாங்களுந்தான் அவருடைய வார்த்தையைக் கேட்கத் தவறி விட்டோம். அவர் அவ்வப்போது செய்த எச்சரிக்கைகளையும் நாம் இருவருமே பொருட்படுத்தவில்லை. எல்லாரும் கேளுங்கள்: மதுரை வீர பாண்டியனுடைய ஆபத்துதவிகளைப் பற்றிச் சின்னப் பழுவேட்டரையர் அடிக்கடி எனக்கு எச்சரிக்கை செய்து வந்தார். அவர்கள் இந்தக் கோட்டைக்கு உள்ளேயே தொடர்பு வைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். ஆகையால் என் அரண்மனைக்கும் அந்தப்புரத்துக்கும்கூட இன்னும் கடுமையான காவல் போட வேண்டும் என்று வற்புறுத்தினார். தனாதிகாரியின் அரண்மனைக்கும் என் அரண்மனைக்கும் உள்ள இரகசிய வழிகளை அடைத்து விட வேண்டும் என்றும் வற்புறுத்தினார். பெரிய பழுவேட்டரையரிடம் காலாந்தக கண்டர் எவ்வளவு பக்தி கொண்டவர் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. ஆயினும் தனாதிகாரி பேரிலேயே அவர் என்னிடம் புகார் சொன்னார். தம் தமையனார் ஏமாற்றப்பட்டு வருவதாகவும், அவர் அரண்மனையிலேயே சதிகாரர்கள் வருவதாகத் தாம் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார். பெரிய பழுவேட்டரையரை அவருடைய அரண்மனையிலிருந்து வேறு அரண்மனைக்குப் போகச் சொல்லி விட வேண்டும் என்றும், பொக்கிஷத்தையும் வேறு இடத்துக்கு மாற்றி விட வேண்டும் என்றும் யோசனைகள் கூறினார். அந்த எச்சரிக்கைகளையெல்லாம் நான் செவியில் வாங்கிக் கொள்ளவே இல்லை...!''

இச்சமயம் பெரிய பழுவேட்டரையர் தமது தொண்டையை ஒருமுறை கனைத்துக் கொண்டார். அதைக் கேட்டுச் சுந்தர சோழர் தம் பேச்சை நிறுத்தினார்.

''சக்கரவர்த்தி! என் பேரில் தங்களுடைய கருணை காரணமாகத் தாங்கள் சொல்லாமல் விட்டதையும் நான் சொல்கிறேன். என்னுடைய அவமானத்தைத் தாங்கள் வெளியிட விரும்பவில்லை; நானே வெளியிட்டுக் கொள்கிறேன். முதிய பிராயத்தில் நான் மோகவலையில் மூழ்கி மணந்து கொண்ட நந்தினியைப் பற்றி என் சகோதரன் எனக்கு எச்சரிக்கை செய்தான். மந்திரவாதி என்று சொல்லிக்கொண்டு அவளிடம் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளின் தலைவன் வந்து போவதாகவும் எச்சரிக்கை செய்தான். மாய மோகத்தில் மூழ்கி, கண்ணிழந்து குருடனாயிருந்த நான் அதற்குச் செவி சாய்க்கவில்லை. ஆனாலும் அவன் தன் கடமையிலிருந்து தவறியவன்தான்! அவனுக்கு அவ்வளவு நிச்சயமாகத் தெரிந்திருக்கும்போது அவன் அந்தப் பாதகியையும் அவளிடம் வந்து கொண்டிருந்தவர்களையும் கண்டுபிடித்துக் கொன்றிருக்க வேண்டும். நான் தடுத்திருந்தால், தமையன் என்று பாராமல் அவனுடைய கை வாளால் என்னையும்




கொன்றிருக்க வேண்டும். அவ்விதம் செய்யத் தவறியது அவன் கடமையைக் கைவிட்டதுதானே?'' என்று பெரிய பழுவேட்டரையர் தம் பெரிய குரலில் கூறியதைக் கேட்டவர்களுக்கெல்லாம் மெய் சிலிர்த்தது. அவருடைய வார்த்தைகளில் ததும்பிய சொல்ல முடியாத மனவேதனையை அறிந்துகொண்டு ஒவ்வொருவரும் வேதனைப் பட்டார்கள்.

''தனாதிகாரி! கொஞ்சம் பொறுங்கள்! தங்கள் சகோதரர் சின்னப் பழுவேட்டரையர் கடமையைக் கருதி அவ்வாறு செய்யக் கூடியவர்தான். அதற்கு நானே தடையாக இருந்தேன். தங்களைப் பற்றியாவது தங்கள் இளைய ராணியைப் பற்றியாவது ஏதாவது புகார் சொல்வதாயிருந்தால், என் முகத்திலேயே விழிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டேன். தங்களுடைய அரண்மனையிலிருந்து தங்களை வேறிடத்துக்கு மாற்றிவிட்டு, அங்கே வேளக்காரப் படையைக் கொண்டு வைக்கும் யோசனையையும் நிராகரித்தேன். அப்படி அஞ்சி அஞ்சி வாழ்ந்து எதற்காக இந்த உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டேன். என் மனத்தில் குடி கொண்டிருந்த வேதனையும் என் உடலைப்

பற்றியிருந்த நோயும் என்னை வாழ்க்கையை வெறுக்கும்படி செய்திருந்தன. பழுவூர் மாமா! எனக்காவது என் குலத்துக்காவது நேர்ந்திருக்கும் எந்தத் தீங்குக்கும் தாங்கள் எவ்வகையிலும் பொறுப்பாளியல்ல; தங்கள் சகோதரரும் பொறுப்பாளியல்ல. அவற்றை நானேதான் தேடிக் கொண்டேன்!''

இவ்வாறு சக்கரவர்த்தி கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரிய பழுவேட்டரையரின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியது.

''ஆம்; சின்னப் பழுவேட்டரையர் மீது அணுவளவும் தவறில்லை. வந்தியத்தேவன் என்னும் ஒரு வாலிபன் இங்கு முதன்முதல் வந்திருந்தபோதே காலாந்தக கண்டர் எச்சரிக்கை செய்தார். அவன் இக் கோட்டைக்கு வெளியில் பல்லக்கில் வந்த பழுவூர் இளைய ராணியோடு இரகசியம் பேசியதாகக் கூறினார். அவனும் சோழ குலத்தின் எதிரிகளோடு சேர்ந்து சதி செய்பவனாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்டார். பழுவூர் முத்திரை மோதிரத்தைக்





என்னை ஏற்பாடு செய்யும்படி கூறினார். நான் ஈழத்துக்கும் என் சீடன் ஆழ்வார்க்கடியானை அனுப்பினேன்; காஞ்சிக்கும் அவனைத் தொடரும்படி அனுப்பியிருந்தேன்...''

''அப்படியே இருக்கட்டும்; நீங்கள் இரு காட்டி அவன் கோட்டைக்குள்ளே பிரவேசித்ததையும் பழுவூர் அரண்மனையின் அந்தப்புரத்து இரகசிய வழியாகவே அவன் இங்கிருந்து தப்பிச் சென்றிருக்க வேண்டும் என்றும் கூறினார். அதையெல்லாம் நான் பொருட்படுத்தாமல் அலட்சியம் செய்து வந்தேன். அறிவிற் சிறந்த மேதாவியான நம்முடைய முதன்மந்திரி அநிருத்தரும், என் செல்வக் குமாரி இளையபிராட்டியும் கூட வந்தியத்தேவன் விஷயத்தில் ஏமாந்து போனார்கள். அவன் மூலமாக முக்கியமான ஓலைகள் அனுப்பி வைத்தார்கள்...''

அநிருத்தர் இச்சமயம், ''சக்கரவர்த்தி! நான் ஒருவேளை ஏமாந்து போயிருக்கலாம். ஆனால் இளையபிராட்டி அப்படியெல்லாம் எளிதில் ஏமாந்து போகக் கூடியவர் அல்ல. வந்தியத்தேவனிடம் ஓலை அனுப்பிவிட்டு, அவன் நடவடிக்கைகளைக் கவனிக்க வரும் அவனிடம் ஏமாறவில்லையென்றே வைத்துக் கொள்வோம். பாதாளச் சிறையிலிருந்து அவனும் இன்னொருவனும் தப்பிச் சென்றது உண்மைதானே? அதை நீங்கள் யாரும் மறுக்க முடியாது அல்லவா? சின்னப் பழுவேட்டரையரிடம் இந்தக் கோட்டைக் காவல் இருந்திருந்தால், அவ்வாறு அவர்கள் ஒருகாலும் தப்பிச் சென்றிருக்க முடியாது. ஆகையால், சேநாதிபதி! சின்னப் பழுவேட்டரையரை உடனே தருவித்து அவரிடம் தஞ்சைக் கோட்டைக் காவலைத் திரும்ப ஒப்புவித்து விடுங்கள். என்னுடைய கட்டளை என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள்!'' என்றார் சக்கரவர்த்தி.

''அப்படியே, பிரபு! நாங்கள் இப்போது விடை பெற்றுக் கொள்ளலாமா?'' என்று சேநாதிபதி பூதி விக்கிரம கேசரி கேட்டார். அவருடைய

குரலில் ஆத்திரம் தணிந்திருந்தது. பழுவேட்டரையர்கள் விஷயத்தில் சுந்தர சோழர் காட்டிய அன்பும் ஆதரவும் குற்றத்தைப் பொறுத்துக் குணத்தையே பாராட்டிய சினேகப் பான்மையும் சேநாதிபதியின் உள்ளத்தையும் உருக்கி விட்டிருந்தது. அவர் ஒருகணம் அப்படியே திகைத்துப் போய்விட்டார்.

"ஆமாம்; இப்பொழுது எல்லாரும் போகலாம். சின்னப் பழுவேட்டரையரும் வந்தபிறகு, மறுபடியும் கூடி மேலே நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசலாம். இராஜ்ய உரிமையைப் பற்றி என் பெரிய அன்னை 'முதிய பிராட்டியாரோடு இன்னும் நான் பேசி முடிக்கவில்லை. அதற்கும் கொஞ்சம் அவகாசம் வேண்டும்!" என்றார் சக்கரவர்த்தி.

அனைவரும் புறப்படும் சமயத்திலே பார்த்திபேந்திரன் "ஐயா! சிநேகத் துரோகியும் இராஜ்யத் துரோகியுமான வந்தியத்தேவனைத் திரும்பக் கொண்டு வந்து ஒப்புவிக்கும் பொறுப்பை முதன் மந்திரி ஒப்புக் கொண்டார். அதை அவருக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். என் உயிருக்குயிரான ஆப்த நண்பராக இருந்த இளவரசர் ஆதித்த கரிகாலரின் கொடிய மரணத்தை வேறு யார் மறந்தாலும் நான் மறக்க முடியாது. அவருடைய மரணத்துக்குக் காரணமாயிருந்த குற்றவாளியைக் கண்டுபிடித்துத் தண்டித்தேயாக வேண்டும்!" என்றான்.

பெரிய பழுவேட்டரையர் கிழச் சிங்கத்தின் கர்ஜனையைப் போல் ஒருமுறை தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஏதோ பேச எண்ணியவர் பின்னர் தம் கருத்தை மாற்றிக் கொண்டதாகத் தோன்றியது. ஒன்றும் சொல்லாமல் வெளியேறினார். மற்றவர்களும் அவரைத் தொடர்ந்து சென்றார்கள்.

அன்று மாலையே சக்கரவர்த்தியின் கட்டளைப்படி தஞ்சாவூர்க் கோட்டையின் காவல் பொறுப்பு மீண்டும் சின்னப் பழுவேட்டரையரிடம் ஒப்புவிக்கப்பட்டது. முதலில் அவர் அதை ஏற்றுக் கொள்ளத் தயங்கினார்; ஆட்சேபனைகளும் கூறினார். இதிலும் ஏதேனும் சூழ்ச்சிகள் இருக்கக் கூடும் என்று தம் சந்தேகத்தை வெளியிட்டார். இது சக்கரவர்த்தியின் கண்டிப்பான கட்டளை என்று பெரிய பழுவேட்டரையர் எடுத்துக் கூறிய பிறகு கோட்டைக் காவலை மீண்டும் ஏற்றுக்கொண்டார்.

கொடும்பாளூர் வீரர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் கோட்டையிலிருந்து வெளியேற்றப் பட்டார்கள். கோட்டை வாசலிலும் மதில் சுவர்களிலும் முன்போல் பழுவூர் வீரர்கள் காவல் புரியத் தொடங்கினார்கள்.

இந்த மாறுதல் விபரீதமான விளைவுகளுக்குக் காரணமாயிற்று. பழுவூர் வீரர்களுக்கும் கொடும்பாளூர் வீரர்களுக்கும் அடிக்கடி சச்சரவு மூண்டு சில சமயம் குழப்பமும் விளைந்தது.

"பொன்னியின் செல்வர் வாழ்க!" என்ற கோஷமும், "இளவரசர் மதுராந்தகர் வாழ்க!" என்ற கோஷமும் மாறி மாறிப் போட்டிக் கோஷங்களாக எழுந்த வண்ணமிருந்தன.

இந்தக் கோஷங்கள் நாடெங்கும் பரவின; பொதுமக்களும் அவற்றில் கலந்து கொண்டார்கள்.

அடுத்த மூன்று தினங்களில் சோழ நாடு முழுவதும் ஒரே அல்லோலகல்லோலமாகிவிட்டது.

வாய்ச் சண்டை கைச் சண்டையாகித் தடியடிச் சண்டையாக முற்றியது. கழிகளும் தடிகளும் வாள்களுக்கும் வேல்களுக்கும் இடம் கொடுத்துச் சென்றன.

சில நாளைக்கு முன்பு சோழவள நாட்டைப் பாழ்படுத்திய புயலையும் வெள்ளத்தையும் போலவே இப்போது ஆத்திரப் புயலும் வெறியாகிய வெள்ளமும் நாலாபுறமும் பரவி நாட்டில் நாசத்தை விளைவித்தன.

(தொடரும்)

# கழுத்து முதுகு மூட்டு வலியா, டச்!

**விளையாட்டு வீரர்களுக்கும், பெரிய பெரிய தனியார் கம்பெனிகளின் ஊழியர்களுக்கும், 'சென்னை கிரிக்கெட் கிளப்' உட்பட பல கிளப் உறுப்பினர்களுக்கும் ஃபிஸியோதெராபிஸ்ட்டாக, கால்களில் சக்கரம் கட்டிக்கொண்டு பிஸியாக இருக்கும் கே.எஸ். சித்தார்த்தனை மடக்கினோம். எங்கள் கல்கி வாசகர்களுக்காக சில உடற்பயிற்சிகளைச் சொல்லித் தரக் கூடாதா என்று கேட்டபோது, ''நான் இந்திய கிரிக்கெட் அணியின் ஃபிஸியோவாக இருந்தபொழுது என்னைப் பெரிதும் ஊக்கப்படுத்தி கட்டுரை எழுதிய கல்கியை நான் இன்றும் மறக்கவில்லை, நிச்சயம் செய்கிறேன்!'' என்று உடனே அப்பாயிண்ட்மெண்ட் கொடுத்து விட்டார்.**

**இனி கே.எஸ். சித்தார்த்தனுடைய வகுப்புக்குப் போக வேண்டியதுதானே? உடற்பயிற்சிகளைச் செய்துகாட்டி இருப்பவர், சின்னத்திரையின் 'தில்லானா தில்லானா' புகழ் திவ்யதர்ஷினி.**

**க**ழுத்துவலி, முதுகுவலி, மூட்டுவலி என்று டாக்டரிடம் போகும்பொழுது, அவர் என்ன செய்கிறார்?

எக்ஸ்ரே அல்லது அல்ட்ராசவுண்டு எடுத்துப் பார்க்கிறார். வலியைக் குறைக்க மாத்திரை மருந்து எழுதித் தருகிறார். டிராக்ஷன் சிகிச்சை அறிவுறுத்துகிறார். பிறகு, இதெல்லாம் வலிக்குத் தற்காலிக தீர்வு தான் என்றும், நிரந்தரத் தீர்வு வேண்டுமானால் உடற்பயிற்சியைத் தவிர வேறு வழியே இல்லை என்றும் கூறி, உடற்பயிற்சிகளைக் கற்றுத் தருகிறார்.

வலியோடு, வேதனையோடு அந்த நேரத்தில் உடற்பயிற்சிகளைச் செய்வதைவிட, தினசரி 15 நிமிடம் ஒதுக்கி, சில சுலபமான உடற்பயிற்சிகளைச் செய்துவிட்டால், இந்த வலிகளெல்லாம் வருவதற்கு வாய்ப்பே இல்லை.

வலி எதனால் வருகிறது? தசைகள் இறுகிப் போய்விடுவதால். தசைகள் ஏன் இறுகிப் போய் விடுகின்றன? உடம்புக்கு போதிய அளவு வேலை, எக்ஸர்ஸைஸ் இல்லாததால்.

நகரங்களில் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் வைட் - காலர் - உத்தியோகம், அதாவது, ஆபீஸ் உத்தியோகம் பார்க்கிறவர்கள். தொடர்ந்து 7-8 மணி நேரம் ஒரே நிலையில் உட்கார்ந்துகொண்டு ஓய்வில்லாமல் வேலை செய்பவர்கள் குளிர்ச்சாதன அறைகளில், உடலைச் சிறிதும் அலட்டிக் கொள்ளாமல், மூளையை மட்டும் பிரயோகித்து வேலை செய்பவர்கள். இப்படிச் செய்யும்பொழுது, உடலில் உள்ள ரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு தசைகள் இறுகிக் கொள்கின்றன. இதைத்தான் ஆங்கிலத்தில் 'ஸ்ட்ரெஸ்' என்று சொல்கிறோம். இந்த 'ஸ்ட்ரெஸ்' என்ற 'அக்கவுண்ட்'டை உடற்பயிற்சி மூலம் தினப்படி செட்டில் பண்ணிக்கொண்டே வரவேண்டும். இல்லாவிட்டால், அது, மலையைப் போலக் குவிந்து, பிற்காலத்தில் ஸ்பாண்டிலைடிஸ், ஆர்த்ரைடிஸ் என்று பயமுறுத்த ஆரம்பித்து விடும்.

இதற்கு யோகாவும் ஒரு தீர்வுதானே என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் யோகாவில், 'பிரெத் - கன்ட்ரோல்' - அதாவது, மூச்சைக் கட்டுப்படுத்தி இழுக்கவும், விடவும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அதைத் தவறாகச் செய்துவிட்டால் 'சைடு - எஃபெக்ட்டு'கள் அதிகம்.

நான் சொல்லித் தருவது சாதாரண ஸ்ட்ரெச்சிங் உடற்பயிற்சிகள்தான். இவற்றைச் சரியான முறையில் செய்யாவிட்டால் பலன் குறைச்சலாக இருக்குமே ஒழிய, மேற்கொண்டு எந்தத் தொந்தரவுகளும் இருக்காது.

இவற்றைச் செய்யும்பொழுது, பிற்காலத்தில் வரக்கூடிய முதுகு, கழுத்து, மூட்டு வலிகளை எல்லாம் தவிர்த்து விடுகிறோம் என்பது ஒரு பக்கம். இன்னொரு பக்கம், உடம்பு, கலகலப்பாக, எந்த நேரமும் சுறுசுறுப்பாக இருக்கும். உங்கள் வேலையின் தரமும் பன்மடங்காகிவிடும்.

நான் சொல்லித் தரும் உடற்பயிற்சிகளை, உங்களுடைய அலுவலக அறைகளிலேயே, நாற்காலியில் உட்கார்ந்துகொண்டே செய்யலாம். வேலையைத் தொடங்கும் முன்போ, அல்லது, உணவு இடை வேளையின்போதோ, அல்லது, வீட்டுக்குக் கிளம்பும் முன்னரோ



**இனி உடற்பயிற்சிகளைப் பார்ப்போமே...**

இரு கைகளையும் படத்தில் இருக்கிற மாதிரி கோத்துக் கொள்ளுங்கள். முட்டிகள் மடங்கக் கூடாது என்பது முக்கியம். ஒன்று, இரண்டு என்று பத்து வரை எண்ணுங்கள். எண்ணிக் கொண்டே போகப் போக, கைகளை மேல் நோக்கி இழுங்கள், அதாவது, ஸ்ட்ரெச் செய்யுங்கள். பத்து என்று எண்ணும்பொழுது, இதை விட இழுக்க முடியாது என்ற நிலையை நீங்கள் அடைந்திருக்க வேண்டும்.

செய்யலாம். வீடுதான் சௌகரியம் என்று நினைத்தால், படுக்கையில் உட்கார்ந்து கொண்டே கூடச் செய்யலாம். குழந்தைகளும் செய்யலாம், வயதானவர்களும் செய்யலாம்.

இந்த உடற்பயிற்சிகளில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் ஒன்றாகச் செய்து முடித்து விட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் ஒவ்வொன்றாகச் செய்து கொண்டே வரலாம். அதேபோல், ஒரு நாளைக்கு ஒருமுறைதான் செய்ய வேண்டும் என்பதில்லை, ஐந்துமுறை கூடச் செய்யலாம்.

உடற்பயிற்சிகளைச் செய்யும்பொழுது ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். எல்லா பிரச்னைகளையும் ஓரங்கட்டி விட்டு, உடற்பயிற்சியில் மட்டுமே மனத்தைச் செலுத்த வேண்டும். 'நாம் சரியாகச் செய்கிறோமா, சரியாகச் செய்கிறோமா' என்று டென்ஷன் அடையாமல், (டென்ஷனைப் போக்குவதற்குத் தானே உடற்பயிற்சியே!) அவற்றைச் செய்ய வேண்டும். மறுபடியும் சொல்கிறேன், தவறாகச் செய்து விட்டால் எந்தப் பிரச்னையும் வராது. இது உறுதி!



வலது கையை நேராக நீட்டி, அதன் முழங்கை மூட்டின் மேல்
இடது கையை அழுத்துங்கள். அழுத்தி விட்டீர்களா? இப்போது
பத்து எண்ணுங்கள். கொஞ்சம் கொஞ்சமாக இடது கை தரும்
அழுத்தம் கூட வேண்டும். வலது கை உடம்பை நோக்கித்
தள்ளப்பட வேண்டும்.
பிறகு இடது கையை நீட்டி திரும்ப இதே பயிற்சியைச் செய்யுங்கள்.



இரண்டு கைகளும் மடங்காமல் இருப்பது முக்கியம். இதே நிலையில் பத்து எண்ணிவிட்டு, பிறகு கையை மாற்றிக் கொண்டு (இடது கை தரையைத் தொட, வலது கை மேலே இருக்க வேண்டும்) திரும்ப, பத்து எண்ணுங்கள்.

முழங்கைகளைச் சிறிது மடக்கிக் கொள்ளுங்கள். தலையை ஒரு கைமீது சாய்த்துக்கொண்டு பத்து எண்ணுங்கள்.



கைகளை முழுமையாக நீட்டி, விரல்களில் நன்றாக அழுத்தம் கொடுத்து பத்து எண்ணுங்கள். விரல்கள் மேஜையை நன்றாக அழுத்த வேண்டும் என்பது முக்கியம்.





முதுகு, நாற்காலியில் முழுதாகச் சாய்ந்திருக்கும்படி அமர்ந்து கொள்ளுங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு அண்ணாந்து பார்த்து, பத்து எண்ணுங்கள். பிறகு, முகத்தை மட்டும் தொங்கப் போட்டுக்கொண்டு பத்து எண்ணுங்கள்.



இது இடுப்புக்கான உடற்பயிற்சி. கால்களும் உடம்போடு சேர்ந்து திரும்பி விடாமல், முட்டிகள் நேரே பார்த்தபடி இருக்க வேண்டும் என்பது முக்கியம். இதே நிலையில் பத்து எண்ணிவிட்டு, பிறகு, வலது பக்கம் திரும்பி, இதேபோல் பின்புறம் பார்த்து, பத்து எண்ணுங்கள்.



படத்தில் உள்ளதுபோல், கைகளை, கால்களுக்கு நடுவில் கோத்துக்கொண்டு குனியுங்கள். குனியும்பொழுது, தலையை 'டொப்' என்று கீழே போடாமல், உடம்பை முதலில் கீழே கொண்டு போய், பிறகு தலையைத் தொங்கப் போட வேண்டும். இதே நிலையில் பத்து எண்ணுங்கள்.

ஒன்றிலிருந்து பத்து வரை எண்ணுவதற்குப் பதில், நூற்றியொன்றிலிருந்து நூற்றிப்பத்து வரை எண்ணினால், எண்ணும் வேகத்தைப் பற்றிக் கவலைப்படவே வேண்டாம். கணக்கு சரியாக வந்து விடும்.

இந்த எட்டு உடற்பயிற்சிகளை செய்து பாருங்கள்! அடுத்த வார வகுப்பின் போது இன்னும் ஐந்து உடற்பயிற்சிகளைச் சொல்லித் தருகிறேன்!

தொகுப்பு: **கிருஷ்ணா சிதம்பரம்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

# அழைக்கிறது அமெரிக்கா!

## கல்கி - டயானா வொர்ல்ட் டிராவல் இணைந்து வழங்கும்

### குவிஸ் கூப்பன் — 21

1) மார்க்கோ போலோ 'ஜாவா மைனர்' என்று குறிப்பிட்ட தீவு எது?

2) பெரிய தீவான கிரீன்லாந்து ஒரு தனிநாடா? இல்லையேல் அது எந்த நாட்டைச் சேர்ந்தது?

3) இலங்கைத் தீவுக்குப் பாலமமைக்க உதவ முன்வந்ததற்காக இந்த விலங்கின் முதுகில் ராமபிரான் அன்புடன் தடவியதுதான் மூன்று கோடுகளாகப் பதிந்து விட்டதாம். அது எந்த உயிரினம்?

4) போர்ட் ப்ளேர் எந்தத் தீவுகளின் தலைநகரம்?

5) 'காதலெனும் தீவினிலே' என்ற நூலை எழுதியவர் ஒரு பிரபல பத்திரிகையாசிரியர். அவர் யார்?

6) நாற்புறமும் சூழப்பட்ட ஏரியொன்றின் நடுவில்தான் ஹைதராபாதில் மிக உயர்ந்த புத்தர் சிலை உள்ளது. அந்த ஏரியின் பெயர் என்ன?

**விடைகள்:**

1) ..............................

2) ..............................

3) ..............................

4) ..............................

5) ..............................

6) ..............................

### குவிஸ் போட்டி — 21

இந்த வார க்விஸ் 'தீவுகள் ஸ்பெஷல்!' சிந்தித்து கூப்பனில் பூர்த்தி செய்து முந்தைய வாரங்களில் செய்ததைப் போலவே மற்ற கூப்பன்களோடு பூட்டி வையுங்கள். இருபத்தி ஆறு வார இறுதியில் எல்லா கூப்பன்களையும் எங்களுக்கு அனுப்புங்கள். இதில் மிக அதிகமான கேள்விகளுக்குச் சரியான பதில் எழுதும் ஒரு நபருக்கு

**அமெரிக்கப் பயணம் பரிசு!**

**ஐரோப்பா பயணம்**
**இரண்டாவது பரிசு!**

**மலேஷியா—சிங்கப்பூர்**
**பயணம் மூன்றாவது பரிசு!**

இந்த மூன்று நிலைகளிலும் ஒருவருக்கு மேல் சரியான பதிலை எழுதியிருந்தால் இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை! பயணப் பரிசு பெறாதவர்களுக்கு அமரர் கல்கியின் நூல்கள் உண்டு.

ஆசிரியர் தீர்ப்புதான் இறுதி!



# ஞானம் சித்திக்க, சாந்தம் கூட்டிட அன்னபூரணி க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வோம் வாருங்கள்!



**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் அருளாசியுடன் மாதாமாதம் அமாவாசை அன்று மிகுந்த புண்ணிய க்ஷேத்ரமான காசியில் அன்னதானம் செய்வதில் நீங்களும் பங்கேற்கலாம்...**



பேரன்புடையீர்! வணக்கம். தங்களின் வேண்டுதல்கள் நிறைவேறவும், மங்கலம் உண்டாகவும் அருள்மிகு ஸ்ரீ அன்னபூரணி அன்னை அருள்புரியட்டும்.

"பிரபஞ்ச முழுமைக்கும் உணவுபடைக்கும் தாயாக விளங்கும் அன்னபூரணித்தாயார் கோயில் கொண்டிருக்கும் காசியில் மாதாமாதம் அமாவாசை அன்று அன்னதானம் செய்யப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆன்மீக அன்பர்கள் அனைவரும் காசியில் அன்னதானம் [illegible] முடியும் என்ற [illegible] "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" என்ற தனி அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம். இந்த அன்னதான திருப்பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி "[illegible] காசியில் [illegible] அடியார்களுக்கும் அன்னம் அளிப்பதில் நாமும் ஓரளவேனும் பங்குகொண்டோம்" என்ற ஆத்ம திருப்தியை அடைய இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

- ★ தாங்கள் கொடுக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ★ ரூ.500 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.2000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் நான்கு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.5000 அனுப்பும் அன்பர்களுக்கு 'ஆன்மீகம்' மாத இதழ் இருபது ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையை அனுப்புவோர், திருமணநாள், பிறந்தநாள் மற்றும் திதி நாள் போன்ற தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதைத் தெரிவித்தால் அதன்படி தாங்கள் விரும்பும் மாதத்தில் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்கிறோம். அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.2000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு கங்கை தீர்த்தத்துடன் கூடிய காசி செம்பும் காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும் ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் வண்ணப்படமும், சிறிய அளவில் அழகான புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் [illegible] ஒவ்வொரு மாதமும் அமாவாசை அன்று காசியில் அன்னதானம் செய்து தொடர்ந்து இருபது வருடங்கள் [illegible] 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் [illegible] செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் [illegible] ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள [illegible] புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

**காசி, கயா, பிரயாகை (திரிவேணி சங்கமம்) ஆகிய இம்மூன்று பித்ரு க்ஷேத்ரங்களிலும் புண்ணிய காரியங்கள், பித்ரு காரியங்கள், பிண்டம் போடுதல், தர்மங்கள், ச்ராத்தம், திவசம், தர்ப்பணம் போன்றவற்றை அவரவர் விருப்பப்படி அன்னதானக் கைங்கர்ய அன்பர்களுக்கு செய்து தரப்படும்.**

குடும்பத்தில் தாய் தந்தையர்கள், மூதாதையர்களுக்கு பிண்டப்பிரதானம் மற்றும் தர்ப்பணம் காசியிலும், கயாவிலும், பிரயாகையிலும் நேரில் சென்று செய்ய முடியாதவர்களுக்காக, சாஸ்திரிகளைக் கொண்டு "ஸ்ரீ அன்னபூரணி அன்னதான சேவா டிரஸ்ட்" மூலம் செய்யப்படுகிறது.

பித்ருக்களுக்கு பிண்டப்பிரதானம் செய்ய காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று பித்ரு க்ஷேத்ரங்களுக்கும் தனித்தனியாக ரூபாய் 1000/- அனுப்பும்போது யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி மற்றும் கோத்ரம் போன்ற விபரங்களையும் அவசியம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். பிண்ட பிரதானத்திற்காக ரூ.5000/- அனுப்பும் அன்பர்கள் சார்பாக தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை இருபது ஆண்டுகளுக்கு மூன்று பித்ரு லோகத்தில் எந்த இடத்தில் யாருக்கு ச்ராத்தம் செய்ய விரும்புகிறீர்களோ அவர்களுக்கு ச்ராத்தம் செய்யப்படும். பித்ரு காரியங்களுக்குப் பணம் அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசி, கயா, பிரயாகை ஆகிய மூன்று இடங்களிலும் உள்ள தெய்வீக ஆலமரமான 'அக்ஷய வடத்தின்' படமும், கயாவில் உள்ள விஷ்ணு பாதத்தின் படமும் அனுப்பி வைக்கப்படும். நம் வீட்டில் செய்யும் ச்ராத்தத்திற்கு தாய், தந்தையர், உறவினர்கள் மட்டுமே பங்குகொள்ள வாய்ப்புண்டு. மூன்று பித்ரு க்ஷேத்ரங்களில் ஏதாவது ஒரு அக்ஷய வடத்தில் (ஆலமரம்) பிண்டப்பிரதானம் செய்தால் ஏழு தலைமுறைக்கு பித்ருக்கள் கூட்டமே முக்தி அடைவதுடன் பித்ரு தோஷங்களும் நிவர்த்தியாகும்.

**அன்னதான சேவையில் ஈடுபடும் ஆன்மீக அன்பர்கள் தங்கள் நன்கொடையை Cheque / D.D / M.O மூலம் ( Sri Annapoorani Annadhana Seva Trust, Chennai - 4 ) என்ற பெயருக்கு எடுத்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கலியுகத்தில் அன்னதான சமுதாயப்பணி மகத்தான தெய்வீகப்பணியாக காசி திருத்தலத்தில் தழைத்திட உதவுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.**

நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு உண்டு.


*Cheque / D.D / M .O அனுப்ப வேண்டிய முகவரி :*


## ஸ்ரீ அன்னபூரணி அன்னதான ஸேவா டிரஸ்ட்

SRI ANNAPOORANI ANNADHANA SEVA TRUST (Regd.)

68, Nadu Street, Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax: ( 044 ) 4616311 E- Mail:siva siva@vsnl.net


12

'ரி'ச்சி' என்கிற அந்தப் புத்தகம் வேகமாய்ப் புரட்டப்பட்டு முப்பத்தியோராவது பக்கத்தில் வருணின் பார்வை பதிந்தது.

'தமிழ்நாட்டின் ஒன்பதாவது பணக்காரர்' என்ற ஆங்கில தலைப்புக்குக் கீழே ஒரு நடுத்தர வயது நபரின் போட்டோ தெரிந்தது. தொப்பை போட்ட உடம்பை சஃபாரி மூடியிருந்தது. மிளகும் உப்பும் கலந்த கலரில் மேல் உதட்டில் மீசை தெரிய, கண்களில் ரிம்லெஸ் கண்ணாடி.

வருண் அந்தப் போட்டோவையே பார்த்துக்கொண்டிருக்க, தயானந்த் கேட்டார்.

''வருண்...! இந்தப் போட்டோவில் இருக்கிற நபரோட பெயர் கீர்த்திவாசன். இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி, தமிழ்நாட்டின் ஒன்பதாவது பணக்காரர். இவரை இதுக்கு முந்தி நீ எங்கேயாவது பார்த்திருக்கியா...?''

''இல்ல ஸார்...''

''பெரிய பிஸினஸ் மேக்னேட். பணம் கொழிக்கிற எல்லா பிஸினஸுக்கும் சொந்தக்காரர். இவரோட பார்வை படாத பிஸினஸே கிடையாது. ஊட்டியில் இருக்கிற டீ எஸ்டேட்ஸில் நாற்பது பர்சண்ட் இவருக்குச் சொந்தம். டெல்லியில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, தொழில்துறை மந்திரியின் கடைக்கண் பார்வை இவர் மேல் படாமல் இருக்காது. இவரோட மனைவி பெயர் அமிர்தவல்லி. பழைய சமஸ்தான பரம்பரையைச் சேர்ந்தவள். பணத்தோடு பணம் சேரவே, கீர்த்திவாசன் கலபமா பெரிய நிலைமைக்கு வந்துட்டார். இவருக்கு இரண்டு மகன்கள். இரண்டு பேருமே அப்பாவை ஓரம் கட்டுகிற அளவுக்கு பிஸினஸ் விஷயங்களில் கில்லாடிகள். 'ரிச்சி டாப் - 10'ல் ஒன்பதாவது இடத்தில் இருக்கிற அப்பாவை முதல் இடத்துக்குக் கொண்டு வர்றது தான் அவர்களோட சமீபகால லட்சியம்...''

# முன்பனி நிலவு

**ராஜேஷ் குமார்**

வருண் புத்தகத்திலிருந்து பார்வையை எடுக்காமல் திகைப்போடு கேட்டான்.

''ஸார்... உங்க மனைவியை உயிரோடு தகனம் பண்ணி, அந்தத் தகனக் காட்சியை வீடியோவா எடுத்தது இந்த கீர்த்திவாசன் தானா...?''

''ஆமா...''

''உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

''போன வாரத்துல ஒருநாள், ராத்திரி பதினோரு மணி இருக்கும். ஜி.ஹெச்.சிலிருந்து எனக்கு போன்கால் ஒண்ணு வந்தது. சீஃப் டாக்டர் ரகுபதி பேசினார். என்னை உடனடியா ஹாஸ்பிடலுக்குப் புறப்பட்டு வரும்படி சொன்னார். நானும் போனேன். டாக்டர் ரகுபதி என்னை ஐ.ஸி. யூனிட்டுக்குக் கூட்டிக்கிட்டு போய், ரோடு ஆக்ஸிடெண்ட்டில் சிக்கி உயிருக்குப் போராடிக்கிட்டிருந்த ஒரு வயதான நபரைக் காட்டினார். அவரோட பேர் முருகப்பன். இரண்டு நாளைக்கு முன்னாடி லாரியில் அடிப்பட்ட அவரை, யாரோ கொண்டு வந்து அட்மிட் பண்ணிட்டுப் போயிருக்காங்க. இரண்டுநாளா சுய உணர்வு இல்லாமே கிடந்தவர் ஒரு மணி நேரத்துக்கு முன்னாடிதான் கண் முழிச்சுப் பார்த்திருக்கார். தனக்குச் சொந்த பந்தம் யாரும் கிடையாதுன்னு சொன்ன அவர், என்னோட பேரைக் குறிப்பிட்டு, பார்க்கணும்ன்னு சொல்லியிருக்கார். உயிருக்குப் போராடிக்கிட்டு இருந்த அந்த முருகப்பன் என்னைப் பார்த்ததும் 'உங்ககிட்ட கொஞ்சம் தனியா பேசணும்'னு சொன்னார். டாக்டர் ரகுபதி கதவைச் சாத்திவிட்டு வெளியே போய்விட, முருகப்பன் கண்களில் நீர் வழிய கையெடுத்துக் கும்பிட்டான். 'அய்யா! கடந்த எட்டு வருஷ காலமா என் மனசுக்குள்ளேயே




அடைச்சு வெச்சிருந்த உண்மையை இப்போ உங்ககிட்டே சொல்லப் போறேன். உங்க மனைவியை உயிரோடு தகனம் பண்ணி, அதை வீடியோ காஸெட்டாக எடுத்து உங்களுக்கு அனுப்பி வைச்சது யார் தெரியுமா ஸார்?'ன்னு கேட்டான். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. 'யார்?'ன்னு கேட்டேன். கிர்த்தி ங்கிற கிர்த்திவாசன்னு சொன்னான். அதிர்ச்சியில் எனக்குப் பேச்சே வரலை. ஒரு வழியா அதிர்ச்சியை ஜீரணம் பண்ணிக்கிட்டு, 'என் மனைவியை உயிரோடு தகனம் பண்ணினது கிர்த்திவாசன்தான்னு உனக்கு எப்படித் தெரியும்?'ன்னு கேட்டேன். அதுக்கு அவன், 'எட்டு வருஷத்துக்கு முந்தி கிர்த்திவாசனுக்கு நான்தான் கார் - ட்ரைவர். உங்க மனைவி டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோருக்குப் போய் ஏதோ சாமான் வாங்கிட்டு வரும்போதுதான் கடத்தப்பட்டாங்க. கிர்த்திவாசனுக்கு நெற்குப்பைக்குப் பக்கத்துல தென்னந்தோப்போடு கூடிய பங்களா ஒண்ணு இருக்கு. அந்தப் பங்களாவிலே வெச்சுத்தான் உங்க மனைவிக்குத் தகனம் நடத்தி அதை வீடியோ காஸெட்டாகவும் எடுத்தாரு. அவர் கொடுத்த பணத்தை வாங்கிக்கிட்டு இத்தனை வருஷகாலமாக நான் மௌனமா இருந்தது பெரிய தப்புதான். கடந்த ஆறு மாசகாலமா நான் அவர்கிட்டே வேலையில் இல்லை. அதுவே என்னோட மனசுக்குக் கொஞ்சம் நிம்மதியா இருந்தது. உங்ககிட்டே வந்து உண்மையைச் சொல்லிடலாமின்னு நினைக்கும்போதெல்லாம் என் மனசுக்குள்ளே ஒரு பயம். ஆனா இப்ப அந்த பயம் இல்லை. உயிர் பிரியப் போகிற இந்த நேரத்திலாவது உங்ககிட்டே உண்மையைச் சொல்லிடணுமின்னு நினைச்சேன். சொல்லிட்டேன். இந்த உண்மையை மொதல்ல போலீஸ்ல என்னோட மரண வாக்குமூலமா சொல்லலாம்னு இருந்தேன். ஆனா கிர்த்திவாசனுக்கு, போலீஸ் மேல் மட்டத்தில் இருக்கிற எல்லா உயர் அதிகாரிகளையும் தெரியும். அந்த போலீஸ் அதிகாரிகளின் உதவியோடு எந்த ஒரு உண்மையையும் அவராலே குழி தோண்டிப் புதைக்க முடியும். அதே மாதிரி, யாரையும் பணத்தாலே விலைக்கு வாங்க முடியும். அதனால்தான் டாக்டர்கிட்டே உங்களை வரவழைக்கச் சொல்லிக் கேட்டுக்கிட்டேன். நீங்களும் வந்தீங்க. உண்மையைச் சொல்லிட்டேன்...!' முருகப்பன் இப்படிச் சொல்லிக்கிட்டிருக்கும்போதே அவனோட பல்ஸ்ரேட் குறைஞ்சு அடுத்த அரை மணி நேரத்துக்குள்ளே இறந்துட்டான்..."

தயானந்த் பேச்சை நிறுத்த, வருண் சில வினாடிகள் யோசனையாய் இருந்துவிட்டுக் கேட்டான்.

''முருகப்பன் இப்படி உங்ககிட்டே சொன்னது டாக்டர் ரகுபதிக்குத் தெரியுமா...?''

"தெரியாது."

''முருகப்பன் என்ன சொன்னான்னு டாக்டர் உங்ககிட்டே கேட்டிருப்பாரே...!"

"கேட்டார்..."

"என்ன சொன்னீங்க...?''

"'முருகப்பன் சொன்னது எனக்கு எதுவுமே புரியலை! குழறி குழறிப் பேசினான். என்கிட்டே எதையோ சொல்ல வந்தான்... நாக்கும் தொண்டையும் ஒத்துழைப்பு தரலை'ன்னு சொல்லிட்டேன்.."

"டாக்டர் நம்பிட்டாரா?"

"நம்பிட்டார்."

"கிர்த்திவாசனுக்கு உங்க மேலே என்ன கோபம்... எதுக்காக உங்க மனைவியை அப்படியொரு கொடூரமான முறையில் கொலை பண்ணி அதை வீடியோ படமா எடுத்து அனுப்பி வெச்சார்ன்னு நீங்க கேட்கலையா...?"

"கேட்டேன்...! காரணம் தெரியலைன்னு முருகப்பன் சொல்லிட்டான்..."

''உங்களுக்கும் கீர்த்திவாசனுக்கும் ஏதாவது பகையா?''

''இல்லையே... எனக்கும் அவருக்கும் எந்த கான்டாக்ட்ஸ¨ம் கிடையாது. இது வரைக்கும் நாங்க ரெண்டு பேரும் சந்திச்சுப் பேசிக்கிட்டதே கிடையாது...''

''எந்தக் காரணமும் இல்லாமே கீர்த்தி வாசன் உங்க மனைவியை ஏன் கொலை செய்யணும்...?''

''அதுதான் எனக்கும் புரியாத புதிராக இருக்கு.''

''போலீஸ்கிட்டே இந்த விஷயத்தைக் கொண்டு போனா என்ன...?''

''அது முடியாது வருண்...! முருகப்பன் சொன்ன மாதிரி கீர்த்திவாசனுக்குப் போலீஸில் எல்லா உயர்மட்ட அதிகாரிகளையும் தெரியும். போதாக்குறைக்கு அரசியலிலும் நல்ல செல்வாக்கு...''

வருண் மீண்டும் சில விநாடிகளை யோசனையில் கழித்துவிட்டு தயானந்தை ஏறிட்டான்.

''ஓ.கே...ஸார்.. இந்த கீர்த்திவாசன் விவகாரத்தில் நீங்க என்கிட்டேயிருந்து என்ன உதவியை எதிர்பார்க்கிறீங்க...?''

''நீ உண்மையைக் கண்டுபிடிக்கணும்.''

''எந்த உண்மையை...?''

''கீர்த்திவாசன் என்ன காரணத்துக்காக என்னோட மனைவியை அவ்வளவு கொடுரமா கொலை பண்ணி, அதை வீடியோ படமா எடுத்து எனக்கு அனுப்பி வைச்சார்? முருகப்பன் ஒருவேளை பொய்கூட சொல்லியிருக்கலாம். அவன் அப்படிச் சொல்லியிருந்தா அதுக்கு என்ன காரணம்...? ... இதையெல்லாம் நீ கண்டுபிடிக்கணும்...''

''இதுதான் என்னோட வேலையா...?''

''எஸ்... இது ஆரம்பகட்ட வேலை. இந்த வேலைக்காக உனக்கு...'' சொன்ன தயானந்த் பர்வதாவைப் பார்க்க, அவள் சுவர் அலமாரியைத் திறந்து பெரிய ப்ரீஃப்கேஸ் ஒன்றைக் கொண்டு வந்து டீபாயின் மேல் வைத்தாள். பிரித்தாள்.

நாஸிக் கரன்ஸி, கட்டுக்கட்டாய் கண்களைப் பறித்தது. தயானந்த் தொடர்ந்தார். ''இதுலே பத்து லட்ச ரூபாய் இருக்கு. உண்மையைக் கண்டுபிடிக்கிறதுக்காக மட்டுமே இந்த பத்து லட்ச ரூபாய். என்னோட மனைவியை உயிரோடு தகனம் பண்ணினது கீர்த்திவாசன்தான்னு கன்ஃபர்ம் ஆயிட்டா, அவரைத் தீர்த்துக் கட்டற பொறுப்பையும் நீதான் எடுத்துக்கணும். அதுக்காக உனக்கு இதைவிட இரண்டு மடங்கு பெரிய ப்ரீஃப்கேஸ் கிடைக்கும்.''

வெற்று முதுகில் சவுக்கடி விழுந்த நினைவில் திடுக்கிட்டுப் போய் ஒரு நேர்க்கோடாய் நிமிர்ந்தான் வருண்.

அறைக்கதவு மெல்லத் தட்டப்படும் சத்தம் கேட்டதும் டெலிஃபோனில் பேசிக் கொண்டிருந்த யமுனா சட்டென்று குரலைத் தாழ்த்திக்கொண்டாள்.

''சரளா...! ஒரு நிமிஷம் லைனிலேயே இரு. யாரோ கதவைத் தட்றாங்க... போய்ப் பார்த்துட்டு வர்றேன்.'' சொல்லி ரிஸீவரை வைத்துவிட்டு, கதவுக்கு வந்து தாழ்ப்பாளை விலக்கினாள்.

வெளியே ஹரிதா நின்றிருந்தாள். கையில் தம்ளர்.

''என்ன அண்ணி, கதவை லாக் பண்ணிட்டீங்க?''

''அது... வந்து... காற்றுக்குக் கதவு ஆடிக்கிட்டே இருந்தது. அதான்...''




''சரி... இந்தாங்க...'' தம்ளரை நீட்டினாள் ஹரிதா.

''என்ன...?''

''உங்களுக்கு கேரட் ஜூஸ்.''

''அய்யோ... எனக்கு




வேண்டாம்.''

''வெளியே போகும்போது அம்மா எனக்குப் போட்டுட்டுப் போன உத்தரவு இது. வயிற்றுக் குமட்டலுக்கு நல்லதாம். எங்கே, கண்ணை மூடி குடிச்சுட்டு தம்ளரைக் கொடுங்க பார்க்கலாம்...''

''ஹரிதா... வேண்டாம் ப்ளீஸ்...''

''ஸாரி மை டியர் அண்ணி! நீங்க இந்த கேரட் ஜூஸைக் குடிக்கலைன்னா அம்மா கிட்டே திட்டு வாங்கப் போறவ நான் தான். ம்... குடிங்க...''

'இவன் விட மாட்டான்!'

யமுனா தம்ளரை வாங்கி உதட்டுக்குக் கொடுத்தாள். தேங்காய்ப் பாலோடு அளவாய்க் கலக்கப்பட்ட காரட் ஜூஸ், ஏலக்காய் வாசனையோடு தொண்டைக்குள் ஜில்லென்று இறங்கி, வயிற்றை எவரெஸ்ட் பிரதேசமாக்கியது.

காலி தம்ளரை நீட்டினாள்.

''ஜூஸ் எப்படியிருந்தது அண்ணி...?''

''நல்லாயிருந்தது...''

''நானே போட்டது...! வேற ஏதாவது வேணுமா அண்ணி...?''

''மத்தியானம் ஒரு மணி வரைக்கும் ஒண்ணும் வேண்டாம்... ஏதாவது வேணுமின்னா நானே கேட்கிறேன்.''

''நான் இப்போ கம்ப்யூட்டர் க்ளாஸுக்குக் கிளம்பறேண்ணி...! ஏதாவது தேவைப்பட்டா அக்காகிட்டே கேளுங்க...

யமுனாவின் இதயத்தில் சின்னதாய் ஒரு மகிழ்ச்சி அலை அடித்தது. ஹரிதாவுக்கு, வாரத்தில் மூன்றுநாள் கம்ப்யூட்டர் க்ளாஸ். காலையில் பத்து மணிக்கு போனால் மதியம் இரண்டு மணிக்குத்தான் வருவான்.

ஹரிதா இப்போது கம்ப்யூட்டர் க்ளாஸுக்குக் கிளம்பிப் போய்விட்டால், வீட்டில் சௌம்யா மட்டும்தான் இருப்பாள்.

'சௌம்யாவிடம் ஏதாவது காரணம் சொல்லிவிட்டு, வெளியே போய், கோயிலில் காத்திருக்கும் இன்ஸ்பெக்டர் பால்பாண்டியனைப் பார்த்துவிட்டு வர முடியுமா...?'

யமுனா யோசனையோடு கவிழ்ந்து கிடந்த ரிஸீவரை எடுத்து, காதுக்குக் கொடுத்தாள்... மெல்லக் கூப்பிட்டாள்.

''சரளா...''

மறுமுனையில் காத்திருந்த சரளா 'ம்' என்றாள்.

''முடிவா... நீ என்ன சொல்றே...?''

''நான் இப்ப இருக்கிற நிலைமையில் என்னாலே வர முடியாது யமுனா. நீ எப்படியாவது கோயிலுக்குப் போய் அந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்துப் பேச முயற்சி பண்ணு. தப்பா நினைச்சுக்காதேடி...!''

''சரி... நான் பார்த்துக்கறேன்.''

''நீ எப்படி வெளியே போவே?''

''சின்னதா ஒரு ஹோல்டு கிடைச்சிருக்கு. ட்ரை பண்றேன்...''

யமுனா ரிஸீவரை வைத்துவிட்டு அறைக் கதவருகே வந்து மெல்ல ஹாலை எட்டிப் பார்த்தாள். சௌம்யா சோஃபாவில் உட்கார்ந்துகொண்டு டீ.வி சானல்களை மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருக்க, போர்டிகோவில், ஹரிதா, கம்ப்யூட்டர் க்ளாஸுக்குக் கிளம்பிப் போக, கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டரை உசுப்பிக் கொண்டிருந்தான். ஸ்கூட்டர் புறப்பட்டுப் போகும் வரை காத்திருந்த யமுனா, பின் மெல்ல ஹாலுக்குள் நுழைந்தாள்.

சௌம்யா அவளைப் பார்த்துவிட்டு பதற்றமாய் எழுந்தாள்... ''என்ன வேணும் அண்ணி...?''

''ஒ... ஒண்ணும் வேண்டாம்.''

''உடம்புக்கு ஏதாவது பண்ணுதா... டாக்டரை மறுபடியும் கூப்பிடட்டுமா...?''

''அ... அதெல்லாம் வேண்டாம்.''

''ஏதோ சொல்ல வர்றீங்க... நல்லாவே தெரியுது. எதுவாயிருந்தாலும் பரவாயில்லை... சொல்லுங்கண்ணி...''

''சௌம்யா! நீ எனக்கு ஒரு உதவி பண்ணுவியா...?''

''காத்திருக்கேன், சொல்லுங்க அண்ணி.''

''ஒரு அரை மணி நேரம் நான் வெளியே போய்ட்டு வரணும். இது உன்னைத் தவிர வீட்டிலே வேற யாருக்கும் தெரியக் கூடாது.''

(தொடரும்)

# எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களை

# அன்பினால் தேற்றுவோம் !

# தனிமையைப் போக்குவோம் !!

எய்ட்ஸ் பற்றிய உண்மைகளை அறிய ஆவலா ? 24 மணிநேர

தொலைபேசி சேவை எண் : **8256882/1097** (இலவசம்)

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**

417, பாந்தியன் ரோடு, எழும்பூர்,

சென்னை – 600 008. போன் : 8255467



AIDS/1824/2001

எச்.ஐ.வி./எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களிடம் அன்பு காட்டுவோம்... அரவணைப்போம் !

நீங்கள் கேட்டவை - தராசு

# யார் காட்டில் மழை?

● கு. கணேசன், பனங்கோட்டூர்.

*? 'ஒரு நாளைக்கு ஒரு கால பூஜைகூட நடத்த முடியாத ஏழைக் கடவுளர்கள் உள்ள எட்டாயிரத்து இருநூற்றுப்பத்து கோயில்களுக்குத் தினமும் ஒரு கால பூஜை நடத்த வகை செய்துள்ளேன்' என்று கடவுளுக்கே பிச்சை போடுவது போல் பூஜாரிகள் மாநாட்டில் முதல்வர் பேசியது சரியா?*

! கடவுளுக்குப் பிச்சை போட்டதாக ஏன் நினைக்கிறீர்கள்...? லட்சக் கணக்கான பக்தர்களின் இச்சையைப் பூர்த்தி செய்தார் என்று சொல்வதில் என்ன தப்பு?



எதிர்பார்க்க முடியாதது!

● சாத்தூர் சபாபதி, திருச்சி - 18.

*? 'முந்தைய என் ஆட்சியின் அத்தனை தவறுகளுக்கும் நானே பொறுப்பு; இனி வரும் என் ஆட்சியில் நிச்சயமாகத் தவறுகள் நடக்காது!' என்ற உத்தரவாதமான பேச்சு ஜெயிடம் இல்லையே...?*

! எல்லாமே பொய் வழக்குகள் என்று பசப்புபவரிடம் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்!



● நகை. தி. மகராசன், கடமலைக்குண்டு.

*? 'வந்தவர்கள் வர்த்தகர்கள் என்று நினைத்து அவர்கள் கொடுத்த ஒரு லட்ச ரூபாயைக் கட்சிக்காகப் பெற்றுக் கொண்டேன்' என்கிறாரே பங்காரு லட்சுமண்!*

! நெல்லிக்காயைச் சோற்றுக்குள் மறைக்கலாம்; பூசணிக்காயை மறைக்க முடியுமா? நுணலும் தன் வாயால் கெடும் என்று கேள்விப்பட்டதில்லையா? அப்படிக்கெட்ட பிறகு குயில் போல குரலெடுத்துப் பாட நினைத்தால் முடியுமா...?

● வஸந்தா பார்த்தசாரதி, சென்னை - 88.

*? இப்போது யார் காட்டில் மழை...?*

! மக்கள் தமிழ் தேசக் கட்சி கண்ணப்பன் காட்டில்தான் அநியாய மழை! 'ஊழல் ஆட்களுக்கு இடமில்லை' என்று சொன்ன கலைஞர் தடாலடியாக மாறி, ஆறு சீட்டு கொடுத்து, பழிப்புக்கு உள்ளாகியிருக்கிறாரே...!



அடை மழை

● இரா. பொன்னப்பன், வயலூர்.

*? சமீபத்தில் படித்த புத்தகம்...?*

! நீங்களும் வாரந்தவறாமல் இப்படியொரு கேள்வி கேட்டு விடுகிறீர்கள். உங்கள் கேள்விக்குப் பயந்தே ஏதாவது புத்தகம் படிக்க வேண்டியிருக்கிறது. ஸ்டீவன்.ஆர் கவி எழுதிய 'First things First' என்ற புத்தகம் கிடைத்தது. டைம் மேனேஜ்மெண்ட் புத்தகமோ என்று அசுவாரஸ்யமாகப் புரட்டினேன். Love, Learn, Live and Leave a Legacy என்ற தலைப்பு வரியுடன் ஆரம்பித்த புத்தகம், பிறகு நல்ல வேகம். 'இந்தக் காரியம் முக்கியம், முதலில் செய் என்று மனசாட்சி சொல்கிறது. ஆனால் இதயமோ நாம் விரும்பும் காரியத்தைச் செய்யத் தூண்டுகிறது. பெரும்பான்மையோர் இதயம் சொல்வதைக் கேட்பதால்தான் ஜெயிக்க முடிவதில்லை' என்கிறார் ஆசிரியர். நிஜந்தானே!



மகிழ முடியாது!


● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

*? பா.ஜ.கவின் பொறுப்புத் தலைவராக ஜனா. கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளது பற்றி...?*

! அத்தலைமை அவருக்குத் தரப்படவில்லையே என்று வருத்தப்பட்டவர்களெல்லாம்கூட மகிழ முடியாத சூழ்நிலை இன்று!

❑ ரூ.50 பரிசு பெறுபவர் :
எம். வெங்கடேசுவரன்,
9, சத்தியமூர்த்தி தெரு,
திருநெல்வேலி டவுன், 627006

★ ரூ. 25 பரிசு பெறுபவர் :
கே. பொன்னிலா சேகர்,
12, கைலாலி சாலை,
பெங்களூர் – 560 053



● எம். இராஜேந்திரன், லால்குடி.

*? மு.க. ஸ்டாலினுக்குள்ள சொத்து அவரது மனைவியும் மகனும் சம்பாதித்ததாமே...?*

! " DVAC (ஊழல் நடக்காமல் கண்காணிக்கும் துறை) சமர்ப்பித்துள்ள ஏராள மான ஆவணங்களைப் பரிசீலிக்கும்போது, இந்த வழக்கைத் தாக்கல் செய்தவரின் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்பது நிருபண மாகிறது" என சென்னை சிவில் கோர்ட் பிரதம நீதிபதி கூறியிருக்கிறார். இத்துடன் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைப்பது, ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுவது உத்தமம்.




● ஏ.குமாரவேலு, பாளையங்கோட்டை.

*? கல்கியின் தராசு பழசாகிவிட்டது. பழுது பார்க்காவிட்டால் தப்பும் தவறுமாகத்தான் எடை போடும் என்று துக்ளக்கில் கூறியிருக் கிறாரே...?*

! விஷமம் பண்ணுகிறவர்களின் விரல்கள் தராசைத் தூக்கிப் பிடித்தால் தப்பு எடைதானே காட்டும்!

● கருப்பம்புலம் சித்திரவேலு, நெய்விளக்கு.

*? தி.மு.க என்பது புளியமரம் மாதிரி. அதன் நிழலில் எந்த கட்சியும் வளர முடியாது அழிந்து போகும் என்கிறாரே டாக்டர் ராமதாஸ்?*

! லஞ்ச வேர் ஓடி, ஊழல் விழுது விட்டுப் படர்ந்துள்ள ஆலமர நிழலில் எப்படி வளரப் போகிறார்...?

● க. பொன்னிலா சேகர், பெங்களூர் – 53 ★

*? அறுபது நாட்களுக்கு மட்டும் ஓர் இயக்கம் வேண்டும் என்று த.மா.கா ஜனநாயக பேரவை ஆரம்பித்திருக்கும் ப. சிதம்பரத்தின் நோக்கம் என்ன...?*

! வெளியேற வேண்டாம்; வெளியேற்றப்பட வேண்டும் என்ற நோக்கம்தான்.



● எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

*? மதுரையில் தொடங்கிய எதுவும் வீண் போவதில்லை என்கிறாரே முதல்வர்...?*

! அழகிரி பேரவையையும் சேர்த்துத்தான் சொல்கிறாரா!

● டி. யோகவதனம், சென்னை – 54.

*? ராமாயண லட்சுமண், வி.வி.எஸ். லட்சுமண், பங்காரு லட்சுமண் – ஒப்பிடுக.*

! முதலாமவர் வணக்கத்துக்குரியவர்; இரண்டாமவர் வாழ்த்துக்குரியவர்; மூன்றாவது லட்சுமண்... வருத்தத்துக்குரியவர்!

● எம். வெங்கடேஸ்வரன், திருநெல்வேலி ❑

*? கலாட்டா செய்து நாடாளுமன்றம் செயல்படவிடாமல் ஒத்தி வைக்கப்பட காரணமாயிருக்கும் எதிர்க்கட்சிகள், இந்த நிலையால் ஆளுங் கட்சிக்குத்தான் சாதகம் என்கிற உண்மையை ஏன் உணரவில்லை?*

! (அ) எதிர்ப்புக்காகவே எதிர்ப்பு என்கிற குறுகிய வட்டத்தில் அவை செயல்படுவதால்; (ஆ) அவையில் விவாதம் என்று வந்தால் தங்கள் தரப்பிலுள்ள தவறுகளும் குற்றங்களும் அடிக்கோடிடப்படும் என்பதால்.

● உமாசங்கர், சென்னை – 44.

*? எழுத்தாளர்கள் எல்லாரும் தொலைக்காட்சி பக்கம் போய்விட்டால் அப்புறம் பத்திரிகைகளின் கதி...?*

! புதிய எழுத்தாளர்கள் வருவார்கள்; அவர்களைப் பதியனிட்டு, வளர்த்து, தழைக்கச் செய்ததும் நன்றாக மொட்டுவிடும் சமயத்தில் டி.வி, சினிமா பக்கம் போய் பூத்துக் குலுங்குவார்கள். ஏணி, தோணி, வாத்தியார்களோடு பத்திரிகைகளையும் சேர்த்துக்குங்க!

**அனுராதா ரமணன்**

“**யா**ர் நீங்க...?”


வீட்டு ஹாலில் சம்பிரமாய் அமர்ந்திருந்த பெரியவரையும் இளம் பெண்ணையும் பார்த்து, புருவத்தை உயர்த்துகிறார் கேசவ்.

அவர்கள் பதிலளிக்கும் முன், பாய்ந்து வந்து அப்பாவின் கேள்விக்கு விடையளிக்கிறாள் சுஜா.

"அப்பா... அவ பேரு ப்ரீத்தி– என்னோட காலேஜ்லே ஒண்ணா படிச்சா. அப்புறம் அவ அப்பா மெட்ராஸுக்கு மாத்தலாகிப் போனதுனால ஒருத்தரையொருத்தர் பார்த்துக்க முடியலே. ஆனாலும், அப்பப்போ மெயில் பண்ணிப்போம். இங்கே அவளுக்குப் பெரிய ஃபாரின் கம்பெனியிலே இன்டர்வியூ இருக்கு. வேலை கிடைச்சா, இந்தியாவிலேதான். எதுக்கும் முயற்சி பண்ணிப் பார்க்கலாமேன்னு சொன்னேன். அதான் வந்திருக்கா. இவர், அவளோட அப்பா– மிஸ்டர்...”

அவள் சற்றே திணற, ப்ரீத்தியின் தந்தை, சோபாவில் இருந்து துள்ளிக்குதித்து எழுந்து, கபடி விளையாடும் சிறுவன் எதிராளியை இருக்கிப்பிடி போடுவது போல கப்பென கேசவ்வை அமுக்கினார்.

"என் பெயர் கேதாரி. நானும் இங்கேதான் பெங்களூரில் ரொம்ப காலமா இருந்தேன். என் வொய்ஃப் கூட இங்கேதான் காலமானாள். அப்புறம்



# 23

# இனிமேல் ஆரம்பம்

தான் நாங்க ஒரேயடியா மெட்ராசுக்குப் போயிட்டோம்.''

கேசவ், விருப்பமில்லாத நபர் தூக்கி வைத்துக் கொண்டால் சில குழந்தைகள் திமிறிக் கொண்டு இறங்கி ஓடுமே... அது போல, கேதாரியின் கைகளை மிகுந்த பிரயாசையுடன் விலக்கி, அவரை ஏற இறங்க விரைப்பாகப் பார்த்தார்.

ப்ரீத்தி...

இப்படியொரு பெயரை பெங்களூருக்கு வந்தது முதல் அவன் உச்சரித்து, அவர் கேள்விப்பட்டதே இல்லை. அவ்வளவு ஏன்... பெங்களூருக்கு வந்தது முதல் சுஜாவுக்கென்று–'டியர் & நியர்' ஆக எவனும் கிடையாது.

'இவ யாரு இவ... மெகா சீரியல்லே 118ஆவது எபிசோடிலே புதுசா அறிமுகமாகிற இரண்டாவது கதாநாயகி மாதிரி... வந்து நிக்கறா.'

எண்ணங்கள் இந்த ரீதியில் அலை பாய்ந்தாலும், கடந்த ஒரு வாரமாக, வீட்டில் நிலவிய பயங்கரமான மௌனம் கலைந்ததில் ஓரளவுக்கு மனச்சாந்தி ஏற்பட்டது அவருக்கு.

'அஜய்யைத் திருமணம் செய்து வைக்கப் பிடிக்கவில்லை என்றால், ஒழிகிறது. ஆனால் அதற்காக, பச்சோந்தி அவிநாசி தவமிருந்து பெற்று வைத்திருக்கும் குடிகார மகனுக்குக் கழுத்தை நீட்ட மாட்டேன்!' என்று ஒரு போடு போட்டுவிட்டு நகர்ந்தவள்தான் சுஜா. அதற்குப்பின்– அம்மாவோ, பெண்ணோ– இவரிடம் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இவரும் ஒரேயடியாக, வளர்ந்த மகளை மிரட்டவும் முடியாமல் எப்படியோ தொலைகிறது என்று விடவும் முடியாமல் தவியாய்த் தவித்துக் கொண்டிருக்கிறார்.

இதற்கிடையில் அவிநாசிலிங்கம் வேறு, நிச்சயதார்த்தத்தை 'வின்சர் மேனர்' என்கிற ஐந்து நட்சத்திர ஹோட்டலில் நடத்த தேதி முதற்கொண்டு குறித்து விட்டார். நிச்சயதார்த்தத்தின்போது, மாலை 6.01 மணிக்குப் பெண் வீட்டார் வந்து இறங்க வேண்டும் என்றும், 6.11க்கு மேடையில் கிழக்கு முகமாக அவள் நிற்க வேண்டும் என்றும், 6.23க்கு தாம்பூலத் தட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என்றும், 7.32க்கு பார்ட்டி துவங்க வேண்டும் என்றும், 7.33க்கு 'ராயல் சல்யூட்' பாட்டிலை மந்திரம் சொல்லி, திறந்து, முதல் கோப்பையில் ஊற்ற வேண்டும் என்றும், ஜோஸ்யர் அனுமந்துவை வைத்துக் கொண்டு மிகப்பெரிய அட்டவணையே போட்டு விட்டார்.

இங்கேயானால்–






அம்மாவும் பெண்ணும் சண்டை சேவல்கள் மாதிரி சிலுப்பிக் கொண்டு நிற்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் வீட்டில் கலகலப்பை உண்டுபண்ண இவர்கள் வந்திருப்பது கொஞ்சம் ஆறுதலாகவே இருக்கிறது கேசவ்வுக்கு.

ஆனாலும், அந்தஸ்து தராதரம் பார்க்காமல் யாருடனும் சின்னதாய்ப் பேச்சு வார்த்தைகூட வைத்துக் கொள்ள விரும்பாத கேசவ், கொஞ்சம் மிடுக்காகவே நடந்து கொள்கிறார்.

"சுஜாவுக்கு இன்டர்வியூ நடக்கிற இடம் தெரியாதுப்பா. நான் அவளை அழைச்சுட்டுப்போய் விட்டுட்டு அப்படியே ஆபீசுக்குப் போறேன்."

சுஜா இப்படிச் சொன்னதும், 'உம்...உம்' என்று தலையை ஆட்டுகிறார் கேசவ்.

இப்போதைக்கு மகளுடன் சுமுகமாக இருக்க வேண்டிய அவசியம். கூடவே மகள் இன்டர்வியூவுக்குப் போய் விட்டால், இவர், வீட்டில் இருந்து என்ன செய்யப் போகிறார் என்கிற சின்னக் கவலையும் ஊசாமுள் உறுத்தலாய் உள்ளுக்குள்.

ஆனால் கேதாரியோ-காப்பி குடித்த காலி டவராக்களைச் சுவாதீனமாய் எடுத்துப் போய் கழுவி வைக்கிறார். கல்பகத்திடம் 'இது என்ன வாஷிங் சோப்.... இதைவிட விம்பார் யூஸ் பண்ணுங்கோ' என்று யோசனை சொல்கிறார்.

கேசவ்வைப் பார்த்து, "சார் எத்தனை மணிக்கு ஆபீஸுக்குக் கிளம்பணும்? ஏதுடா புதுசா வீட்டுக்கு வந்திருக்கற அதிதியை சாப்பிடச் சொல்லாமல் நாம சாப்பிட வேண்டியிருக்கேன்னு ஃபார்மாலிட்டி எல்லாம் பார்க்காதீங்கோ. அவங்கவங்க வேலை அவங்கவங்களுக்கு. என் பொண்டாட்டி போனவுடனே, ஒரே பெண்ணான ப்ரீத்தியை கவனமாகப் பார்த்து வளர்க்கறதுக்காக நான் அப்பவே வி.ஆர்.எஸ். வாங்கிட்டேன். இப்பன்னா எல்லாருக்கும் லட்சம் லட்சமா பணத்தைக் கொட்டி, போயிட்டு வாங்கடாசாமின்னு காலில் விழுந்து கெஞ்சாத குறையா கெஞ்சறாங்க... அன்னிக்கு நான் எதையும் எதிர்பார்க்கலே. என் பொண்ணு தான் முக்கியமா இருந்தது எனக்கு. இப்போகூட பாருங்கோ... அவளுக்காகத்தான் ஓடிவந்திருக்கேன். இந்த வயசுல பெண்களைக் கண்ணும் கருத்துமா பார்த்துக்கணும்'- இப்படி கேசவ்விடம் ஆரம்பித்து, கல்பகத்திடம் முடித்தார்.

அவள் கேட்காமலேயே 'அந்த வாழைக்காயை இப்படி நகர்த்துங்கோ.. தோல் சீவித்தர்றேன். வேகவெச்ச கறியா... காரம் போட்ட கறியா... சொன்னா அதுக்கேத்த மாதிரி நறுக்கிடறேன்' என்கிறார்.

தோட்டத்து ரோஜா செடிகளுக்கு, வெங்காயத்தோலுடன் ஒரு ஆஸ்ப்பிரின் மாத்திரை தண்ணீரில் கரைத்து ஊற்றினால், கும்மெனப் பூக்கும் என்கிறார். எக்ஸ்பயரிடேட் முடிந்த இருமல் மருந்துகளை, கருவேப்பிலை செடிக்கு ஊற்றலாம் என்கிறார். வீட்டில் அப்போதுதான் குட்டி போட்டிருந்த நாயைப் பார்த்து 'பாவம் ரொம்பவும் பூஞ்சையாக இருக்கிறது, தினமும் முட்டையுடன் பாலைக் கலந்து வையுங்கள்!' என்று சொல்லி, பசி எடுக்க ஒரு டானிக்கைச் சிபாரிசு செய்கிறார்...

வீடு எல்லாமே நன்றாக அமைந்திருந்தாலும், வாசல் பக்கம் மேற்கு நோக்கி வைத்திருப்பது சரியில்லை என்றும், வாஸ்துப்படி, கிழக்கு நோக்கி வாசல் இருந்து, உள்ளே போய் வடக்கு நோக்கித் திரும்பி, அப்புறம் மேற்கு நோக்கி கூடத்துக்குள் நுழைந்தால் ஐசுவரியம் கொட்டும் என்றும் கூறி, மெதுவாக அங்கே இங்கே பேச்சைச் சுற்றி, கேசவ்விடம் 'பொத்'தென கேட்கிறார்...

"சாருக்கு என்ன நட்சத்திரம்? திருவோணமா? அவிட்டமா?"

கேசவ், கிட்டத்தட்ட கேதாரியின் நண்டுப் பிடியில் அகப்பட்டுக் கொண்டார்.

"அதெப்படி... கரெக்டா இந்த ரெண்டு நட்சத்திரத்தைச் சொல்லிக் கேட்கறீங்க?"

"சும்மா ஒரு உத்தேசம்தான். சொல்லுங்கோ, திருவோணமா, அவிட்டமா? ஏன்னா... உங்கு முகத்துல இருக்கற தேஜஸ் சொல்றது... அந்த முகவாய் மடிப்பு இருக்கு

பாருங்கோ... அது திருவோணத்துக்கோ அல்லது அவிட்டத்துக்கோதான் அப்படி மடியும். எனக்குத் தெரிஞ்சு, பி.எஸ். வீரப்பாவுக்கு அப்புறம் உங்ககிட்டே தான் அந்த முகவாய்க் குழிவைப் பார்க்கிறேன்."

கேசவ் செல்லமாக தனது முகவாயைத் தடவியபடி அடக்கமாய்ச் சிரித்தார்.

''ஹி...ஹி...ஹி... என் நட்சத்திரம் திருவோணம். நாலாம் பாதம்.''

"அப்படித்தான் நானும் நெனைச்சேன். சுஜா என்ன நட்சத்திரம்?"

"மிருகசீருஷம்."

இம்முறை கேள்வி கேட்டவுடனேயே பதில் 'டக்'கென வந்து விழுந்தது.

"ஆஹா... ரொம்ப நல்ல நட்சத்திரம். இந்த நட்சத்திரத்துக்கு பொருத்தமே பார்க்க வேண்டாம். ஆனா ஒண்ணு... வாய்தான் கொஞ்சம் உண்டு இல்லேன்னு பண்ணும். பேசி ஜெயிக்கவே முடியாது."

"நன்னா சொன்னீங்க."

கேசவ் இப்பொழுது கேதாரியின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து விட்டார்.

''சுஜாவுக்கு இப்போ குருபலன் வந்தாச்சே... வரன் ஏதாவது பார்த்திருக்கேளா...?''

கேதாரி இப்படி கேட்டதுதான் தாமதம். கல்பகம் ஒரு எகிறு எகிறினாள்...

''அவிநாசிலிங்கம்னு கேள்விப்பட்டிருக்கீங்களா...? ஆளும் கட்சி எதுவோ அதிலேயே ஒட்டிட்டு அலைவாரு. அவர் பையனுக்காக சுஜாவைக் கேட்டிருக்கார். அந்த ஆளுக்கு இங்கே அனுமந்தராவ்னு ஒரு ஜோசியர் இருக்கார். அவர் வெச்சது தான் சட்டம். மனுஷன் பாதி நேரம் அங்கேயே பழியாகக்கிடப்பார். மீதி நேரம் எவன் தலையை உருட்டலாம்னு திட்டம் தீட்டிட்டிருப்பார்...''

கேசவ், கல்பகத்தைப் பார்த்து முறைக்கிறார்.

''கல்பம், சித்த நீ சும்மா இருக்க மாட்டே...?''

கேதாரியோ சந்தோஷத்தை வெளிக்காட்டிக் கொள்ள முடியாமல், மனசுக்குள் ரகசியமாய்க் குட்டிக்கர்ணம் அடிக்கிறார்.

'அட... நம்ம அனுமந்து... இத்தனை பெரிய ஆளாயிட்டியாடா நீ... உனக்கு ஜோசியம் பார்க்கச் சொல்லிக் கொடுத்ததே நான்தானேடா!'

மனசுக்குள் நினைத்துக் கொள்கிறாரே தவிர வாய் திறந்து சொல்லவில்லை.

(தொடரும்)

“மகமாயி... மகமாயி...”

இருமுறை கூப்பிட்டார் மலையாண்டிக் கவுண்டர்.

சுவிற்றுக்கட்டில், சப்பணங் கட்டிய மடி மீது பித்தளைத் தாம்பாளம். தளர்ந்து அதிரும் விரல்கள் தாம்பாளத் தட்டில் குத்திக் குத்தி வேர்க்கடலை உரித்துக்கொண்டிருந்தன, விதைப்பாட்டுக்காக.

விரல்கள் பாட்டுக்கு இயங்கின. கண் பார்வை தென் கிழக்கே யுகாந்திர மௌனம் காக்கும் மகமாயிக் குன்று... எதிரே ஸ்டூலில் வாக்குச் சேகரிக்க வந்திருக்கும் செல்ல முத்துப்பிள்ளை... கட்டிலுக்கு நேர் கிழே லைட் ஒளியில் இடமும் வலமு மாக வரிசையாக வேர்க்கடலை உரிக்கும் பெண்கள் என்று தாவித் தாவி சஞ்சரித்து மீண்டும் செல்லமுத்துப் பிள்ளையின் நைச்சிய முக பாவத்தில் லயித்தது.

"கூப்டீங்களா தாத்தா?" என்று கோடியில் உட்கார்ந்திருந்த எட்டு வயசுப் பெண் எழுந்து நின்றாள்.

"அடியே குட்டீ... உன் குசும்பை செல்ல முத்துப் பிள்ளை தெரிஞ்சுக்கணுமாக்கும்!" கவுண்டர் சீவினார்.

"ம்க்கும் எனக்கொண்ணும் குசும்பு இல்லே... எம் பேரு மகமாயி" பெண் திருப்பி அடித்தாள்.

"செல்லமுத்து, அவளை நோட் பண்ணி வையும், ஜெகஜாலக் கில்லாடி. நீரும் வவ்வாத் தோப்பு வாக்குச்சாவடிக்கு வாலாயமா வோட்டுக் கேக்க வருவீரு. பத்து வருசத்துலே அவளுக்கு வோட்டு வந்துரும். எதுக்கும் இப்பவே ஒரு வணக்கம் போட்டு வையும்" என்று இடக்குப் பண்ணினார் கவுண்டர்.

"ஒக்கார்றீ" என்று பக்கத்தில் இருந்தவள் மகமாயி பாவாடையைத் தொட்டு இழுத்தாள்.

'மகமாயியை நம்புகிற இந்த மண்ணாங் கட்டிக் கவுண்டன் மாதிரி இடுப்பு வேட்டியைக் கிழப் பாய்ச்சிக் கட்டி பிழைக்கத் தெரியாமல் எண்பத்தேழு வயசில் அரை வெள்ளாமையோ கால் வெள்ளாமையோகூட வரப் போகாத களக்காக் கொட்டை உரித்துக்கொண்டு வக்கணம் பேசிக்கொண்டு கிடப்பார்கள். இதுக்கெல்லாம் அலட்டிக்கலாமா?'

செல்லமுத்து இப்படி எல்லாம் சிந்திக்கவில்லை. அந்த மனோபாவம் முகத்தில் கல்வெட்டாகப் பதிவாகி இருந்தது.

"மகமாயி... மகமாயி..."

கவுண்டர் மறுபடியும் இருமுறை குன்றைப் பார்த்துக் கூப்பிட்டார். அங்கே ஒரு மகமாயி கோயில் உண்டு.

"மகனே... என்னடா ஒன்னோட கத்த ரோதனை!" என்று எழுந்து வந்து வாயை மூடச் சொன்னால்கூட கவுண்டரின் கூப்பிடும் வாய் ஓயாது. பழக்கமா... பக்தியா...



பிலாக்கணமா.. புகாரா முறையீடா... மகமாயி மகமாயி.

"இந்த வர்சம் மழை ரொம்பப் பிந்தும் போல இருக்கே கவுண்டரே."


"மழைதானே?"

செல்லமுத்துவுக்குக் கவுண்டரின் கேள்வி வந்த தோரணை இடக்காக இருப்பதாகப்பட்டது.

நெளிந்தார்.

"ஒனக்கு எதுக்குக் கவலை! தேர்தல் வந்திருக்கு இல்லே... உங் காட்ல மழை வேற வேணுமா."

எத்தனையோ வம்பர் கம்பர்களை ஏப்பம் விட்டவர் செல்லமுத்து. எதை எப்படிச் சமாளிப்பது என்றும் தெரியும்.



"அஹ்ஹஹஹஹஹே" என்று இளித்தார்.

"அதுவும் மழை எல்லாம் பேஞ்சா... கல் குவாரி நடத்தறியே அதுக்கு பேஜார்தானப்பா."

ஒரு அஹ்ஹஹஹஹேவோடு "அட போங்க மாமா... நீங்க என்னை அகடவிகடம் பண்ணாமே விட மாட்டீங்க!" என நீட்ட வேண்டியதாய் வந்தது.

மலையாண்டிக் கவுண்டரின் பார்வை பருத்துப் பாய்ச்சலில் வலது வரிசையில் ஒருத்தி உரித்த வேர்க்கடலையை மாராப்புச் சேலையில் அள்ளுவதைக் கவனித்தது.

"மணியக்காரன் பேத்தி வேலாயி... மாராப்பிலே வெதைப்பாட்டை... அள்ளி மறச்சா மக மாயி கூலி வாங்கிடுவா..." என்று முகத்தில் சலனமின்றி சொன்னார்.

மாராப்புச் சேலையில் ஒளிந்த கடலையை வேலாயி வெளியே உதறினாள்.

"பேசிக்கிட்டே இருக்கோம்... பாத்துக் கிட்டே இருக்கோம்... திருடிட்டே இருக்காங்க. நாம சிரிச்சக்கிட்டே இருக்கணும். என்ன செல்லமுத்து?"

இன்னும் இந்தக் கிழவரிடம் எவ்வளவு நேரம் செலவிட்டு இவர் செல்வாக்கில் உள்ள 37 வாக்குகளுக்கு ஓர் உத்தரவாதம் வாங்குவது

**வையவன்**

என்ற கணக்கிட்டில் ஈடுபட்டிருந்த செல்லமுத்து நினைப்பை உதறிவிட்டு ஒத்து ஊதினார்.

"ஆமாங்க... மாமா... வேலக்காரங்க கிட்டே வேல வாங்கறது வர வர பரம பேஜாராப் போச்சு!" என்றார்.

"ஒனக்கு என்னைவிட அனுபவம் இருக்கும்!" கிழவர் ஒரு கிளையை விட்டு மறுகிளை தாவ போகிறார் என்று ஊகித்தார்.

"நீ கூலியாளுங்களக் கூட்டமாச் சேத்து கங்காணியாட்டம் நாலு திக்குலயும் அனுப்பறே." கவுண்டர் பேச்சுக்கிளையில் வேறு விழுது பிடித்து டார்ஜான் மாதிரி தாவினார்.

"சரியாப் போச்சு... அந்தக் கன்றாவி புடிச்ச வெவகாரத்த ஏன் இளுக்கறீங்க?" செல்லமுத்து அங்கலாய்த்தார்.

"ஏதோ குஜராத்துக்குக் கூட கல் ஒடைக்க ஒரு கூட்டம்... நம்ம செட்ல வீரமுத்து பார்ட்டி கூட்டம்... போச்சு இல்லே." கவுண்டர் கிளறினார்.

'இது தேவையில்லை. ஆனால் கிழம் நோண்டி நோண்டி மிளகாய் அரைக்கிறது. வயசு மூத்தாலே அரச்சு அரச்சு காரம் ஏத்துக்கிற புத்தி வந்துரும் போலிருக்கு' என்று மனசுள் ஒரு வேரோட்டம் செல்லமுத்துவுக்கு.

"ஆமாம் மாமா... போயிருந்தாங்க... பாவம் பூகம்பம் வர்ற டயத்திலே அங்க மாட்டிட்டாங்க" என்று ஒரு பெருமூச்சுக்கு நெடுவீர்ப்பு கொடுத்து விதியின் விளையாட்டுக்கு ஒரு வேதனைத் தொனி காட்டினார்.

"வோட்டர் லிஸ்டிலே அஞ்சு பேர் பேரு எடுபடணும் இல்லே செல்லமுத்து?"

"ஆமாங்க மாமா.. எதிர்க்கட்சிக்காரனுங்க உசாரா இருப்பானுங்க" செல்லமுத்து சிரித்து வைத்தார். அந்தச் சிரிப்புக்கு இரண்டு உத்தேசம்.

'நீங்க நம்ம கட்சிதான். ஒங்க ஓட்டெல்லாம் எங்க ஆளுக்குத்தான். எதிர்க்கட்சிக்காரன் வந்தால் எச்சரிக்க வேண்டும்!'

அந்தச் சிரிப்பை ஒரு தராசுத் தூக்கில் எடை போடும் நோட்டத்தில் கவனித்துவிட்டுப் பித்தளை தாம்பாளத்தைப் பார்த்தார். வேர்க்கடலை உரித்துத் தீர்ந்திருந்தது.

"அடியே ஆண்டாளு... தட்டு தீர்ந்துட்டு கொட்டையைக் கொட்டிக்கிட்டு மாத்திக் கொண்டா."

இருபத்து மூன்று வயசுக்காரி எழுந்து வந்தாள்.

"செல்லமுத்துப் பிள்ளைவாள் எதிர்க்கட்சிக்காரங்கிட்டே உசாரா இருக்கச் சொல்றார். நீ என்ன பண்ணப் போறே?" என்று அவளைப் பார்த்துக் கேட்டார் கவுண்டர்.

"உசாரா இருப்பேன்" என்று பட்டென்று ஆண்டாளு சொன்னாள்.

"கேட்டியா செல்லமுத்து... எல்லாருக்கும் வெவரம் வந்தாச்சு. நீயும் வந்து கேட்டுக்கிட்டே இரு... இவங்களும் போட்டுக்கிட்டே இருப்பாங்க. தலை தலையா மாறிக்கிட்டே இருக்கும். தரித்திரமும் அந்தத் தவிட்டுப் புண்ணாக்கும் மாறாம அதோ குளுத்தித் தொட்டியாண்டயே கெடக்கும்."

கவுண்டர் சற்றுத் தள்ளி மாடுகளுக்கான குளுத்தித் தொட்டியை விரல் நீட்டிக் காட்டினார்.

செல்லமுத்துவின் முகம் சிறப நிர்ச்சலனத்தில் ஒரு புன்முறுவலோடு சில நொடிகள் சமைந்தது.

"மகமாயி... மகமாயி..."

கவுண்டர் மறுபடியும் இருமுறை சொன்னார்.

"எந்தக் கச்சி ஜெயிக்காதோ அதெல்லாம் ஒனக்கு எதிர்க்கச்சி... சாதிக்கச்சி, மதக்கச்சி சொரண்டவறன் கச்சி... சொரண்டாதவன் கச்சி எல்லாம் கலந்து பொரி விளங்கா உருண்டையா இப்ப தெரண்டாச்சு." போன தேர்தல்லே வேற சின்னம் சொன்னே... இப்ப எதிர்க்கச்சி சின்னம் சொல்றே...?"

"காலச் சூழ்நிலை மாறி இருக்கு மாமா" செல்லமுத்து ஒரு தன்னிலை விளக்கம் தந்தார்.

"காத்து மாறி அடிக்குதுங்கறே... மகமாயி கொடல் குலுங்கி எங்கியோ பூமி நடுங்கி அக்குரமம் தாளலேன்னு சிக்னல் குடுக்கறாய்யா..." செல்லமுத்துவைப் பார்த்து ஒரு தர்மோபதேச மிரட்டலோடு கவுண்டர் சொன்னார்.

'மலையாண்டிக் கவுண்டா! வல்வாத் தோப்பில் வரட்டுப் பூமியை வச்சுகிட்டு இப்படியே வறட்டு வேதாந்தம் பேசி மண்ணைக் கிளறிக் கிளறி என்னாத்தக் கண்டே? ஒன்ன எல்லாம் ஒரு மனுசன்னு மதிச்சு முப்பத்தேளு ஓட்டுக்காக எந் தலை எளுந்து வந்து நிக்க வேண்டி இருக்கு...!'

செல்லமுத்துப் பிள்ளை சிறப்பப் புன்முறுவல் முகம் மாற்றாமல் சிந்தித்தார்.

"ஆமா செல்லமுத்து... அவனவனுக்கு தண்டு தூக்கிட்டு வோட்டுத் தண்டலுக்கு வந்து

"தலைவருக்குப்
பட்டம் தர்றதிலே
விவஸ்தையே இல்லாமப்
போச்சுன்னு எதை வெச்சு
சொல்றீங்க?"

"பின்னே என்னங்க... நண்பர்
ஒருத்தர் சின்ன எழுத்துக்களைப்
படிக்கக் கஷ்டப்படறாருன்னு
சொல்லி நேத்து அவருக்கு
'வெள்ளெழுத்து வேந்தர்'னு பட்டம்
கொடுத்து கௌரவிச்சிருக்காரே!"

- நரேந்திரன்

நீ என்னத்த பெரிசாக் கண்டே! பேசாம ஒரு கச்சி ஆரம்பிச்சிரேன். சாதி சனம் இருக்குல்லே.. அதான் இப்ப போக்கடி" என்று குறும்பாகக் கேட்டார் கவுண்டர்.

"கையில் உள்ள நாலு காசையும் தொலைக்கவா? கெளவா நீ என்ன இன்னக்கத்தரம் பண்ணாலும் இங்க ஓங்காது. துட்டு அடிக்க எது களுவான வளின்னு அறிவாளிக்குத் தான் தெரியும்' என்று தமக்குள்ளும்...

"அதெல்லாம் பெரிய வெளயாட்டு மாமா.. நாம என்ன சின்னப் பூச்சிங்க" என்று கவுண்டரிடமும் சொல்லிவிட்டு ரேடியம் டயல் வைத்த தம் கடிகாரத்தைப் பார்த்தார் செல்லமுத்துப் பிள்ளை. வோட்டு வாங்கும் சதுரங்க நகர்த்தலில் காலச் செலவீட்டைக் கணக்குப் பார்க்க.

"வீரமுத்து குடும்பத்துக்கு என்னய்யா பண்ணீங்க?" கவுண்டர் கொக்கி போட்டார்.

"கச்சித் தலைமை நிவாரண நிதிக்குப் பெரிய தொகை குடுத்திருக்கு."

"கச்சிங்களும் தலைமைங்களும் நிதி குடுங்க. வீரமுத்து மாரிமுத்து... சொன்னமுத்து சொரிமுத்தெல்லாம் கல்லு ஒடச்சுக் கஞ்சி குடிக்கப்பட்டாளம் பட்டாளமா பரதேசம் போகட்டும்."

கிழவர் ஒரு பிரசங்கத்துக்கு ஆயத்தமானார் போல் தோன்றியது. இனி இருப்பது கால விரயம். இன்றைய கோட்டா எட்டு வார்டுகள். முடித்தாக வேண்டும்.

"எது நம்ம கைல இருக்கு மாமா? எல்லாம் விதிச்ச விதி. ஏதோ நம்ம இருக்கற நேரத்தில நம்மால முடிஞ்சதை நாம பண்ணிகிட்டுப் போறோம். அப்ப நான் உத்தரவு வாங்கிக்கிட்டா?" என்று ஸ்டூலில் இருந்து செல்லமுத்து எழுந்தார்.

"என்னய்யா எளுந்திட்டே... காப்பி போடச் சொல்லி இருக்கேன்!" கவுண்டர் ஆட்சேபித்தார்.

"ஒங்களோட பேசிட்டு இருந்ததே காப்பி குடிச்சிட்ட மாதிரிதான். அப்ப நம்ம சின்னத்தை மறந்துறாதீங்க."



பல்லைக் காட்டிக் கொண்டே கை கூப்பினார்.

"செல்லமுத்து... எனக்கு வர்ற தையிலே எம்பத்தேளு முடியுது. நானும் மகான்கள் காலத்திலிருந்து வோட்டுப் போட்டுக்கிட்டே வர்றேன். பூனைங்க ஆப்பத்த கொரங்கு பங்கிட்ட கதையா வரிசையா பாத்துட்டே வர்றேன். கூத்து நடக்கிற வரைக்கும் நடக்கட்டும்... ஒரு முடிவு வரும் இல்லே?"

கவுண்டர் வேதாந்தமாகச் சொல்கிறாரா, விவகாரமாகச் சொல்கிறாரா? புரியவில்லை. புரிந்தும் என்ன புண்ணாக்குத் திரண்டு விடப் போகிறது!

"சரியாச் சொன்னீங்க" என்று முகமெல்லாம் மலர வாயெல்லாம் பல்லாக ஒரு முக பாவனை காட்டிவிட்டு விடை பெற்று நடந்தார் செல்லமுத்துப் பிள்ளை.

பின்னால் சிமிட்டித் தரையில் வேர்க்கடலை குத்தி உரிபடும் ஒலியும், கவுண்டரின் வேலை வாங்கும் கபர்தாரும் கேட்டன. சாலை ஓரம் நிறுத்தியிருந்த யமாஹாவில் அமர்ந்து ஸ்டார்ட் செய்தார்.

"கூத்துக்கு ஒரு முடிவு வரும் இல்லே?"

காதில் கவுண்டரின் குரல் துரத்தி வந்து மறு ஒலிபரப்பு நடத்தியது.

'கெழம் எதைச் சொல்லுது? கச்சித் தலைமையையா... கூட்டணியையா... எலக்சனயா... நாட்டையேவா... இலேசில் பிடி குடுக்கலியே.. இன்னும் ட்ரிப் வரணுமோ... பாத்துக்கலாம்... இவனுங்களே நம்பி ஒண்ணும் நாம இல்லே... இந்த மடம் இல்லேண்ணா வேற ஒரு சந்தை மடம்'

யமாஹா வழக்கம் போலச் சீறிக்கொண்டு கிளம்பவில்லை. யோசனை கவிந்த ஒரு ஸ்லோ பிக்கப்.

'ஆயிர ஆயிரமா ஆண்டிப் பசங்கள அனுப்பறோம். வீரமுத்து போயிட்டான்... நாமா பொறுப்பு? இங்க இருந்தாலும் போக வேண்டிய டயம் வந்தா போறவன் போயே தீர்வான்..'

எதிரே வந்த மாட்டு வண்டிக்கு 'சைடு' கொடுத்து யமாஹாவை வளைத்தபோது மாடு மிரண்டு நேரெதிரேயே பாய்ந்து வந்தது. சரக்கென்று செல்லமுத்து பிரேக்கைப் பிடித்தார்.

மாட்டு வண்டிக்காரனோடு வாதப் பிரதிவாதம் தொடங்கும் முன் மனசில் ஜில்லென்று ஒரு கிலி தாக்கித் தணிந்தது.

மகமாயி... மகமாயி என்று கவுண்டர் குரல் கேட்பது போலிருந்தது. அடுத்த திருவிழாவிலே மகமாயிக்குத் தனிப்பூசை போட்டுடணும் என்று நினைத்தார் செல்லமுத்து. ○

# அச்சச்சோ, சைனா தொடர் முடிஞ்சு போச்சா?

சைனா தொடர் - அருமையாக எழுதப்பட்ட ரசமான கட்டுரைத் தொடர். பத்து வாரமும், ரசித்துப் படித்தேன். பொதுத் தேர்தல் பிரசாரத்துக்கு அங்கு தலைவர்களின் புகைப்படங்களை முக்கிய இடங்களில் மட்டும் வைத்திருப்பதைப் படித்த போது பெருமூச்சு ஏற்பட்டது!

பெங்களூர் - 40, என். ராஜா.

• சாருகேசி



சென்னை டு சைனா கட்டுரையை மிகச் சிறப்பாக முடித்துள்ளார் சாருகேசி. அதிக ஜனத்தொகை இருந்தும் சைனாவின் வெற்றிக்குக் காரணம் என்ன என்பதை நன்கு சுட்டிக் காட்டியுள்ளார். சரளமான நடை, பயணக் கட்டுரையைத் தொடர்ந்து ரசித்துப் படிக்க வைத்தது!

திருச்சி - 14, ராஜிராதா.

சைனா பற்றிய கட்டுரையைப் படித்துவிட்டு, அவசியம் சைனாவைச் சுற்றிப் பார்க்க வேண்டும் போலுள்ளது. கட்டுரையை அற்புதமாக எழுதியுள்ளார் ஆசிரியர். அவருக்கு எமது பாராட்டுதல்கள். பாங்காக் பற்றி இன்னும் தொடருவார் என ஆவலுடன் படித்துக் கொண்டிருந்தால் அத்துடன் முடித்து விட்டாரே!

சேலம், கே. சுப்புராமகிருஷ்ணா.




பார்வைக்குப் புலப்படாத ஒன்றாய் - வெளியுலகத் தொடர்புகள் அற்ற தனித்த தீவாய் - ஒதுங்கிப் போனதாய் உருவகம் செய்யப்பட்டிருந்த ஒரு தேசத்தின் அமைதிப் புரட்சியை, மனித வாழ்வின் செழுமையை, பொருளாதார வளர்ச்சியை, சாருகேசியின் சென்னை டு சைனா பயணக் கட்டுரை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. விவசாய நிலங்களைத் தனி மனிதர்க்கு அளித்தலில் தொடங்கி - கட்டமைப்புகள் - வாணிபம்- என அனைத்திலும் தனியார்களை ஊக்குவித்து, ஓசைப் படாமல், பொருளாதார வளர்ச்சியில் அமெரிக்கா அஞ்சும் வகையில், வளர்ந்திருக்கிறது சீனா. வெற்று ஆர்ப்பாட்டமிடும் எதிர்க்கட்சிகளில்லாமையாலேயே இந்த வெற்றி கிட்டியிருக்கிறது என்பது கசப்பான உண்மையே எனினும் அதுதான் நிதர்சனம்.

வெள்ளங்குளி, நெல்லை கிருஷ்ணன்.

ரங்கன் கோவில் பற்றிய கட்டுரையில், அங்கு நிலவுகின்ற தென்கலை வடகலை பேதங்கள் பற்றிப் படித்தபோது, கொஞ்ச காலம் முன்பாக, ஸ்ரீரங்கம் கோவிலில், வடகலை ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளுக்கே சடாரி சாத்த மறுத்த வேதனையான சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

சென்னை - 49, ஆர். ஸீதா

ஏ.என். சிவராமன் பற்றி, திருப்பூர் கிருஷ்



ணன் எழுதிய 'நாளிதழ் நாயகன்' படித்தேன். திருக்குறள், பகவத் கீதை, பைபிள், குரான் மீதும் அவருக்கு மிருந்த ஈடுபாடு இருந்ததைக் குறிப்பிட்டது. அவர் ஓர் அற்புதமான மனிதர் என்பதைக் காட்டியது!
சேத்துப்பட்டு. இரா. பார்த்திபன்.

✉ தாங்களும் த.மா.கா தலைவருக்கு வாரா வாரம் தலையங்கம் மூலம் அறிவுறுத்துகிறீர்கள். அது விழலுக்கு இறைத்த நீர்தான். தூங்குபவரை எழுப்பலாம். தூங்குவது போல் பாசாங்கு செய்பவரை எழுப்ப முடியுமா?
சிவகாசி, ஈ. சிதம்பரம்.

✉ ஏழைச் சிறுவர்கள் கல்வியில் சிறந்தோங்க நமது நாடெங்கிலும் விஜயபாரதிகளின் குலம் தழைத்தோங்கட்டும்!
திருச்சி - 2,
எஸ். சொர்ணமூர்த்தி.

✉ 'நான் மட்டும் இந்திய அணி இல்லை' என்று சச்சின் டெண்டுல்கர் கூறிய நேரம் மிக நல்ல நேரம் போலும். வி.வி.எஸ். லக்ஷ்மன், ராகுல் டிராவிட் இருவரும் ஒரு கலக்கு கலக்கி விட்டார்களே...
சென்னை - 78, சி. பூங்கோதை.

✉ அதிர்ஷ்ட தேவதைகளுக்குக் குரல் கொடுக்கும் முகத்தை அட்டையில் கண்டு பெருமிதம் கொண்டேன். ஜோதிகா, சிம்ரன் பேசுவது இவர் குரலில்தானா!
மதுரை - 16, ஆர். லட்சுமி.

# மோட்டரோலா VS டப்பாவாலா



**99. 999999** சதவிகித தரக்கட்டுப்பாட்டை அமுலாக்கி சர்வதேசப் புகழைப் பெற்றுவிட்டது ஒரு இந்தியத் தொழிலாளர் யூனியன். இதுவரை, மோட்டரோலா கம்பெனிக்குத்தான் இந்தப் புகழ் கிடைத்திருக்கிறது. யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள் பெரும்பாலும் அடிப்படை கல்வி அறிவு இல்லாதவர்கள் என்பது கூடுதல் விசேஷம். 16 மில்லியன் கொடுக்கல்-வாங்கல்களில் ஒரு தவறு என்ற ரீதியில் உயர்தர தொழில் சுத்தத்தோடு இயங்கும் இவர்கள் யார்?

மும்பையின் டப்பாவாலாக்கள்!

அதாவது, மும்பைவாசிகளின் மதிய உணவை, அவர்கள் அலுவலகத்தில் கொண்டு சேர்ப்பவர்கள். மும்பையில் தினமும் 5000 டப்பாவாலாக்கள் 1,75,000 டப்பாக்களைக் கொண்டு சேர்க்கிறார்கள்.

டப்பா?

டிஃபன் காரியரைப் போலவே, மூன்று அலுமினிய உள் அடுக்குகளில் உணவு நிரப்பப்பட்டு, ஸ்டாண்டோடு ஒரு பெரிய உயர பாத்திரத்தில் வைக்கப்படுகிறது. அந்தப் பாத்திரம் தான் டப்பா.



டப்பாவாலாக்கள் எப்படி இயங்குகிறார்கள்?

ஒவ்வொரு வீடாகப் போய் டப்பாக்களை சேகரித்துக் கொண்டு வந்து, அருகே உள்ள ரயில் நிலையங்களில் ஒன்று சேர்ப்பார்கள். பிறகு, அவற்றை, கொண்டு சேர்க்க வேண்டிய தொகுதி அடிப்படையில் பிரித்து, பெயின்ட்டில் அடையாளக் குறி இடுவார்கள். இந்த வேலை, காலை 10.45 மணிக்குள் முடிந்துவிடும்.

பிறகு, டப்பாக்கள் எல்லாம் க்ரேட்களில் வரிசையாக அடுக்கப்பட்டு, மின்சார ரயில்களின் 'மால்காடி' எனப்படும் பெட்டியில் ஏற்றப்படுகின்றன. வெவ்வேறு ஸ்டேஷன்களில் இறக்கப்படும் க்ரேட்டுக்களை, அந்தந்த தொகுதிகளைச் சேர்ந்த டப்பாவாலாக்கள், ஆளுக்கு ஒரு க்ரேட் விகிதம் தலையில் சுமந்து கொண்டு போய் மதியம் 12 மணிக்குள் அந்தந்த அலுவலகங்களில் சேர்த்து விடுகிறார்கள். இதேபோல, காலி டப்பாக்களை, சரியாக ஒன்னரை மணிக்குப் போய் எடுத்து வந்துவிடுகிறார்கள். இதே முறையில் அவை வீடுகளில் விநியோகிக்கப்பட்டு விடுகின்றன.



ஒரு டப்பாவாலா, ஒரு க்ரேட்டுக் குத்தான் பொறுப்பு. அதே மாதிரி, ஒரு குறிப்பிட்ட வீட்டிலிருந்து டப்பா எடுப்பதும் திரும்ப கொண்டு சேர்ப்பதும் ஒரே நபர்தான். அவர், டப்பாவை மட்டுமல்லாமல், வீட்டில் உள்ளவர்களையும் அடையாளம் வைத்துக் கொள்வதால் எந்த நிலையிலும் தவறுகள் நிகழ்வதே இல்லை!

இந்த ஒப்பற்ற சேவைக்கு அவர்கள் வாங்கும் தொகை, மாதத்துக்கு 150 ரூபாய்தான். அதிலும், 10 ரூபாயை டப்பாவாலாக்கள் யூனியனுக்குச் செலுத்திவிடுகிறார்கள். யூனியனுக்கு, இவர்களின் கட்டணம் வழியாகவே மாதம் 50,000 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கின்றது. இந்தப் பணத்தை வைத்து, யூனியன் ஒரு அறக்கட்டளையை நடத்துகிறது.

அறக்கட்டளையின் நோக்கம்?

அன்னதானம்!

— சாரதா ஸ்ரீநிவாசன்

# பித்ருக்களுக்கு சிராத்தம் ஏன் ? அவசியம் செய்ய வேண்டும்



சிராத்தம் போன்ற சடங்குகள் உண்மையில் பிராண ஜீவனுக்காகவே செய்யப்படுகின்றன. ஜீவனுடைய பிராண அதிர்வுகள் அதைப் பிராண லோகங்களுடன் அல்லது பூலோகத்துடன் தளைப்படுத்துகின்றன. அந்த அதிர்வுகளை நீக்குவதற்கு இந்த சடங்குகள் ஜீவனுக்கு உதவுகின்றன. இதனால் ஜீவன் சைத்திய சாந்தத்தில் ஓய்வெடுக்க விரைவாகச் செல்வது இயலும்.

—ஆதாரம் வைகறை 1991-92



# நடக்கும் என்பார்; நடக்கும்!

## மேஷம்

இந்த வாரம் வீட்ல விசேஷம் நடக்க வாய்ப்பிருக்கு. உங்க புத்திசாலித்தனம் வெளிப்படற மாதிரி ஏதாவது பண்ணுவீங்க. பல வழிகள்ல இருந்து பணம் வந்து பையை நிரப்பும். மக்கள் தமிழ்தேசம் கட்சிக்கு ஆறு சீட் கிடைச்ச மாதிரி, உங்களுக்கும் ஜாக்பாட் அடிக்கலாம். வெளிநாட்டுல இருந்து நல்ல செய்தி வந்து கதவைக் தட்டும். கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் ஏற்படும். அரசியல்வாதிங்க அடக்கி வாசிக்கறது நல்லது. இல்லேனா தெஹல்கா பூகம்பம் மாதிரி ஏதாவது அட்டாக் பண்ண வாய்ப்பிருக்கு.

## ரிஷபம்

ஐந்து தொகுதி எதிர்பார்த்த கட்சிக்கு பத்து தொகுதி கிடைச்ச மாதிரி இந்த வாரம் சந்தோஷத்துல மூழ்கப் போறீங்க. அரசாங்கத்திலயிருந்து பாராட்டு, உதவி பெற சான்ஸ் இருக்கு. சிற்பிகள் ஓவியர்கள் எல்லாம் மகிழ்ச்சியடையற மாதிரியான சந்தர்ப்பம் வரப் போகுது. கணவன் மனைவிக்குள்ள தம்மாத்தூண்டு பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். விட்டுக் கொடுத்துப் போனா நல்லது. வெயில் அதிகமா இருக்கறதால சாப்பாட்டு விஷயத்துல வாயைக் கட்டுங்க. பேச்சில நிதானம் அவசியங்க.

## மிதுனம்

இந்த சின்ன கட்சிக்கு இத்தனைத் தொகுதியான்னு மற்றக் கட்சிங்க பொறாமைப் படறமாதிரி, உங்க திறமையைப் பார்த்து மத்தவங்க பொறாமைப்படற நேரம் இது. சிவப்பு நிறப் பொருட்கள் ஆதாயம் கொண்டு வரும். மனசுல தன்னம்பிக்கை 'ஜில்'லுனு ஏறும். சிலர் மூக்குல விரல் வைக்கும்படி ஏதாவது சாதிப்பீங்க. பெயரும் புகழும் கூடப் போகுது. சொந்தக்காரங்க நண்பர்களால சின்ன சின்னப் பிரச்னைகள் வரும். பக்குவமா சமாளிக்கறது நல்லது. அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத திருப்பம் இருக்கு. எதிர்பாராத செலவுகள் வந்து எரிச்சல்படுத்தும். உஷாரா இருங்க.

## கடகம்

'இவ்வளவும் வேணும்' என்று அடம்பிடிச்சு தொகுதிகள் வாங்கிய கட்சிகள் மாதிரி, எந்தக் காரியத்தையும் அடிச்சு புடிச்சி முடிச்சிடுவீங்க. பணப் பிரச்னை இல்லை. நீங்க மரியாதை கொடுக்கற முக்கியமானவங்க உதவ முன் வருவாங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமான நிலை வரலாம். இரும்பு, எஃகு எண்ணெய் வகையறாக்களைப் பிசினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் உண்டு. வெளியூர் பயணத்தால நன்மை கிடைக்கும். இருந்தாலும் பயணத்தப்போ எச்சரிக்கையா இருக்கறது நல்லது.

## சிம்மம்

மனசுல மட்டும் இடம் கிடைச்ச கட்சி மாதிரி, மனசளவில சின்ன பாதிப்பை ஏற்படுத்தும் வாரம் இது. உடல் நலன்ல கவனம் வையுங்க. உஷ்ணம் சம்பந்தமான பாதிப்புகள் வரலாம். மனசுல அப்பப்ப நிம்மதியைக் கெடுக்கற மாதிரி ஏதாவது வந்து வந்து டென்ஷன் பண்ணும். அரசியல்வாதிகள் திடீர் திருப்பங்களைச் சமாளிக்க வேண்டி வரும். கணவன் மனைவிக்குள்ள பிரச்னைகள் வரும். 'பொறுத்தார் பூமியாள்வார்''ங்கற மாதிரி அமைதியா போனா பிரச்னை இல்லை.

## கன்னி

உங்க முயற்சி எதுவும் வீண் போகாது. பண விஷயத்துல பிரச்னை இல்லை. என்னதான் எதிர்ப்புகள் வந்து வழி மறிச்சாலும் சாமர்த்தியமா அதை ஜெயிச்சு வந்துடுவீங்க. வழக்கு விவகாரங்கள்ல உங்களுக்குச் சாதகமா திருப்பம் வர வாய்ப்பிருக்கு. மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பத்து மடங்கு உயர்ந்த மாதிரி நினைப்பீங்க. பாராட்டு, புகழ் கிடைக்கற மாதிரி சிலர் ஏதாவது பண்ணுவீங்க. ஆராய்ச்சியாளர்கள் புதுசா எதையாவது கண்டு பிடிச்சு பாராட்டைப் பெறுவாங்க. பெற்றோர் நலன்ல அக்கறை செலுத்தறது நல்லது.

**மார்ச் 28 முதல் ஏப்ரல் 3 வரை**

## துலாம்

வீராப்பு பேசற அரசியல் வாதிங்க மாதிரி ஏதாவது பேசி மாட்டிக்காதிங்க. பேச்சுல கொஞ்சம் கனிவு அவசியம். எதுலயும் அவசரம், பதற்றம் வேண்டாம். மேலதிகாரிங்க கிட்ட நல்ல பெயரெடுக்க முயற்சி பண்ணுங்க. செலவு எகிறும். சிக்கனத்தைக் கடைப்பிடிக்கறது நல்லது. உட்கட்சி சண்டைகள் / பிரச்னைகள் மாதிரி குடும்பத்துல திடீர் விவகாரங்கள் வரலாம். அமைதியா செயல்படுங்க. வெளி நாட்டுல இருந்து நல்ல செய்தி வரப் போகுது.

## தனுசு

உங்க உழைப்பு, திறமைக் கான பலனை இப்ப அனுபவிக்கப் போறீங்க. இரும்பு, எஃகு எண்ணெய் வகையறாக்களைப் பிசினஸ் பண்றவங்களுக்கு ஆதாயம் இருக்கு. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குச் சொல்லிக் கொள்ற மாதிரி ஏதுமில்லை. சின்ன சின்ன தடங்கல்கள், குறுக்கீடுகள் வந்து தலை காட்டும். பக்குவமாகப் பேசி சமாளிக்கறது நல்லது. வீண் சண்டை, வம்பு தும்புக்குப் போக வேண்டாம். ரோட்டுல வாய்ச் சண்டை நடந்தா இருபது அடி தூர நடக்கறது நல்லது. வீண் அலைச்சலைத் தவிர்த்திடுங்க.

## கும்பம்

'அட இங்க பார்டா'ங்கற மாதிரி ஏதாவது காரியம் பண்ணுவீங்க. எதிர்ப்புகள் குறையும். சட்டம், காவல் இராணுவத் துறைகளைச் சேர்ந்தவங்க வெற்றிநடை போடுவாங்க. கூட பிறந்தவங்களால நன்மைகள் வரும். அலைச்சல் அதிகமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்ல கவனமா இருங்க. பேச்சுல இனிமையைக் கலந்து பேசறது நல்லது. ஆடம்பர எண்ணங்களை மூட்டைகட்டி வைக்கறது கொஞ்ச காலத்துக்கு நல்லது. செலவு எகிறும்.. கவனமா இருங்க.

## விருச்சிகம்

'கட்சிக்குப் புது ரத்தம் பாய்ச்ச வேண்டும்'னு அரசியல்வாதிங்க சொல்றது போல உங்களுக்குள்ள புது ரத்தம் பாய்ஞ்ச கறுகறுப்பு இருக்கும். இதுவரை கிடப்பில் கிடந்த வேலைகள் இப்ப முடியும். சட்டம் காவல் இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்க ஏதாவது சாதனை படைக்க வாய்ப்பிருக்கு. மனசுல துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். மக்கள் நலத்துல பிரச்னை இல்லை. பண நடமாட்டத்துக்குப் பஞ்சமில்லை.

## மகரம்

உங்களோட சாமர்த்தியம், புத்திசாலித்தனம் வெளிப்படற வாரம் இது. திடீர்னு அழகா தெரிவீங்க. உங்க அழகை நீங்களே அடிக்கடி ரசிக்கற மாதிரியான ஜொலிப்பு முகத்துல ஏற்படும். குடும்பத்துல மகிழ்ச்சி பூத்துக் குலுங்கும். பண நடமாட்டம் திருப்தியா இருக்கும். பெண்கள் தங்களோட எண்ணம் நிறைவேறப் பெறுவாங்க. அரசியல்வாதிகளுக்கு இது கொண்டாட்ட வாரம். நினைச்சது நடக்கப் போகுது. சிலருக்குப் பதவி உயர்வு கிடைக்கும். வெளி நாட்டுல இருந்து உற்சாகத் தகவல் ஒண்ணு வரும்.

## மீனம்

உங்க உழைப்பும் திறமையும் வீண் போகாது. சமுதாயப் பணியாளர்களுக்கு பாராட்டும் புகழும் கூடும். சொத்து விவகாரத்துல கவனமா இருங்க. மனசுல ஏதாவது சலனம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்குக் கூட்டணி கட்சியினரால பிரச்னை ஏற்பட வாய்ப்பிருக்கு. அலைச்சல் அதிகரிக்கும். அதனால உடல் பிரச்னைகள் வர வாய்ப்பிருக்கு. மாணவர்கள் அக்கறையோடு படிப்புல கவனம் செலுத்துனா நல்லது. கொடுக்கல் வாங்கல் விஷயத்துல எச்சரிக்கையா இருங்க. ஏமாற்றப்பட வாய்ப்பிருக்கு.

**அக்னி சர்மா பக்கம்**



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel : 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com

## தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## 150 ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

| | | |
|---|---|---|
| • காலை சிற்றுண்டி (150 பேருக்கு) | ரூ. | 1,000/- |
| • மதிய உணவு | ரூ. | 2,000/- |
| • இரவு சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| • பிஸ்கட், மற்றும் பால் வழங்குதல் | ரூ. | 750/- |
| • ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை | ரூ. | 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு கம்ப்யூட்டர் பயிற்சி (ஓராண்டிற்கு) | ரூ. | 3,000/- |
| • ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. | 9,000/- |
| • குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 2,00,000/- |



## -: விவேகானந்தர் தேசீய இயக்கம் :-

ஸ்ரீ சாரதா சக்தி பீடத்தின் சார்பில் "விவேகானந்தர் தேசீய இயக்கம்" என்ற அமைப்பு கிராமபுறத்தில் உள்ள ஏழை மாணவ, மாணவியர்களின் கல்வி, மத நல்லிணக்கம், மனித நேயம், சமய சமரசம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் 350 கிராமங்களில் சுமார் 12,250 ஏழை மாணவ, மாணவியர்களுக்கு மாலை நேரத்தில் இலவச சிறப்புக் கல்வியும், (டியுஷன்) ஆன்மீக பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இந்த மேலான தொண்டுகள் சிறப்பாக நடைபெற தங்களின் அன்பையும், உதவியையும் நாடுகிறோம்.

| | |
|---|---|
| ஒரு மையத்தின் (கிராமத்தின்) ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு (பௌர்ணமி அன்று சிறப்பு விருந்து உட்பட) | ரூ. 1,500/– |
| ஒரு மையத்தின் ஓராண்டிற்கு பராமரிப்புத் தொகை (12 மாதம் பௌர்ணமி சிறப்பு விருந்து உட்பட) | ரூ. 18,000/– |

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



# தேர்தல் ஃபாஷன், டீனேஜ் ஃபாஷன்!

''ஒருவர் மீது ஒருவர் விழுந்து விழுந்து குற்றப்பத்திரிகை வாசிப்பதும், வாசிக்கப்பட்ட குற்றப்பத்திரிகைக்கு உடையவர்கள் விழுந்து விழுந்து சப்பைக்கட்டு கட்டுவதும் தேர்தல் ஃபாஷன். எந்த ஃபாஷனையும் 'கப்' என்று பிடித்துக் கொள்ளும் நீங்கள், 'நாங்கள் உண்டு எங்கள் காலேஜ் உண்டு' என்று இப்படி உப்புச்சப்பில்லாமல் இருக்கிறீர்களே, நன்றாகவா இருக்கிறது?'' என்று டீன்-ஏஜ் ஆண்கள் அணியையும் டீன்-ஏஜ் பெண்கள் அணியையும் இலேசாக முடுக்கிவிட்டோம்! பலன் இதோ...

● பெண்கள் அணி ○ ஆண்கள் அணி

○ காதல் விஷயத்தோட மங்களகரமாக ஆரம்பிக்கலாம். காதலை எப்பவுமே நாங்க தான் போட்டு உடைக்கணும்கிறது, என்ன எழுதாத சட்டமா?

● யாராவது ஒருத்தர் போட்டு உடைச்சா சரிதானே. இதில் என்ன வந்தது?

○ அந்த 'ஒருத்தர்' பசங்களாவேதான் இருக்கணுமான்னு கேட்கிறேன்...

● நாங்க போட்டு உடைக்கிற வரைக்கும் நீங்க எங்கே காத்திருக்கீங்க? அப்பா, அம்மா, குடும்பச் சூழ்நிலை, படிப்பு, வருங்காலம், எதையும் யோசிக்காமே அவசரக்குடுக்கை களாட்டம் 'டபக்'னு போட்டு உடைச்சிரு வீங்க. ஆனா நாங்க அப்படி இல்லை. பொறுப்பானவங்க. நாலையும் யோசிச்சு செய்றவங்க. அதனாலேதான் நிறைய டைம் எடுத்துக்கறோம்.

○ அது இல்லை காரணம். எங்களை 'லோ லோ'ன்னு அலையவிட்டு வேடிக்கைப் பார்க்கறதில் உங்களுக்கு ஒரு தனி சந்தோஷம்!

● அப்படி இல்லை. 'பட்'னு முடியாதுன்னு சொல்லிட்டா, உங்க மனசு உடைஞ்சிடுமேங்கிற கவலை...

○ அப்புறம் சொல்லும்போது மட்டும் மனசு 'பட்'னு உடையாமே, ஃபெவிகாலில் ஒட்ட வைச்ச மாதிரி நிற்குமா?

● கல்கி டிஸ்கஷனில் பேசறதுக்கு

வேணும்னா இதெல்லாம் சரியா வரும். ஆனா நிஜவாழ்க்கையில், நாங்க முதலில் காதலை வெளிப்படுத்தி னோம்னு வைச்சுக்கங்க, 'என்ன தைரி யம் பாருடா, இவ எல்லாம் ஒரு பொண்ணா?'ன்னு எங்க முதுகுக்குப் பின்னாலே போய் நக்கல் பண்ணு வீங்க!

○ அதெல்லாம் அந்தக்காலம். இப்ப நாங்க எல்லாம் ரொம்ப மாடர்ன்!

● ஜீன்ஸ், பெர்முடா விஷயத்தில்தான் நீங்க எல்லாம் மாடர்ன், 'இங்கிங்'ல நீங்க இன்னும் ஹைதர் காலத்து துக்ளக்குகள் தான்!

○ நாங்க துக்ளக்குகளாகவே இருந்திட்டுப் போறோம். தெரியாமத்தான் கேட்கிறோம், ஹோட்டலுக்கு அழைச்சுட்டுப் போனா, ஒரு நாளாவது பில் செட்டில் பண்றீங்களா? அங்கேயும் எங்களைத்தான் இளிச்சவாயன்கள் ஆக்குறீங்க!

● நாங்களா பணம் கொடுக்க மாட்டோம்னு சொல்றோம்? ஹாண்டு-பேக்கில் கை வைச்சா போதும். 'இது என்னோட ட்ரீட், ப்ளீஸ்!'னு ஸ்டைலா ஹீரோ கணக்கா நீங்கதான் சொல்றீங்க!

○ அதை ஏன் சொல்றோம்னா, உங்களைக் கொடுக்க விட்டா, அடுத்தவாட்டி வெளியில் கூப்பிடும்போது வரமாட்டீங்க பாருங்க, அந்த பயம்தான்!

● கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசைன்னா அனுபவிங்க! அது போகட்டும். 'டிஸிப்ளின்'- கட்டுப்பாடு அப்படீங்கற ஒரு வார்த்தை அகராதியில் இருக்குன்னு உங்களுக்கெல்லாம் தெரியுமா?

○ ஏன், எங்க டிஸிப்ளினுக்கு என்ன குறைச்சலாம்?

● ஒரு தியேட்டருக்குப் போய் நிம்மதியா படம் பார்க்க விடுறீங்களா? நட்ட நடுவில் நின்னுக்கிட்டு ஆடறதும் பாடறதும்...

○ பிரபுதேவா 'கிங்'டா'ன்னு ஆடும்போது எங்களுக்கும் ஆடணும்னு ஒரு வேகம் வருது!

● ஆனா நாங்க காசு கொடுத்து டிக்கட் வாங்கறது, பிரபுதேவா ஆடுறதைப் பார்க்கிறதுக்குத்தான். நீங்க ஆடுறதைப் பார்க்கிறதுக்கு இல்லை!

○ ஏன், டிஸ்கோவுக்கு எல்லாம் நீங்க போறதே இல்லியா?

● டிஸ்கோ அப்படீங்கறது, ஆடறதுக்காக போகிற இடம். தியேட்டர் அப்படீங்கறது படம் பார்க்கறதுக்காக போகிற இடம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கு!

○ நான் கூட 'ஏ.ஸி. டெக்'கோடே காலேஜ் கல்ச்சுரல் ப்ரோக்ராமுக்குப் போயிருந்தேன். பொண்ணுங்க என்ன அமர்க்களம் பண்ணிக்கிட்டிருந்தாங்க தெரியுமா?

● என்னதான் பண்ணாலும், உங்களோட பேப்பர்-ராக்கெட் அமர்க்களத்தை மிஞ்சவே முடியாது. அமெரிக்காவில் உள்ள 'NASA'வே உங்ககிட்டே தான் கத்துக்கணும், ராக்கெட் எப்படி விடுறது, அப்படீன்னு!

○ புரோக்ராம் நல்லா இல்லேன்னா ராக்கெட் விடத்தான் செய்வோம்!

● புரோக்ராம் பிடிக்கலைன்னா எழுந்து போகவேண்டியதுதானே? அங்கே உட்கார்ந்துக்கிட்டு ராக்கெட் விட்டுக்கிட்டு, புரோக்ராம் பண்றவங்களோடே உணர்ச்சிகளையும் புண்படுத்தி, ரசிச்சு பார்த்துக்கிட்டு இருக்கிறவங்களையும் கஷ்டப்படுத்தி, இதெல்லாம் தேவையா...?

○ சரி, அடுத்த விஷயத்துக்குப் போகலாம்.

**காதலை எப்பவுமே நாங்கதான் போட்டு உடைக்கணும்கிறது, என்ன எழுதாத சட்டமா?**





எல்லா ஃபீல்டிலேயும் தான் டாமினேட் பண்றீங்க இல்லை! அப்புறம், உரிமை இல்லைன்னு ஏன் புலம்புறீங்க? ஒரு சாதாரண பஸ் பிரயாணத்தை எடுத்துக்கங்க. பின்னாடி சீட் எல்லாம் உங்களுக்குன்னு ஒதுக்கியாச்சு. அது போக, முன்னாடி சீட்டில், இடம் கிடைச்சா போறும்னு, வந்து உட்கார்ந்திடறீங்க!

● நாங்களாவா உட்கார்றோம்? நீங்க தான் எங்களைப் பார்த்த உடனே லிட்டர் கணக்கா ஜொள்ளு விட்டுக்கிட்டே இடம் கொடுக்கறீங்க!

**ஜீன்ஸ், பெர்முடா விஷயத்தில்தான் நீங்க எல்லாம் மாடர்ன், 'திங்க்கிங்'ல நீங்க இன்னும் ஹைதர் காலத்து துக்ளக்குகள் தான்!**

○ லேடீஸுக்கு ஸ்பெஷலா பஸ் விடுறாங்க. ஆனா அதிலே கூட்டத்தையே காணும். சாதாரண பஸ்ஸில் பாருங்க, உங்களை மாதிரி பொண்ணுங்க கூட்டம் அலைமோதுது!

● உங்களோட பயணம் செஞ்சாத்தான் எங்க ஜென்மம் சாபல்யம் அடையும் பாருங்க!

○ எங்களை இம்ப்ரெஸ் பண்ணணும்னு உங்களுக்குள்ளே ஒரு ரகசிய ஆசை என்னிக்குமே உண்டு!

● போயும் போயும் உங்களையா?

○ ஒரு உதாரணம் சொல்றேன். எல்லாரும் தமிழில் பேசிக்கிட்டே வருவீங்க. எங்களைப் பார்த்த உடனே 'டஸ்', 'புஸ்'னு நாலு இங்கிலீஷ் வார்த்தையை எடுத்து விடுவீங்க. இது ஷோ காட்டுற வேலை தானே?

● இங்கிலீஷ் ஒரு அழகான மொழி. அதைப் பேசறது தப்பா?

○ அது ஒரு அழகான மொழின்னு எங்களைப் பார்த்த உடனே தான் ஞாபகத்துக்கு வருதா?

● இங்கிலீஷ்லே பேசினா உங்களுக்குப் புரியாது. எங்களுக்குப் ப்ரைவஸி கிடைச்ச மாதிரி இருக்கும். அதுக்காகத் தான்னு வைச்சுக்கங்களேன்! அது போகட்டும். ஒரு பொண்ணு ஏதாவது காரியம் உங்களைவிட நல்லா பண்ணிட்டா உங்களாலே பொறுத்துக்கவே முடியாது. அது என்ன, அப்படி ஒரு ஈகோ?

○ அதெல்லாம் உங்களோட கற்பனை!

● தினப்படி நடக்கிற விஷயத்தை உதாரணம் சொல்றேன். ரோட்டில் போகும்போது, ஒரு பொண்ணு உங்களைத் தன்னிச்சையா ஓவர்டேக் பண்ணிட்டா போதும், உயிரைப் பணயம் வெச்சாவது அவளைத் திரும்ப நீங்க ஓவர்டேக் பண்ணுறீங்க. உண்டா இல்லையா?

○ ரோட்டை விட்டுட்டு வீட்டுக்கு வாங்க. எத்தனை கணவன்மார்கள் இன்னிக்கு பொண்டாட்டிக்கு காப்பி ஆத்தி குடுக்கறாங்க தெரியுமா?

● சும்மா பிலா விடாதீங்க. பொண்டாட்டி வேலைக்குப் போனா கூட, அவதான் வீட்டுக்காரியம் அத்தனையையும் செய்யணும். குழந்தைகளையும் பார்த்துக்கணும். அவங்க படிப்பையும் கவனிக்கணும். ஆண்கள் வேலைக்கு போயிட்டு வர்றதோடே சரி. அங்கேயும் போய் வேலையை ஒழுங்கா செய்யறீங்களோ இல்லியோ, யாருக்குத் தெரியும்?

○ நாங்களா உங்களை வேலைக்குப் போகச் சொல்றோம்? வீட்டில் 'ஹாய்'யா இருக்கிறதை விட்டுட்டு, வேலைக்குப் போனால்தான் ஆச்சுன்னு ஒத்தக்காலில் நிற்குறீங்க. அப்புறம், வேலைக்குப் போறோம், வேலைக்குப் போறோம்னு பினாத்தறீங்க!

● இன்னிக்கு ஞாயித்துக்கிழமை தானே, ஹிண்டு மேட்ரிமோனியல் காலத்தை எடுத்துப் பாருங்க. வேலைக்குப் போகிற பெண்கள்தான் வேணும்னு எத்தனை ஆம்பிளைங்க விளம்பரம் கொடுத்திருக்காங்க பாருங்க! அதுக்கு என்ன சொல்றீங்க?

○ அப்படி விளம்பரம் கொடுத்திருக்கிற ஆம்பிளைங்க நிச்சயம் வீட்டில் ஒத்துழைக்கத் தயாராய் இருப்பாங்க!

● ஒரு மண்ணும் கிடையாது. புதுப்பெண்டாட்டி மோகத்தில் வேணும்னா ஒத்துழைப்பாங்க. அப்புறம், பழைய குருடி கதவைத் திறடி கதைதான்!

○ வேலைக்குப் போக விரும்பாத பெண்கள்தான் வேணும்னு விளம்பரம் கொடுத்தோம்னு வைச்சுக்கங்க, "என்ன திமிரு, நம்ப அடிப்படை உரிமையில் கை வைக்கறாங்க பாரு!"ன்னு காச்மூச்னு கத்துவீங்க. நின்னாலும் தப்பு, உட்கார்ந்தாலும் தப்பு. நாங்க என்னதான் செய்யறது?

● சரி, அதை விடுங்க. உங்களுக்கு ஒரு ரூல், மத்தவங்களுக்கு ஒரு ரூல். உங்க பெண்டாட்டி சல்வார்தான் போட்டுக்கனும். ஆனா மத்த பொண்ணுங்க கிளாமரஸ்ஸா உடுத்தனும்! இதுதான் உங்களோட ஆசை!

○ யார் எப்படி உடுத்தனும்னு நாங்களா சொல்றோம். அவங்கவங்க இஷ்டம் அது. அதுக்காக நாங்க கண்களையா மூடிக்க முடியும்?

● நீங்களும் தான் ஷாட்ஸ் போட்டுக்கிட்டு வர்றீங்க. நாங்க எல்லாரும், உங்களை, வாயில் ஈ போகிறது தெரியாமே பார்த்துக்கிட்டா இருக்கோம்?

○ நாங்க ஷாட்ஸ் போட்டா, எங்களோடே இருக்கிற அழகும் போயிடுது. ஆனா நீங்க ஷாட்ஸ் போட்டா 'டபுள்' அழகா ஆயிடுறீங்களே!

● இந்த பேத்தல் எல்லாம் வேண்டாம். சினிமாவை எடுத்துக்கங்க. நடிகைகளை கிளாமரா டிரெஸ் பண்ணிக்கச் சொல்லி தயாரிப்பாளர் கட்டாயப்படுத்தறதுக்கு என்ன காரணம்? உங்களோட மட்டமான ரசனை தானே?

○ இது ரொம்ப நல்லா இருக்கே? நடிக்க மாட்டேன்னு ஹீரோயின்கள் சொல்ல வேண்டியதுதானே- அவங்க வாயில் என்ன கொழுக்கட்டையா?

● அப்படிச்சொன்னா, கொழுக்கட்டைக்குக் கூட வழி இல்லாமே அவங்க பட்னி கிடக்கனும். சரி, உங்க ரசனை ரொம்ப உயர்வான ரசனை அப்படீன்னே வைச்சுக்குவோம். ஒன்னும் இல்லாத விஷயத்துக்கெல்லாம் ஸ்ட்ரைக் பண்ணுவதை விட்டுட்டு, ஒரு தடவை தியேட்டர் வாசலில் போய் ஸ்ட்ரைக் பண்ணுங்களேன், இந்த மாதிரி படம் எடுக்காதீங்கன்னு!

○ ஒன்னும் இல்லாத விஷயத்துக்கு ஸ்ட்ரைக் பண்ணுறோம்னு யார் சொன்னா?

● அதான் நாளொரு மேனி, பொழுதொரு வண்ணமா பேப்பரில் நியூஸ் வந்துக்கிட்டே இருக்கே! உங்களோட எதிர்ப்பைத் தெரிவிக்கிறதுக்கு எத்தனையோ வழி இருக்கு, ஆனா, நீங்க ஏன் ஸ்ட்ரைக் பண்ணுறீங்க தெரியுமா? கிளாஸைக் கட் அடிக்கிறதுக்கும் படிக்காமே இருக்கிறதுக்கும் இது ஒரு சாக்கு!

○ ஆமா, நாங்க எல்லாம் படிக்கிறதே இல்லை. நீங்க மட்டும்தான் படிச்சுக் கிழிக்கிறீங்களாக்கும்?

● வருஷா வருஷம், +2 ரிசல்ட்டைப் பார்க்குறீங்க இல்லே? எல்லாத்திலேயும் நாங்கதான் டாப். நீங்க படிக்கிற லட்சணம் இதிலிருந்தே தெரியலையா?

---

*புரோக்ராம் நல்லா இல்லேன்னா ராக்கெட் விடத்தான் செய்வோம்!*

---

○ சரி. நீங்கதான் படிக்கறவங்க. நீங்க தான் பொறுப்பானவங்க. நீங்கதான் குடும்பத்தையே கரையேத்தறவங்க, ஏன், இந்தியாவையே நீங்கதான் தூக்கி நிறுத்தறவங்க... போதுமா? எப்படியும் எங்களுக்குக் கல்யாணம் ஆன உடனே எங்க பேச்சு சுதந்திரம் ஹோகயா-சேலா போகத்தான் போகுது. அது இன்னிக்கே போனதாக நினைச்சுக்கறோம்... ஆளை விடுங்க!

தொகுப்பு: **கிருஷ்**
படங்கள்: **ஸ்ரீஹரி**

பெண்கள் அணி:
**அஸ்வினி, சுமித்ரா, ஹரிணி, ஜானகி, சரஸ்வதி.**

ஆண்கள் அணி: **மதன், மகேஷ், சையத், பிரதீப், தனா, ஷஃபி, மோகன்**



# 5

ஒரு தனவான்... கிருஷ்ணா என்கிற ஸ்த்ரீயைப் பார்க்கப் போகிறார். அவளுக்காக ஒரு புஷ்பம் கொண்டு போகிறார். போகிற வழியிலே அந்தப் பூ ஒரு பள்ளத்திலே விழுந்து விடுகிறது. அதை எடுக்கவே முடியவில்லை. ரொம்ப விரக்தி அடைந்து விடுகிறார் அந்த தனவான். போய் ஒரு குளத்தங் கரையில் உட்கார்ந்து கொள்கிறார்.

அப்படி உட்கார்ந்து கொண்டிருக்கையில் தன்னையறியாமல் 'கிருஷ்ணார்ப்பண மஸ்து' என்று சொல்கிறார்.

இவர் சொல்வது, அந்த ஸ்த்ரீ கிருஷ்ணா என்கிற ஸ்திரீயை மனத்தில் வைத்துக்கொண்டு, 'ஹே கிருஷ்ணா! உனக்காகத்தானே அந்தச் செடியை ரொம்ப கஷ்டப்பட்டு நான் வளர்த்தேன். அந்தப் புஷ்பம் உனக்காகத்தானே மலர்ந்தது. இப்போது போய்விட்டதே!' என்று வருத்தப்பட்டார். வருத்தம் தாளாமல் மயங்கி, அந்தக் குளத்திலேயே விழுந்துவிட்டார். அதனால் மரணம் ஏற்பட்டுப் போயிற்று அவருக்கு! யமபடர்கள் வந்து அவரை இழுத்துக் கொண்டு போகிறார்கள். யமனிடத்திலே கொண்டுபோய் நிறுத்துகிறார்கள்.

யமன் சித்ரகுப்தனைக் கூப்பிட்டான். சித்ரகுப்தனுக்கு எல்லாமே தெரியும். அவன் எல்லாவற்றையும் எடுத்து வாசித்து, இவர் இன்ன ஊரில் பிறந்தவர், இவர் பிறந்தது முதலாக, கடைசி பர்யந்தம், இவர் பண்ணியதெல்லாம் பாபமே! பாபமே! பாபமே! என்று படித்துக் கொண்டேயிருக்கிறான் சித்ரகுப்தன்.

உடனே யமன் வந்து சித்ரகுப்தன் கையைப் பிடித்துக் கொண்டுவிட்டான். பிடித்துக் கொண்டு சித்ரகுப்தனைப் பார்த்துக் கேட்கிறான் :

"நான் இந்தப் பதவியிலே வந்து உட்கார்ந்த பிற்பாடு எப்படிப்பட்ட வார்த்தை கேட்டிருக்கிறேன் தெரியுமா உன்னிடமிருந்து..., 'பாபமே பாபமே, புண்ணியமே புண்ணியமே, புண்ணியமே, பாபமே புண்ணியமே' என்றுதான் நீ சொல்லக் கேட்டிருக்கிறேன். இடையிடையிலே புண்ணியமும் வரும். இப்போது என்னவென்றால் 'பாபமே பாபமே' என்று தொடர்ந்து படிக்கிறாயே! இவன் என்ன ஒரு புண்ணியம் கூட பண்ணவில்லையா... நீ இவன் கணக்கைச் சரியாக எழுதவில்லையா...?" என்று கேட்கிறான் யமன்.



அதற்கு சித்ரகுப்தன் சொல்கிறான் "நான் தப்பாக எழுதுவேனா சுவாமி..? நான் மட்டுமா இதை எழுதுகிறேன்..? பதினான்கு பேர் சாட்சி சொல்கிறார்களே! எட்டு திக்குகள் சொல்கின்றன. பூமி, கோமாதா அந்தராத்மா, இத்தனை பேர் போய் சாட்சி சொல்கிறார்கள். ஏகாந்தம் என்பது கிடையவே கிடையாது. பதினான்கு பேர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் - சாட்சி பூதர்கள். அப்படியிருக்கையில் நானாக ஒரு கணக்கு எழுதிவிட முடியுமா..?" என்று கேட்கிறான் யமனைப் பார்த்து.

யமன் அந்தக் கணக்கை கையிலே வாங்கிக் கொண்டுவிட்டான். வாங்கிப் பார்த்தால், இவன் குளத்தில் விழுந்து மாண்டு போனானே - அன்றைக்கு இந்தப் புஷ்பத்தைக் கொடுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டானே... அன்றைய தினத்தில் அவன் கணக்கிலே 'புண்ணியமே' என்று எழுதியிருக்கிறது. பிறகு அதை அடித்துவிட்டுத் திருத்தி,



# குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

'பாபமே' என்று மாற்றி எழுதியிருக்கிறான் சித்ரகுப்தன்.

அவ்வளவுதான்! சித்ரகுப்தன் காதை கெட்டியாகப் பிடித்துக் கொண்டுவிட்டான் யமன்.

"இந்தக் கணக்கிலே உனக்கு ஏன் அடித்தல் திருத்தல் வந்தது? கணக்கு என்றாலே அடித்தல் திருத்தல் இல்லாமல் இருக்க வேண்டாமா? ஒரு விஷயத்தை எழுதிக் கொடுத்தால் வெறுமே அடித்துக் கொண்டிருந்தால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நீ ஒருவரைப் பற்றி எழுதுகையில் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதிக் கொடுத்தால்தான் அவருடைய குணம் தெரியும்..." என்றான்.

மகான்களும் அதைத்தான் கவனிப்பார்கள். ஒரு விஷயம் சந்தேகத்துக்கிடமின்றி அடித்தல் திருத்தல் இல்லாமல் இருக்கிறதா..? பேச்சும் அப்படியே முன் பின் மாற்றம் இன்றி இருக்கிறதா..? என்றுதான் பார்ப்பார்கள்.

ஆகையினால்தான் யமன் சித்ரகுப்தனைப் பார்த்துக் கேட்கிறான்; ஏன் அடித்து எழுதினாய் என்று.

"அன்றைக்கு ஒரு நாள் மட்டும் அந்த

சுதந்தரத்தை எடுத்துக்கொண்டேன்'' என்கிறான் சித்ரகுப்தன்.

அது கெடுதலாகப் போய்விட்டது. என்றைக்கோ ஒரு நாள் தப்பு பண்ணினால் அதுதான் நிற்கும். அதுதான் எல்லோருக்கும் தெரிய வரும். மற்ற நாட்களில், நல்லவராக இருந்துவிட்டால் பிரயோஜனமில்லை. அன்றைக்கு ஒரு நாள் பண்ணுகிற தப்பு பிரசித்தமாகப் போய்விடும். இதுவரைக்கும் பதினான்கு பேர் சாட்சி சொன்ன பிற்பாடே கணக்கு எழுதி வந்தான் அவன். இந்த ஒரு முறை மட்டும் என்ன பண்ணினான்... சாட்சி இல்லாமலே எழுதிவிட்டான்! ஏனென்றால், அந்த தனவான் கிருஷ்ணார்ப்பணம் என்று சொன்னானல்லவா...! அதனால் கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் என்று தீர்மானம் பண்ணி எழுதிவிட்டான். அவர்களெல்லோரும் வந்து சொன்ன பிற்பாடுதான் 'பாபமே' என்பது தெரிந்தது.

உடனே யமன் கேட்டான். "கிருஷ்ணார்ப்பணம் என்று சொல்வது தப்பா..? அதைப் பாபமே என்கிறீர்களே!"

''ஆமாம். தப்புதான். அவன் என்ன பண்ணினான் தெரியுமா..? 'கிருஷ்ணா யா: அர்ப்பணம் கிருஷ்ணார்ப்பணம் என்று பகவானுக்கு அர்ப்பணம் சொல்லவில்லை. கிருஷ்ணா என்றொரு பெண்... அந்தப் பெண்ணுக்கு - கிருஷ்ணஸ்ய அர்ப்பணம் என்று சொன்னான். அதனாலே பாபம் தானே...'' என்று கேட்டான் சித்ரகுப்தன்.

யமன் சொன்னான். ''அப்படி இல்லை... சப்த சுவாரஸ்யம். கிருஷ்ணார்ப்பணம் என்றது இரண்டு பேருக்கும் பொதுவாக இருந்தால் கிருஷ்ண சப்தம் இந்த இடத்திலே பகவானைக் குறிக்குமானதனாலே நீ கணக்கை அப்படித்தான் எழுத வேண்டும்'' என்றான்.

க்ரு என்றால் பூ வாசகம். ண என்றால் நிவ்ருத்தி வாசகம். பூமியிலிருந்து நம்மை விடுவிப்பவன் என்று அந்த நாமத்துக்குப் பொருள். ண என்பதற்கு ஆனந்தம் என்று ஒரு பொருள். நமக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவன் என்று கிருஷ்ண சப்தத்துக்கு அர்த்தம்.

"இதற்கு நாமாகத் தீர்ப்பு சொல்லக் கூடாது; சப்த ரிஷிகளைக் கேட்க வேண்டும் என்று சப்த ரிஷிகளை நோக்கி தியானம் பண்ண ஆரம்பித்துவிட்டான் யமன்.

சப்த ரிஷிகள் வந்தார்கள். அவர்களைக் கேட்டான். அவர்கள் சொல்கிறார்கள் :

## அருள்வாக்கு!



உடம்பை பலமாக வைத்துக் கொள்வதற்காகவும், மனம் உற்சாகமாக இருப்பதற்காகவும் நீங்கள் யாவரும் விளையாட வேண்டியது அவசியம். நான் சொல்லாமலே உங்களுக்காகவே விளையாட்டில் இஷ்டமும், ஈடுபாடும் இருக்கத்தான் செய்யும். இங்கேதான் ஜாக்கிரதை தேவை. உங்கள் படிப்புக்குச் சிறிதுகூட இடையூறு இல்லாதபடியும், பிறருக்கு எந்த விதத்திலும் இம்சை ஏற்படாதபடியும் உங்களுடைய விளையாட்டு ஆசையை அளவுக்குள்

உள்ளூர நினைத்துக் கொண்டு பகவான் நாமாவைச் சொன்னால் பலனுண்டு; இந்த மாதிரி வேறு விஷயத்தை நினைத்துக் கொண்டு பகவன் நாமாவைச் சொன்னாலும் பலன் உண்டு. ஆகையினாலே, இவன் இப்போது நரகலோகத்தில் சித்ரவதை அனுபவிப்பதற்கு உரியவன் அல்லன். முதலில் இவன் சுவர்க்க லோகத்துக்குப் போய் போகங்களை அனுபவித்த பிற்பாடு தான் நரகத்துக்கு வரவேண்டும்; அதனால் அழைத்துப் போங்கள்'' என்று சொல்லி விட்டனர் சப்தரிஷிகள்.

உடனே கட்டெல்லாம் அவிழ்க்கப்படுகிறது. இவனை அந்த நரகம் வழியாக சுவர்க்கத்துக்கு அழைத்துப் போகிறார்கள். அந்தக் காட்சிகளையெல்லாம் பார்த்து நடுநடுங்கிப் போய்விட்டான் அவன். **அப்படியே நிர்வேதம் ஏற்பட்டுப் போய் விட்டது!** அங்கே ஒரு பெரிய குளம் வருகிறது. குளத்திலே ஏகமாக தாமரைகள். பார்த்தான்... அதிலிருந்த புஷ்பங்களையெல்லாம் எடுத்து தலையில் வைத்துக் கொண்டு, "தேவகி நந்தனனான கிருஷ்ணனுக்கே அர்ப்பணம்; யசோதானந்தனனான கிருஷ்ணனுக்கே அர்ப்பணம்; கிருஷ்ணார்ப்பணம், கிருஷ்ணார்ப்பணம்" என்று வரிசையாகச் சொல்லி கிருஷ்ணா, கிருஷ்ணா என்று அப்படியே உருகிவிட்டான்.

ஒன்றுமேயில்லாத ஒரு ஸ்த்ரீயை நினைத்துக் கொண்டு சொன்னதற்கே சுவர்க்க பலன்

கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

விளையாட்டு என்றால் மற்றவரை ஜயித்தாக வேண்டும் என்ற ஆர்வமும், விடாமுயற்சியும் ஏற்படவே செய்யும்; ஆகையினால் அதில் போட்டியும் தவிர்க்க முடியாத அம்சமாகிவிடுகிறது. அதனால் தவறில்லை. ஆனால் இது காரணமாக, ஜயிக்கிறவர்களிடம் பொறாமை எண்ணம் ஏற்பட இடம் தரக்கூடாது. விளையாட்டுப் போட்டி சண்டையாகவும், விரோதமாகவும் ஆகிவிடக்கூடாது. நம்மை ஜயிக்கிறவனை நமக்கு உதாரணமாகக் கொண்டு சிநேகம் பாராட்ட வேண்டுமேயன்றி விரோதியாகக் கருதலாகாது.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி**
**ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

உண்டென்று சொன்னால், இப்போது இவன் உளமுருகிச் சொல்லிக் கொண்டு போகிறானே, இவன் திரும்பி யமலோகம் வந்தால் சிக்ஷை கொடுப்பதா வேண்டாமா? என்று பெரிதாகச் சந்தேகம் ஏற்பட்டுப் போயிற்று யமதூதர்களுக்கு!

பகவான் நாமா படுத்தும் பாடு அது! சுவாமி தேசிகன் அபீதி சத்வம் என்கிற ஸ்தோத்திரத்திலே சொல்கிறார்.

"எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்கிறவர்களுக்கு நரகத்திலே போய் விழவேண்டிய சம்பவம் ஏது?... யம சர்ச்சை ஏது?" என்று கேட்கிறார்.

எல்லா நரகத்தையும் சொல்லிவிட்டு அதற்குப் பராசர மகரிஷி ஒரு பிராயச்சித்தத்தையும் சொல்கிறார். சர்வ பிராயச்சித்தம்!

'கிருஷ்ணனுக்கு தாஸன் என்று அவன் திருநாமத்தைச் சொல்ல வல்லவனுக்கு இந்த நரகங்களெல்லாம் ஏது?' என்று கேட்கிறார். பராசர மஹரிஷி விஷ்ணு புராணத்திலே.

தொண்டரடிப்பொடியாழ்வார்,

புலன்களைக் காவலில் வைத்து பகவான் நாமாவைச் சொல்ல வல்லவனுக்கு என்ன கிடைக்கும் என்றால், யமன் தலைமேல் காலை வைத்து ஏறிப் போகும்படியான பெருமை ஏற்படும் என்கிறார்!

யாருக்காவது அந்தப் பெருமை ஏற்பட்டிருக்கிறதா என்றால், உண்டு ஒருவருக்கு.

கல்யாணத்தன்று த்ருவ, அருந்ததி பிரதர்சனம் என்று செய்விப்பார்கள். தம்பதிகள் த்ருவ, அருந்ததி நக்ஷத்திரங்கள் இருக்கிற திக்கை நோக்கி நமஸ்கரித்து, அந்த நக்ஷத்திரங்களைப் பார்க்க வேண்டும்.

ஏன்...?

த்ருவனைப் போன்ற உத்தமமான பிள்ளை இவர்களுக்குப் பிறக்க வேண்டும். அருந்ததி போல் கற்புடை நங்கையாக இந்த மணப்பெண் இருக்க வேண்டும்.

த்ருவன் இருக்கிறானே அவன் த்ருவபதம் ஏறுகிறான். இதுவரை யாரும் அனுபவிக்காத பதம் அது. அதைத்தான் த்ருவன் பகவானிடத்திலே கேட்டான். அந்த உத்தமமான பதம்! வேகமாக விமானத்திலே அழைத்துச் செல்லப்படுகிறான். அவன் அம்மா சுனிதியும் கூடப் போகிறாள்.

ஆகாசத்தில் பளிச்சென்று தெரிகிற த்ருவ நக்ஷத்திரத்துக்குப் பக்கத்திலேயே இன்னொரு சின்ன நக்ஷத்திரம் தெரியும். த்ருவனை ஈன்றெடுத்த தாயார் சுனிதி அது. இன்றைக்கும் அவள் அங்கே சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அப்படி ஒரு சத்புத்திரனை ஈன்றெடுத்ததற்காக.

அதனால்தான் கல்யாணத்தன்று த்ருவ நக்ஷத்திரமும் பார்க்க வேண்டும் என்று ஏற்பட்டது.

அந்த த்ருவன் இருக்கிறானே, அவன் பதம் ஏறும்போது, பதம் அவனுக்கு எட்டவில்லை. கொஞ்சம் உயரமாக இருந்தது. அங்கே சுற்றி எல்லா தேவதைகளும் நின்று கொண்டிருக்கிறார்கள். யமலோகத்திலிருந்து யமன் கொஞ்சம் தாமதமாக வந்தானாம். அப்படி கொஞ்சம் முன்னே வந்து தலையை நீட்டினான். த்ருவனுக்கு ரொம்ப சௌகரியமாய் இருந்ததாம். ஒரு படிக்கட்டு இருந்தால் சௌகரியமாய் இருக்குமே என்று நினைத்துக் கொண்டிருந்தான். யமன் வந்து தலையை நீட்டவும், அதைப் படிக்கட்டாக்கி ஏறி உட்கார்ந்து கொண்டுவிட்டான்!

ஆகையினாலே, யமனையும் அடக்கி ஆளக்கூடிய தன்மை பகவன் நாமாவைச் சொல்கிறவர்களுக்கு இருக்கிறது. 'அப்படிச் சொல்கிறவர்களிடம் போகாதே' என்று யமபடர்களைக் கூப்பிட்டு யமனே சொல்லி விடுகிறான்!

பகவன் நாமாவின் மகிமை எப்படிப் பட்டது என்று இதிலிருந்து தெரிகிறது. ஒவ்வொரு நாமாவும் ஒரு காமதேனு; ஒரு கலைக் களஞ்சியம். ஒரு நாமாவை அனுபவிக்கவே ஒரு ஆயுட்காலம் போதாது.

(வளரும்)



வழவழா
கொழகொழா
தன்மைக்குப் பெயர்
போன மூப்பனாரி
ஜார்ஜெட்!
புடைவையில்
இருக்கும் டிசைனைக்
கண்டுபிடித்துச்
சொன்னால், 100
பாக்கு பொட்டலம்
பரிசு!
எல்லா
இராமாயணக்
காட்சிகளும்
கரையிலும்
முந்தியிலும்
பின்னப்பட்ட
தூய கணேசா
சில்க்!
முதல் இரண்டரை
மீட்டருக்கு ஒரு டிசைனும்
அடுத்த இரண்டரை
மீட்டருக்கு வேறு
டிசைனுமாக ராமதாஸ
ஷிஃபான்!



எதை எப்படி, எதை எப்படி?
பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் இருவருடைய பட்ஜெட்டுக்கும் ஏற்ற, மஞ்சள் நிறத்தில் மட்டுமே கிடைக்கும் கருணா காட்டன்!
இத்தாலியிலிருந்து நூல் இறக்குமதி செய்யப்பட்டாலும் இந்தியாவிலேயே நெய்யப்பட்ட சோனியன் கிரேப்...
வைரக் கற்கள் பதித்த, ஜோடியாக மட்டுமே கிடைக்கின்ற ஜெசி டிஷ்யூ!
கற்பனை : பிரஹ்லாத்
கார்ட்டுன் : சேகர்

# இளைத்தவனுக்கு எள்ளு!

கிச்சன் கிளினிக்

எள்ளும், கொள்ளும் இரட்டைப் பிறவிகள் என்று சொல்லலாம். இளைத்தவனுக்கு எள்ளு; கொழுத்தவனுக்குக் கொள்ளு என்று ஒரு பழமொழிகூட உண்டு. இது ஏதோ வார்த்தை ஜாலத்துக்காகச் சொல்லப்பட்டது இல்லை; இந்த இரண்டுக்கும் உரிய மருத்துவ குணங்களின் அடிப்படையில்தான் சொல்லப்பட்டிருக்கிறது.

உடம்பு இளைத்து இருந்து, நன்றாக வெயிட் போட வேண்டும் என்று நினைக்கிறவர்கள், எள் சேர்த்துக் கொண்டால் போதும்; நல்ல பலன் கிடைக்கும். அதேபோல, உடம்பு குண்டாக இருக்கிறவர்கள், குறிப்பாக, ஊளைச்சதை உடையவர்கள், கொள்ளு சேர்த்துக் கொள்ளுங்கள். அப்புறம் பாருங்களேன்! ஊளைச் சதை எல்லாம் இறுகி விடும். எடை குறையும். உடம்பே டிரிம் ஆகி விடும். ஆனால், இந்த முறையில், மந்திரத்தால், மாங்காய் வரவழைப்பது போன்ற உடனடி அற்புதத்தை எதிர்பார்க்கக் கூடாது. பலன் மெதுவாகத்தான் கிடைக்கும்.


எள்ளுக்கென்று பொதுவாக நம் தினசரி உணவில் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அப்படியெனில், எப்படி உணவில் எள் சேர்த்துக் கொள்ளுவது?

எள்ளு சாதம் தயாரித்துச் சாப்பிடலாம். உளுத்தம் பருப்பு, பெருங்காயம், மிளகாய் வற்றல், இவற்றை வறுத்து எடுத்துக்கொண்டு, தனியாக வறுத்து வைத்திருக்கும் எள்ளையும் சேர்த்து, உப்பு போட்டு, மிக்ஸியில் பொடி செய்து, எள்ளுப் பொடி சாதம் தயாரிக்கிற செய்முறை அநேக பெண்மணிகளுக்குத் தெரிந்ததுதான். உப்பு-மிளகாய்க்குப் பதிலாக, வெல்லம் சேர்த்து, இனிப்பான எள்ளுப்பொடியும் செய்யலாம். கத்தரிக்காயும், எள்ளும் சேர்த்து, பொறியல் செய்து அதை சாதத்தில் பிசைந்து சாப்பிடலாம். மாத விலக்கு ரெகுலராக வராமல் கஷ்டப்படுகிற பெண்மணிகள், இந்த கத்தரிக்காய் - எள் பொறியல் சேர்த்துப் பிசைந்த சாதம் சாப்பிட்டால், பிரச்னை தீர்ந்து பீரியட் ரெகுலராகும். தவிரவும், பொதுவாக கருப்பைக்கு இது நல்ல பலத்தைக் கொடுக்கும். கருப்பை ரொம்ப பலவீனமாக உள்ள பெண்மணிகள் என்னிடம் வைத்தியத்துக்கு வரும்பொழுது, இதை நான் சிபாரிசு செய்வது வழக்கம்.

இன்னும் சில பெண்மணிகளுக்கு, மாத விலக்கில் பிரச்னை இல்லாமல் சுழற்சி நார்மலாக இருந்தாலும், கசடுகள் முழுமையாக வெளியேறாமல் இருக்கக்கூடும். அத்தகைய பெண்மணிகளும் இங்கே குறிப்பிட்டுள்ள கத்தரிக்காய் - எள் பொறியல் சாப்பிட்டுப் பலன் அடையலாம்.

இது போன்ற பிரச்னைக்கு நேரடியாக எள் சாப்பிடலாம். எப்படி? முதல் நாள் இரவு இரண்டு ஸ்பூன் எள்ளைத் தண்ணீரில் நன்றாக ஊற வைத்து விடுங்கள். மறுநாள் காலை, அந்தத் தண்ணீரை வடிகட்டிக் குடித்து விடுங்கள். ஊறிய எள்ளை வெல்லம் அல்லது சர்க்கரையுடன் சேர்த்து, நன்றாக மென்று சாப்பிட்டு விடலாம்.

குழந்தைகளுக்கு எட்டு, பத்து வயது வரை எள் சேர்த்தால் நல்ல வளர்ச்சி ஏற்படும். அவர்களுக்குப் பொறியலாகக் கொடுப்பதைவிட, இனிப்பு எள்ளுப் பொடி, எள்ளு உருண்டை, எள்ளு பர்ஃபி போன்றவைகளைக் கொடுத்தால் விரும்பிச் சாப்பிடு





**மூலிகைமணி டாக்டர் க.வேங்கடேசன்**

**டாக்டர் க.வே. அபிராமி**

வார்கள்.

வெள்ளை எள்ளைவிட, கறுப்பு எள்ளைப் பயன்படுத்துவதே சிறந்தது.

# கொழுத்தவனுக்குக் கொள்ளு!

கிச்சனில் எள் கண்டிப்பாக இருக்கும். ஆனால், கொள்ளு என்பது நிச்சயமாக எல்லார் வீடுகளிலும் இருக்காது. சொல்லப் போனால், கொள்ளு என்பது குதிரைக்குக் கொடுக்கப்படுகிற உணவு. அது மனிதன் சாப்பிடுகிற சமாசாரமில்லை என்பதே பலருடைய எண்ணமும்கூட. ஓட்டப் பந்தயத்தில் ஜெயிக்கிறவர், கொள்ளு சட்னி சாப்பிடுபவர் என்று பத்திரிகை ஜோக்ஸ் கூட உண்டு. ஆனால், கொள்ளு என்பது ஒரு சத்தான உணவு. அது எல்லா கிச்சன்களிலும் இருக்க வேண்டும் என்று நான் அழுத்தமாகச் சொல்லுவேன்.

கொள்ளை எப்படி உணவில் சேர்த்துக் கொள்ளுவது என்ற கேள்வி உங்கள் மனத்தில் எழலாம்! முன்னே ஜோக்கில் குறிப்பிட்டது போல, கொள்ளு சட்னி செய்து, இட்லி, தோசைக்குத் தொட்டுக் கொள்ளலாம்.

கொள்ளு சுண்டல் செய்து சாப்பிடலாம். துவரம் பருப்பைப் போல, கொள்ளை வேக வைத்து, கொள்ளு ரசம் செய்து சாப்பிடலாம். கொள்ளு வேக வைத்த தண்ணீரை, தனியே சூப் போலவும் சாப்பிடலாம்.

கொள்ளுக்கு இன்னொரு பயனும் உண்டு. கொள்ளை, ஒன்றுக்குப் பாதியாக உடைத்து, பார்லியுடன் சேர்த்து, கஞ்சி போட்டுக் குடிக்கலாம். கொள்ளு சாப்பிடுவதன் மூலம், சிறுநீரகத்தில் கல் உருவாகாமல் இருக்கும். சிறுநீரகத்தில் கல் உருவாகி, ஏற்கெனவே கஷ்டப்படும் நபர்கள், கொள்ளு கஞ்சி சாப்பிடுவதன் மூலம், பிரச்னையிலிருந்து விடுதலை பெறலாம். சிறுநீரகத்தில் உருவாகும் கற்கள் கரைந்து சிறுநீர் மூலமாகவே வெளியேறி விடும்.

இரவில் அரிசி சாதம் வேண்டாம், வேறு ஏதேனும் சாப்பிடலாம் என்று நினைப்பவர்கள், இந்தக் கொள்ளு பார்லி கஞ்சியைச் சாப்பிடலாம். கொள்ளு கொஞ்சம் உஷ்ணத்தைக் கொடுக்கும் என்பதால், அதைச் சமன் செய்வதற்கு, குளிர்ச்சியான பீர்க்கங்காய் போன்ற காய்கறிகளையும், மோரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கொள்ளு, வாய்வுத் தொல்லையை ஏற்படுத்தி விடும் என்று ஒரு கருத்து பரவலாக இருக்கிறது. இது தவறானது என்பதை நான் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன். உண்மையில், கொள்ளு, உடம்பில் சேருகிற வாயுவை, குறிப்பாக, மூட்டுகளில் சேருகிற வாயுவை வெளியேற்றி விடக்கூடியது. நாம் முதலில் ஓரிரு தடவை கொள்ளு சாப்பிடுகிற போது மூட்டுகளில் உள்ள வாயு வெளியேறி, இதனால் உடல் வலி ஏற்படுவது போல இருக்கும். அதனால்தான், கொள்ளு வாய்வைக் கிளப்பி விடுகிறது என்று பலரும் நினைக்கிறார்கள். ஆனால், கொள்ளை ரெகுலராகச் சாப்பிடும் பட்சத்தில், வாய்வு முற்றிலுமாக வெளியேறி, ரிலீஃப் கொடுக்கும். ○



# பார்வை ஒன்றே போதும்

**எ**லியுமின்றி, புலியுமின்றிப் புளித்துப் போன முக்கோண காதல் கதை! இதை எந்த தைரியத்தில் இயக்குனர் தேர்ந்தெடுத்தார் என்பது, எல்லாம்வல்ல இறைவனுக்கே வெளிச்சம்.

கொல்கத்தாவிலிருந்து எம்.பி.ஏ. படிக்க சென்னை வரும் கதாநாயகி மோனாலை, உயிர் நண்பர்கள் கரனும், குணாலும் காதலிக்கிறார்கள். கரன், தனது காதலைச் சொல்ல வாயெடுக்கும்போது, அவரது கையில் ராக்கியைக் கட்டி ரக்ஷாபந்தன் கொண்டாடி விடுகிறார் மோனால். காரணம், மோனாலுக்கு, குணால் மீது காதல். இதைத் தெரிந்து கொள்ளும் கரன் மனநோயாளியாக மாறிவிட, நண்பனுக்காக தனது காதலைத் தியாகம் செய்கிறார் குணால்.



ஆனால், உனது 'பார்வை ஒன்றே போதும்' என்று உருக்கமாக டயலாக் பேசிவிட்டு ஹௌராமெயில் பிடித்து கூலாக கொல்கத்தா போய்விடுகிறார் மோனால்.

உயிர் நண்பர்களின் நெருக்கத்திற்கு என்ன காரணம் என்று தேடோ தேடென்று படம் முழுக்கத் தேடியும், தெரியவில்லை விடை.

ஒரே ஒரு ஓசி ஃபோன் கால் செய்ய கரன் வீட்டிற்கு வரும் கதாநாயகி, அடுத்த காட்சியிலிருந்து பல வருடம் பழகின மாதிரி "ஹாய்...! ஹலோ....!'' என்று கதாநாயகர்களோடு கைகுலுக்கிப் பேசத் தொடங்குவது பயங்கர நெருடல்.

கொஞ்சம் மனிதன், கொஞ்சம் மிருகம் போல, ஒரு இரண்டும் கெட்டான் கதாபாத்திரத்தில், ஓவர் ஆக்டிங் செய்யும் கரன். ஒரு ஆக்டிங் செய்யாத 'தேமே' குணால்.

அவையத்து முந்தியிருக்கும் அக்காள் சிம்ரனின் பெயர் கெடாமல் இருக்க, தங்கை மோனால், திரையில் நடிக்காமல் இருப்பதே நன்று.

தாமுவும், வையாபுரியும் காமெடி என்ற போர்வையில் அடிக்கும் அசைவ அரட்டையைக் கேட்ட பாவத்திற்காக, காதுக்குள் டெட்டால் ஊற்றி மண்டையைக் குலுக்கி சுத்தம் செய்தாக வேண்டும்.

ஆறாம் வகுப்பு மாணவன் வரிக்கொரு பிழையோடு எழுதிய 'பசுமாடு' கட்டுரை மாதிரி அரைகுறையாய்ப் படம் எடுத்திருக்கும் அறிமுக இயக்குனர் முதலில் சினிமா பாடத்தைப் படிப்பது நல்லது.

— விஷுவல்தாசன்


● ஃபெயில் ○ ஜஸ்ட் பாஸ் ○ ஆவரெஜ் ○ அபவ் ஆவரெஜ் ○ டிஸ்டிங்ஷன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)



தர்மசம்வர்த்தனி – திருவையாறு

Registered with the Registrar of Newspaper of india under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka



ஸ்ரீ V.V. ஸ்ரீதர் குருஜி அவர்கள் சாயா அதர்வண வேதம் மற்றும் க்ருஷ்ண மோஹன வித்யா இவற்றின் குருபரம்பரையில் வந்துள்ள ஆசாரியர் ஆவார். ஸ்ரீ குருஜி அவர்கள் மனித குலம் மேம்பட இதுவரையில் 46 யாகங்களை நடத்தியுள்ளார். சென்ற வருடம் (2000) காலேஷ்வரத்திலும், (1999) அஹோபிலத்திலும் நடத்தியுள்ளார்.

தொடர்வரிசையில் 47வது மற்றும் 48வது யக்ஞமாக தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அருள்மிகு சொரிமுத்து ஐயனார் திருக்கோயிலில் இவ்வாண்டு மே மாதம் 22ம் தேதி முதல் 27ம் தேதி வரை இந்த யாகம் நடத்தப்பட உள்ளது.

*சங்கல்ப விவரம்:*

| | |
|---|---|
| திருமண தடைகள் நீங்க/ரோஹ நிவாரணம் பெற | – ரூ. 1001/- |
| ஸகல விதமான க்ரஹ தோஷங்கள் மற்றும் பித்ரு தோஷங்கள் நீங்க | – ரூ. 501/- |
| குடும்ப பந்த வளர்ச்சி | – ரூ. 251 |
| அன்னதானம் – 100 நபர்களுக்கு | – ரூ. 1000/- |

இச்சீரிய பணிக்கு உடன் இருந்து உதவி புரிய தாராள சிந்தையுள்ளவர்கள் தங்களால் முடிந்த எல்லா உதவிகளையும் பணமாகவோ, பொருளாகவோ அளித்திட வேண்டுகிறோம்.

நன்கொடை அனுப்புவோர்க்கு பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். மேலும் விவரங்களுக்கு எங்களை அணுகவும்.

முகவரி:

## ஸ்ரீ ஜ்வாலா ட்ரஸ்ட்

நெ. 5, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை - **600 004.**
போன்: **4940291, 4716850, 4951214, 5261327**
**Cell: 98400 31878**

அறிவிப்பு - நன்கொடையாளர்களுக்கு U/S 80-Gன் கீழ் வருமான வரிவிலக்கு உண்டு.